

# தமிழரசு

திங்கள்இருமுறை டிச.16 1970. 35காசு



## உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

SANKAR IC CEMENT



மலிவு விலை
நகர்ப்புற வீடு

உறுதியானது, நிலையானது- ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS 269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது


ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM



மலர் 1. 1970 டிசம்பர் 16 இதழ் 12.

தமிழ்நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பா?
—அமைச்சர் திரு. செ. மாதவன் கட்டுரை

பாட்டுக்கொரு புலவன்

இரத்தம் தந்து இன்னுயிர் காப்போம்

கவிஞன் விலை குறித்தால்?

கல்விச் சிந்தனை

நன்மைகள் 1000, 1000

ஊட்டச்சத்துள்ள உணவுபெற
வீரிய ஒட்டு மக்காச்சோளம்

வாழ்க தாய்மை! வளர்க மழலைகள்!

அன்ன பூரணி

குடிசையும் கோபுரமாகும்

வெண்பாப் போட்டி

மற்றும் வழக்கமான பகுதிகளுடன்

முதல்வரின் பயணக் கட்டுரை

முகப்பில் :
சென்னைக் கடற்கரையில்
உள்ள பாட்டுக்கொரு
புலவன் பாரதியின்
உருவச் சிலை.

## வீடுகள் கட்ட உதவித் தொகை

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பூர்வகுடி மக்களுக்கும் தீப்பிடிக்காத மலிவு வீடுகள் கட்டுவதற்குக் கடனாகவும், மானியமாகவும் உதவி அளிப்பதெனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒற்றையறை கொண்ட வீட்டிற்கு ரூ. 940 கொடுக்கப்படும். இதில் ரூ. 250 கடனாகவும் எஞ்சியதொகை மானியமாகவும் கருதப்படும். நூறு மாதத் தவணைகளில் இது திரும்ப வசூலிக்கப்படும்.

இரு அறைகள் கொண்ட இல்லத்திற்கு ரூ. 1,805 வீதம் உதவி அளிக்கப்படும். இதில் ஒரு பகுதி கடனாகவும் ஒரு பகுதி மானியமாகவும் கொடுக்கப்படும்.

## ஆராய்ச்சிக் கழகம்

மரவள்ளிக் கிழங்குச் செடிகளைப் பொதுவாகப் பாதிக்கும் நோய்களைத் தடுக்க ஆலோசனை கூறச் சேலத்தில் 5 லட்ச ரூபாய் செலவில் ஜவ்வரிசி ஆராய்ச்சிக் கழகம் அமைக்கத் தமிழக அரசு தயாரென முதலமைச்சர் கூறியுள்ளார்.

## நாடோடிகள் நலத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ்ச் செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ. 75,000 அனுமதி அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரக்காடு, உத்திரமேரூர், வயலூர், ஆகிய இடங்களில் நாடோடிகளுக்காகக் குடிசைகள் கட்டிக் கொடுக்கப்படும். அவர்கள் வேளாண்மை செய்யக் கருவிகள், எருதுகள், விதைகள், உர வகைகள் வாங்க இத்தொகை பயன்படுத்தப் படும்.

## வட்டியில்லாக் கடன்

தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வட்டியில்லாக்கடன் திட்டம் ஒன்றைத் தமிழக அரசுகொண்டுவந்துள்ளது. 22 முதல் 50 வயது வரையுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தொழில் தொடங்க ரூ.500 முதல் 10,000 வரை கடன் தொகை வழங்கப்படும்.

செருப்புத் தயாரிக்குந் தொழிலுக்கு ரூ. 500; பல சரக்குக் கடை வைக்க ரூ. 1,000; மின்சார, காஸ் வெல்டிங் யூனிட் ஏற்படுத்த ரூ. 3,000; அச்சகம் ஆரம்பிக்க ரூ. 5,000; லேத் தொழிற்சாலை ஆரம்பிக்க ரூ. 10,000; கடன் தொகை தரப்படும். சொந்தப் பொறுப்பில் ரூ. 1,000 வரையும், அதற்கு மேல் வேண்டுவோருக்குச் சொத்து அடமானம் பேரிலும் கடன் தரப்படும்.

## நிலமற்றோருக்கு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் காடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 13,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விரைவில் நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## ஊழியருக்கு வரி விலக்கு

சென்னை நகரில் மட்டும் மாதம் ரூ. 300 அல்லது அதற்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் அனைவருக்கும் தொழில் வரியை ரத்து செய்யத் தமிழ் நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் ஒரு லட்சம் பேர் பயன் அடைவர்.

## சேரிக்குப் பதில் சிறந்த வீடுகள்

சென்னை நகரில் உள்ள சுமார் 600 சேரிப் பகுதிகளில் சென்னை மாநகராட்சிக்கும் தமிழ் நாடு அரசிற்கும் சொந்தமான இடங்களில் உள்ள எறத்தாழ 100 சேரிகளைச் சீரமைக்கும் வேலை உடனடியாகத் துவக்கப்படும். இதற்காகச் சுமார் ரூ. 3 கோடி செலவிடப்படும்.






## சிறுவர்க்கேற்ற திரைப்படம் தேவை !

திரைப்படங்கள் நல்ல பிரச்சார சாதனங்கள். இந்தக் கருத்தை ஏற்க மறுக்கும் சிலர் இருக்கலாம். கல்வி மற்றும் நல்ல பண்புகளைப் போதிக்கத் திரைப்படங்கள் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன.

உலகில் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய மனம் ஒன்றுதான் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

குழந்தை தான் மனிதனுக்குத் தந்தை என்று வேர்ட்ஸ்வோர்த் கூறியுள்ளார்.

பெரும்பான்மையான குழந்தைகள், வறுமையில் சிக்கிடும் ஏழைக் குழந்தைகள். அந்த நல்ல மலர்கள் வறுமையால் வாடுகின்றன.

அவர்களுக்கு எல்லா வாய்ப்பும் கிடைக்கிற சமுதாயம் அமைய வேண்டும்.

இங்கு, குழந்தைகளுக்கான திரைப் படங்கள் அதிகம் தயாரிக்கப்படவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் நம் நாட்டில் அதிகமாக உள்ளன. வால்ட் டிஸ்னி, சிறுவர்கள் படம் எடுத்தாலும் வயதானவர்களும் பார்த்து மகிழும்படி இருப்பதை நாம் அறிவோம்.

அந்த வகையில் நம் நாட்டிலும் சிறுவர்களுக்கான திரைப்படங்களைத் தயாரித்தளிக்கத் திரைப் பட அதிபர்கள் முன்வர வேண்டும்.

# 10. முசோலினி.

"என் தாய்த் திருநாடும் வையத்து நாடுகளும் குடியாட்சியைப் பெற்று உய்யும் நாள் எந்நாளோ?'' என்று ஏங்கித் தவித்தான் மாஜினி.

அவன் பிறந்த இத்தாலியில்—

''குடியரசா? அது அழுகிக் கொண்டிருக்கும் ஒரு பிணமல்லவா?'' என்று ஏளனம் புரிய ஒரு பிள்ளை பிறந்தான் 1883-ம் ஆண்டு.

அவனுடைய தந்தை ஒரு கொல்லர். அன்பு மகனே, மாறுபட்ட கருத்துப் படைத்தோரை எல்லாம் இரக்கமின்றிக் கொல்லும் தொழிலை மேற்கொண்டான் பின்னாளில்.

பட்டறையில் பலர் கூடுவர்.

உலைக்களத்தில் தணலை எழுப்பியவண்ணம் கனல்மிக்க அரசியல் கருத்துக்களை உதிர்த்துக் கொண்டிருப்பார் தந்தை. சூடேறிய இரும்பைச் சம்மட்டியால் அடித்தவாறு ஏழைகள் அடிமைகளைப் போல் வாழுகின்ற அவல நிலையையும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தையும் பற்றி அலசிக் கொண்டிருப்பார் அவர். சுற்றி நிற்போர் பலரும் கேட்டுக் கொண்டிருப்பர். உலைக்களத்தின் சூடு அவர்களின் உடலில் பாயும்.

ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருப்பான் அவர் மகன் முசோலினி. அவன் உள்ளத்திலும் புரட்சியின் அனல் வீசும். இத்தாலியை இணையற்றதோர் நாடாக மீண்டும் மாற்றிட வேண்டும் என்ற ஆவேசம் எழும்.

அருமைத் தாயகம் வறுமையில் உழல்வதைக் கண்டு நாட்டுப் பற்று உடையோருக்கு ஆவேசம்வருவது இயற்கைதான்.

ஆனால் அந்த ஆவேசம் அறநெறியில் செயல்பட வேண்டும். அது வன்முறைக்கு வித்திட்டு நாச வழி நடக்குமானால், கரையற்ற காட்டுவெள்ளம் கணக்கற்ற வயல்களை அழித்துவிட்டுக் கடலில் சென்று விழுவதைப் போலத் துயர்களை மட்டுமே விளைவித்துவிட்டு இறுதியில் நாட்டு வரலாற்றினைக் களங்கத்தில் ஆழ்த்திவிடும்.

கடமை என்பது உணர்ச்சியின் செயல்வடிவம்.

அந்த உணர்ச்சி வெள்ளம் புரண்டு வரும் கால்வாயின் இரு கரைகளே கண்ணியமும் கட்டுப்பாடும்.

தாய் நாட்டின் நிலையை உயர்த்த எண்ணுபவனுக்கு இந்த மூன்றும் இருந்தாக வேண்டும்.

ஆனால் இத்தாலியைப் புகழ் வானத்தில் ஏற்றிட எண்ணிய அந்தச் சிறுவனுக்கோ வன்முறையில் மட்டுமே நாட்டமிருந்தது.



''உலக அமைதியா? அது கோழைகளின் முகமூடி, செயலற்றவரின், செயலாற்ற அஞ்சுவோரின் ஏமாற்று வாதம்'' என்பது அவன் நம்பிக்கை.

''போர் என்பது மனித உணர்ச்சிகளின் உச்ச நிலை. அந்த உணர்ச்சியைத் தூண்டி, வாழ்வா சாவா என்னும் நிலையில் மனிதனை நிற்கவைத்து மகத்தான செயல்களை ஆற்றுவது தான் முன்னேற்றம்'' என்றான் அவன்.

கருத்து வேறுபட்ட அரசியல் வாதிகளை ஆயுதங்களைக் கொண்டு தாக்குவதோ வெடி குண்டுகளை எறிந்து கொல்லுவதோ தவறானதல்ல என்று உறுதியாகக் கருதினான் அவன்.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் பொழுது நெஞ்சில் கிளர்ந்த ஆவேசம் அவன் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டபோது மேலும் பெருகி வளர்ந்தது.

தொழிலுக்காக அண்டை நாடான சுவிட்சர்லாந்துக்குச் சென்ற சமயம், அங்கே எழுச்சி மிக்க அரசியல் சொற்பொழிவுகளை நிகழ்த்தலானான் அவன். வன்முறையின் அடிப்படையில் நாட்டின் வாட்டத்தைப் போக்கிடும் வழிகளைச் சொல்லலானான். அச்சமுற்ற அரசு அவனை வெளியேற்றியது.

இலத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், ஆங்கிலம் போன்ற பலமொழிகளையும் கற்றிருந்த முசோலினி பிரான்சுக்குச் சென்றான். அங்கும் வன்முறைக்கு வித்துக்களை ஊன்றலானான். எனவே அங்கிருந்தும் அவன் வெளியேறிட நேர்ந்தது.

தாயகம் திரும்பியதும் போர்ப்படையில் சேர்ந்தான். பயிற்சி முடிந்ததும் மீண்டும் ஆசிரியன் ஆனான். ஆனால் அரசியலில் இறங்கிச் சாதனைகள் நிகழ்த்த எண்ணிய நெஞ்சம் ஆசிரியத் தொழிலில் அமைதியின்றித் தவித்தது. அந்நாளைய இத்தாலியின் அவல வாழ்வினை மாற்றிடத் துடித்தது.

அறிவும் ஆற்றலும் அற்ற சில சந்தர்ப்பவாதிகள் இத்தாலிய அரசியலில் அன்று செல்வாக்குப் பெற்றிருந்தனர். ''எளியோர் பலரை வலியோர் சிலர் வதையே புரிகுவதா?'' என்று நம்மிடையே வாழ்ந்து மறைந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கேட்டதையே முசோலினி வேறு பாணியில் கேட்டான்.

இத்தாலியின் பெரும்பகுதி வறுமையில் வாடிக் கொண்டிருந்தது. அதனால் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. எனவே, பொதுவுடைமை இயக்கத்தின் கருத்துக்கள் வேகமாகப் பரவி வந்தன.

எந்த அளவுக்கு ஒரு நாட்டின் ஏழ்மை அதிகமாக இருக்கிற திறதோ அந்த அளவுக்குப் பொதுவுடைமைத் தத்துவம் வேகமாகப் பரவும். வறுமை மாற மாற அதன் வேகமும் குறைந்துவிடும்.

ஆஸ்திரியாவின் எல்லையைப் பற்றிய கட்டுரையொன்றினை எழுதி ஆஸ்திரிய அரசாங்கத்தின் கண்டனத்திற்கு உள்ளாகி, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட முசோலினி, தாயகம் வந்ததும் பொதுவுடைமை இயக்கத்தில் பற்றுக் கொண்டான்.

விரைவில் பொதுவுடைமைக் கட்சிக் கோபுரத்தின் கலசமானான்.

ஓட்டமான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இத்தாலிய அரசு போர் தொடுக்க முன் வந்தது. பொதுவுடைமை இயக்கம் இதனை எதிர்த்தது. 'போர்லி' என்னும் பொதுவுடைமை ஏட்டின் ஆசிரியனாக இருந்த முசோலினி போரை எதிர்க்கும் இந்த இயக்கத்தில் பெரும்பங்கு பெற்றான்.

ஆவேசம் மிக்க முசோலினியின் எழுத்துக்கள் அரசுக்கு அதிர்ச்சியைத் தந்தன. ஓராண்டுச் சிறைவாசம் பரிசாகப் பெற்றான் முசோலினி. சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் ''அவந்தி'' என்னும் ஏட்டின் ஆசிரியனானான். ஆரம்பித்த சில திங்களுக்குள் இலட்சம் பேர் ''அவந்தி''யின் சந்தாதாரர் ஆயினர்.

ஓட்டமான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இத்தாலிய நாடு புரிந்த போரை எதிர்த்த வனாயினும் முசோலினியின் இதயத்தில் போரின்மேல் கொண்ட பற்று வெளிப்படுவதற்கு ஒரு தருணம் வந்தது.

1914-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் உலகப் போர் தொடங்கியது.

பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் மூன்றும் ஓர் அணியில் திரண்டன.

ஜெர்மனி, ஆஸ்திரியா, அங்கேரி ஆகியவை எதிர் அணியில் இருந்தன.

ஜெர்மனியுடனும், ஆஸ்திரியாவுடனும் ஏற்கெனவே ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தபடி இத்தாலி ஜெர்மனியின் அணியில் சேருமென்றே எவரும் நம்பினர்.

பொதுவுடைமை இயக்கத்தினர் ''போரில் இத்தாலி சேரக்கூடாது'' என்னும் பிரச்சாரம் செய்து வந்தனர். முசோலினியோ, போரில் கலந்துகொண்டு இத்தாலி, பிரிட்டன்- பிரான்சின் பக்கம் சேரவேண்டும் என்று ஒரு எண்ணத்தைப் பரப்பிடலானான். பொதுவுடைமைக் கட்சியினர் வெகுண்டனர். கட்சியிலிருந்தும் "அவந்தி" ஏட்டின் ஆசிரியப் பீடத்தினின்றும் அவனை அகற்றினர்.

முசோலினி அயர்ந்தானில்லை.

''இத்தாலிய மக்கள்'' என்னும் பத்திரிகையைத் தொடங்கினான். தன் கொள்கையை வலியுறுத்திக் கிளர்ச்சியை ஊட்டும் கட்டுரைகள் வரையலானான். 'இத்தாலிய நாட்டின் எல்லைகள் சில ஆஸ்திரிய நாட்டின் வசம் இருக்கின்றன. ஆஸ்திரியாவுக்கு எதிர் அணியில் நிற்போருடன் ஒத்துழைத்து, போரில் வென்று அந்த எல்லைகளை மீட்டிட இதுவே நல்ல தருணம், இதனை நழுவ விடுவது ஆண்மைக்கும் அறிவுக்கும் இழுக்கு'' என்று எங்கும் எழுச்சிமிக்க உரைகள் நிகழ்த்தலானான்.

முசோலினியின் கட்சியே இறுதியில் வென்றது. 1915-ம் ஆண்டு இத்தாலி ஆஸ்திரியாவுக்கும் ஜெர்மனிக்கும் மாறாக பிரான்சின் அணியில் சேர்ந்தது.

பிரான்சின் கைக்கூலி என்றனர் சிலர் முசோலினியை.

முசோலினி தன் அந்தரங்கத்தை விளக்கத் தானே படையில் சேர்ந்தனன். சின்னாளில் உயர் பதவி பெற்ற முசோலினி ஆஸ்திரியாவுடன் நடந்த சண்டையில் படுகாயமுற்று இல்லம் திரும்பினான்.

ஆனால் தனது ஏட்டின் மூலம் ஆஸ்திரியப்படையை இத்தாலிப் படை முறியடிக்க ஒரு தூண்டுதலாக இருந்தான் முசோலினி— எனினும்—

1919-ம் ஆண்டு போர் முடிந்து வெர்சேல்ஸ் நகரில் ஒப்பந்தம் முடிந்ததும் போரில் நிகழ்ந்த வரவு-செலவுக் கணக்கைப் பார்த்த இத்தாலியர் திடுக்கிட்டனர்.

அப்பெரும்போரில் இறந்துபட்ட இத்தாலியர் எண்ணிக்கை ஆறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம். உடல் உறுப்புக்களை இழந்தோர் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம். படுகாயமடைந்தோர் பத்து இலட்சம் பேர். இவற்றிற்கு விலையாக இத்தாலிக்குக் கிடைத்ததோ ஐரா என்ற ஒரே பிரதேசந்தான்.

இத்தாலியின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. ஏமாற்றம் எரிச்சலாக உருவெடுத்தது; போரில் நசித்துப் போன பொருளாதாரத்தைப் போரின் விளைவாக எழுந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏக்கத்தோடு பார்த்தது.

எரிச்சல் எரிமலையாயிற்று; கலகங்கள், குழப்பங்கள், எங்கணும் எழுந்தன.

வேலை நிறுத்தங்களும் கடையடைப்புகளும் சங்கிலிபோல் தொடர்ந்தன.

தொழிலாளரின் எழுச்சி, பொதுவுடைமை இயக்கத்தின் போர்க் கருவியாயிற்று.

கலகங்களை அடக்கவும், நாட்டின் நிலையைச் சீர்படுத்தவும் மனமும் ஆற்றலுமின்றி அரசு இருந்தது—பெயரளவில்.

நாட்டின் நிலையைப் பயன்படுத்திப் புதிய தத்துவம் ஒன்றினைத் தயாரிக்கலானான் முசோலினி.

போர்முடிந்து வீடு திரும்பிய படைவீரர்களைக் கொண்டு பாசிசப் படை ஒன்றை உருவாக்கினான்.

''இன்னலுறும் இத்தாலி இன்ப வாழ்வு பெற இதோ ஓர் அருமருந்து'' என்று பாசிசத்தைப் பட்டிதொட்டி எங்கும் பரப்பிடலானான்.

பாசிசம் என்பது என்ன? அதன் அடிப்படைக் கொள்கைகள் என்ன?'' என்பாருக்கு முசோலினியே விடைதந்தான் 1920-ல்.

''பாசிசத்துக்கு நிலையான கொள்கை என்று எதுவும் இல்லை. இத்தாலியை எப்படியும் முன்னேற்றுவதுதான் இதன் ஒரே குறிக்கோள்'' என்பதாக ரோம் நகரத்தின் வீதியெங்கும் தீவிரப் பிரச்சாரம் செய்தான். ரோம் நகரில் இந்த இடத்தில்தான் எப்போதும் நின்று அவன் பிரச்சாரம் செய்வது வழக்கம், என்று இந்திய தூதரக நண்பர்கள் காட்டியது என் நினைவுக்கு வந்தது.

ஆவேசத்தோடு அவன் பேசிய அனல் தெறிக்கும் பேச்சுக்கள் பாசிசக் கட்சியை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டன.

1921-ல் தேர்தல் வந்தது.

முப்பது பேர்களுடன் பாராளுமன்றத்தினுள் நுழைந்தான். அங்கு புயலாக வீசினான். ஆளும் கட்சியினருக்குப் பயங்கரக் கனவாக விளங்கினான்.

அடுத்த தேர்தல் வரும்வரை காத்திருக்க முசோலினியின் மனம் இடந்தரவில்லை. மக்களாட்சி முறையில் நம்பிக்கையற்றவனாயிற்றே அவன்!

பாசிசத்தின் பணிகளை மேலும் வன்முறைச் சார்புடையதாக்கினான். கருஞ்சட்டைப் படையினர் ஆயுதங்கள் தாங்கி, ஓட்டு முறையால்பெறமுடியாத அரசை வேட்டு முறையால் பெறத் துவங்கினர்.

நகரங்களெல்லாம் மெள்ள மெள்ளப் பாசிசப் படையின் வசமாகி வந்தன.

1922-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் பாசிஸ்டு படை ரோமை நோக்கி நடை போட்டது. அதிர்ச்சியடைந்த அரசாங்கம் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது. ஆனால் முசோலினியின் எழுத்திலும் பேச்சிலும் மயங்கி இருந்த இத்தாலிய அரசர், ''முசோலினியால் மீண்டும் இத்தாலி ஒரு சாம்ராஜ்யம் ஆகக்கூடும்'' என்ற ஆசையில், இராணுவச் சட்டத்தை ரத்து செய்தார். அமைச்சரவையின் விலகலை ஏற்று, முசோலினிக்கு அழைப்பு விடுத்தார்.

முசோலினியின் அமைச்சரவை பதவி ஏற்றது. பதவி ஏற்றதும் பாராளுமன்றத்தில் முசோலினி நிகழ்த்திய முதல் பேச்சு அவனது எதிர்காலத் திட்டங்களைத் தெளிவாக்கிவிட்டது.

''நான் நினைத்தால்—இந்தப் பாராளுமன்றத்தை ஒழித்துக் கட்டமுடியும். ஆனால் உறுப்பினர்களான உங்களையெல்லாம் ஏன் இங்கே விட்டு வைத்திருக்கிறேன் என்றால், நீங்கள் கடமை உணர்வோடும், நேர்மையோடும் பணியாற்றி எனக்கு உதவுவீர்கள் என்ற காரணத்தால்........ நேற்றைய ஆட்சியை நாங்கள் ஒழித்ததைப் போல, இன்றைய ஆட்சியையும் நீங்கள் ஒழிக்க முடியும் என்று கனவு காணாதீர்கள். அந்த முயற்சியில் ஈடுபடுவோர்



மிகக் கடுமையான தண்டனைக்குள்ளாவர்.'' என்பதுதான் அந்தப் பேச்சு.

எதிரிகளை ஒழித்துக் கட்டுவதில் இட்லருக்குச் சற்று இளைத்தவன் முசோலினி.... ஒழிக்கப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்பொழுது. ஆனால் எதிரிகளை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் எவர்க்கும் சளைத்தவனல்ல.

''காளான்களைப் போலே இத்தனை கட்சிகள் ஏன் இந்த நாட்டில்? இத்தாலி உருப்பட ஒரே ஒரு கட்சி மட்டும் இருந்தால் போதுமே? இத்தாலி கட்சி என்னுடையதாக இருக்கட்டும்'' என்று அவன் நினைத்தான்.

எதிர்க்கட்சிகள் சட்டவிரோதமாக்கப்பட்டன.

பத்திரிகைச் சுதந்திரம் பறிபோயிற்று.

பாராளுமன்றம் பெயரளவில் இருந்தது.

பாசிஸ்ட் கவுன்சில் நாடாளும் உறுப்பாக இருந்தது. அதன் முழு அதிகாரம் பெற்றவனாக முசோலினி இருந்தான்.

அவனை எதிர்ப்பவர்கள் எல்லாம் பாசிஸ்ட் இயக்கத்தின் பயங்கரத் தாக்குதலுக்கு ஆளாயினர். அரசியல் படுகொலைகள், களவு, சொத்துக்கள் நாசம் போன்ற கொடுஞ்செயல்கள் நாட்டு முன்னேற்றத்தின் பெயரால் பாசிஸ்ட் இளைஞர்களால் நடத்தப்பட்டன. பாசிசத்தின் கணைகளுக்குப் பலியானோர் தவிர எஞ்சியிருந்தோரை, 'நாட்டுத் துரோகம்' என்ற பெயரால் நாடு கடத்தினான் முசோலினி.

வாழத் தகுதியற்ற மூன்று தீவுகள் முசோலினியின்அரசியல்பகைவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. மூன்றே ஆண்டுகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் முசோலினியின் எதேச்சாதிகார ஆட்சியின் கரங்களில் சிக்கி மாண்டனர்.

தகிடுதத்தங்கள் பல புரிந்து, எதிரிகளை நிர்மூலமாக்கித் தேர்தலை நடத்தினான்—அமோகமான வெற்றி பெறுவது அவனுக்கு எளிதாயிற்று.

ஆனால் முசோலினியின் தாகம் அப்பொழுதும் அடங்கவில்லை.

''என்னுடைய ஆணை வழியில் தானே இத்தாலி இயங்கிக் கொண்டிருக்கிறது? அப்படி இருக்க ஒப்புக்கு ஏன் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டான் முசோலினி. ஜனநாயக மாளிகையின் கடைசிக் கதவும் சாத்தப்பட்டுவிட்டது.

இத்தனை கொடுமைகளுக்கும் இடையேயும் சில நன்மைகளும் காண முடிந்தது முசோலினியின் ஆட்சியில்.

முசோலினி ஏற்றமிகு கூட்டுறவுச் சங்கங்களும் இயந்திரக் கலப்பைகளும் தந்து ஏர்முனைக்குப் புதியதோர் தெம்பை ஏற்றினான். கைத்தொழில்களுக்குப் புதிய விறுவிறுப்பை ஊட்டினான்.

வரிகளைக் குறைத்தான்; மருத்துவ வசதிகளைப் பெருக்கினான். வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டினான். நிர்வாகத்தில் நல்ல ஒழுங்கையும் சிக்கனத்தையும் புகுத்தினான். முதன்முறையாக இத்தாலியில், இரயில்கள் குறித்த நேரத்தில் குறித்த நிலையத்தை அடைந்தது முசோலினியின் காலத்தில்தான். இன்னும் பலப்பல நன்மைகளைப் புரிந்தான்.

இத்தனை நன்மைகளுக்குப் பிறகும் முசோலினியை வரலாறு இகழ்வதற்குக் காரணம் சனநாயக உரிமைகளை அவன் பறித்ததுதான். உரிமைகளைக் கொடுத்துவிட்டு வசதிகளை அனுபவிப்பது கோழைகளின் தொழிலல்லவா? ''கண்களை விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டி நகையாரோ?''

அஞ்சா நெஞ்சம் படைத்த சனநாயகவாதிகள் அங்கும் இங்கும் எழுப்பிய சலசலப்புகளைக்கண்டு முசோலினி அஞ்சினானில்லை. சர்வதேச சக்திக்கே சவால்விட்டவனாயிற்றே. ஒரு சில வல்லரசுகள் மட்டுமே ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதித்த சர்வதேச சங்கத்தை எதிர்த்து ஏளனம் செய்தான் முசோலினி.

இட்லரின் ஆதிக்கத்திற்கும் அவன் தலைவணங்கிடவில்லை. அயல் நாடான ஆஸ்திரியாவை ஆக்கிரமித்துக் கொள்ள முயன்றான் இட்லர். ஆனால் வலிமைமிக்க ஜெர்மன் ஏகாதிபத்தியம் தன் எல்லைக்கு அருகே வருமானால் இத்தாலியின் உரிமைக்கு ஊறுவிளையும் என்று கருதிய முசோலினி, ஆஸ்திரியா ஜெர்மன் ஆதிக்கத்திற்கு அடிபணியாத சுதந்திர நாடாக இருப்பதையே இத்தாலி விரும்புகிறது என்று முழங்கினான்.

முசோலினியுடன் கலந்து உரையாடி அவனை வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் 1934-ம் ஆண்டு இட்லர் முசோலினியை வெனிஸ்நகரில் சந்தித்தான். அங்கு நடந்த பேச்சில் முசோலினிக்கே வெற்றி கிடைத்தது. ஆஸ்திரியாவில் நாஜிகளின் ஆரவாரம் அடங்கத் தொடங்கியது.

ஆனால் 1935-ம் ஆண்டில் முசோலினி எத்தியாப்பியாவை வளைத்துக் கொண்டபொழுது பிரிட்டனும் பிரான்சும் இத்தாலியின் பகைநாடுகளாயின. அந்தப் பகையைத் தடுக்க முசோலினி இட்லருடன் கூட்டுச்சேர வேண்டியதாயிற்று.

ஆதிக்க மோகம் கண்களை மறைக்க முசோலினி 1939-ஆம் ஆண்டில் அல்பேனியாவை ஆக்கிரமித்துக் கொண்டான். அந்த வெற்றியின் எக்களிப்பில் அடுத்த ஆண்டு கிரேக்கத்தின் மீது படையெடுத்தான். ஆனால் எங்கும் கண்டிராத எதிர்ப்பினை முசோலினி அங்கு சந்திக்க வேண்டி வந்தது. இறுதியில் இட்லரின் துருப்புகளின் துணையுடன் முசோலினி கிரேக்கத்தில் புகுந்தான்.

சர்வாதிகாரி முசோலினியின் ஆதிக்கம் சரியத் தொடங்கியது. ஆப்பிரிக்காவில் அவன் பெற்ற தோல்விகள் அவற்றிற்கு அடிப்படையாக அமைந்தன. இதற்கிடையே உள்நாட்டில் முசோலினிக்கு எதிர்ப்பு வலுத்தது. பாசிஸ்ட் கவுன்சிலிலிருந்த பலர் முசோலினியைக் கவிழ்க்கச் சமயம் பார்த்திருந்தனர்.

1943-ம் ஆண்டு இத்தாலியின் ஒரு கோடியான சிசிலித்தீவில் நேச நாடுகளின் படைகள் வந்து இறங்கின. இத்தாலியின் படைகள் உலகத்து நாடுகளில் எல்லாம் நடக்க வேண்டும் என்று விரும்பினான் முசோலினி. ஆனால், உலகத்து நாடுகளின் படைகளெல்லாம் இத்தாலியில் வந்து குழுமியிருந்தன. இந்த நிலையில் ஆட்சியைக் கைப்பற்றி முசோலினியைச் சிறை வைத்தனர், பாசிஸ்ட் கவுன்சில் உறுப்பினர்கள். ஆனால் இத்தாலி இரண்டாவது உலகப் போரில் தொடர்ந்து ஈடுபடுவதை விரும்பிய இட்லர் படைகளை அனுப்பி தந்திரமாக முசோலினியை மீட்டு, முசோலினிக்குச் சற்று மதிப்பு எஞ்சியிருந்த வட இத்தாலிக்கு, அவனை அழைத்துச் சென்றான். அங்கேசென்று ஒரு பொம்மை அரசாங்கத்தினை அமைத்தான் முசோலினி. ஆனால், அந்தப் பொய்யான வாழ்க்கையும் நெடுநாள் நீடிக்கவில்லை. 1943-ம் ஆண்டில் இட்லரின் ஆதிக்கம் தகர்க்கப்பட்ட பிறகு தப்பி ஓட முயன்றான். ஆனால் சுவிட்சர்லாந்து எல்லையை நோக்கி அவன் ஓடிக்கொண்டிருந்தபொழுது இத்தாலியின் வீரர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்.

அந்தச் சர்வாதிகாரியின் உடல் மிலான் நகருக்கு எடுத்துவரப்பட்டுத் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டது. பலரின் ஏளனத்திற்கு ஆளாயிற்று.

''குடியரசு ஓர் அழுகிக் கொண்டிருக்கும் பிணமல்லவா'' என்று கேலி பேசியவனின் உடல் அங்கே அழுகிய வண்ணம் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

உலகப்படத்தில் இத்தாலியை உற்று நோக்கினால் அது ஒரு பூட்ஸ் அணிந்த காலைப்போன்று தோற்றமளிக்கும்.

அந்தக் காலடியின் கீழ் அவனியைக் கொண்டுவர வெறியாட்டம் ஆடிய ரோமாபுரியின் வீரன்தான் முசோலினி.

சில நாட்களுக்குப் பிறகு, முசோலினியின் பிணம், அவனுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது, சர்வாதிகாரிகளுக்காக எழுப்பப்பட்ட சமாதிகளில் முசோலினியின் சமாதியே இறுதியானதாக இருக்கவேண்டும் என்பதே இன்றைய இத்தாலியின் வேண்டுகோளாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டே வந்தேன்.

அதற்குள் கார் நாங்கள் தங்கியிருந்த ஓட்டலை வந்தடைந்தது. திவோலித் தோட்டத்திலிருந்து ரோம் நகர் வரை வந்த பயணத்தின்போது என் மனத்திரையில் எழுந்த இத்தாலியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய எண்ண அலைகளும் ஓய்ந்தன. மறுநாள் சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிக் நகர் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிய எண்ணத்துடன் ஓய்வெடுக்கச் சென்றேன்.

(தொடரும்)

# தமிழ் நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பா?

தாய்நாட்டில் தாய்மொழிக்காகப் போராடும் விந்தை நிலை உலகிலேயே தமிழனுக்குத்தான் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்.

தமிழ் மொழியில் பேசுவது, எழுதுவது என்பதைத் தாழ்வாகக் கருதிய காலம்—எல்லாம் தமிழ், எங்கும் தமிழ், இன்பத் தமிழ் எங்கள் உயிர் என முழக்கமிடுபவர்கள் மக்கள் வெள்ளத்தில் மிதந்து சென்றகாலம்—தாய்மொழி தமிழ்மொழி வேண்டும்; ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் ''உலகில் அறிவியல் கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டாமா? தமிழில் அறிவியல் கருத்துக்களை, விஞ்ஞான நுட்பங்களைக் கொணர்வது இயலுமா?'' என்று ஐயவினா எழுப்பித் தமிழ் நாட்டில் குட்டையைக் குழப்பி வரும் காலம்—இப்படிப் பல்வேறுபட்ட காலக் கட்டங்கள் கருத்துக் குழப்பங்களைத் தமிழர் உள்ளத்தில் தோன்றச் செய்து வருவதைத் தமிழ்நாட்டில் கண்டு வருகின்றோம்.

அந்நியர் ஆட்சி விரட்டப்பட்டு சுதந்திர நாட்டில் கடந்த இருபத்திரண்டு ஆண்டுக் காலமாக மொழிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணவில்லை. பயிற்சி மொழி, படிக்கின்ற மொழிகள் பற்றி இன்னும் முடிந்த முடிவில்லை. இதன் விளைவு இன்றைய இளம் தலைமுறையினர் அல்லலுக்கு ஆளாகின்றனர். எதிர்காலச் சமுதாயம் எப்படி உருவாகவேண்டும் என்பதே முடிவாகவில்லை.

இத்தகைய சிந்தனைகள் உள்ளத்தில் வேதனை மிகச் செய்கின்றன. வேதனை உள்ளத்தோடு நொந்து வாடும் நம்மை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் சொல்லம்பு கொண்டுதாக்கும் சிலர் தமிழ் நாட்டிலேயே உள்ளனர்.

சில நாட்களுக்கு முன் ஒரு ஆங்கில நாளிதழின் தலையங்கத்தில் எழுதப்பட்ட கருத்துக்கள் இத்தன்மையினவாக இருந்தன. நான் கூறிய சில கருத்துக்களை அடிப்படையாக வைத்து, காழ்ப்புக் கக்கப்பட்டிருக்கின்றது. காழ்ப்புணர்ச்சி மிகுதியில் உண்மை மறைக்கப்பட்டுவிட்டது. சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையைக்கூட அறியமுயலாமல் ஆத்திரத்தில் நமக்கு அறிவூட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மத்திய கல்விக் கூடங்களின் தேவை பற்றி ஆராயத் தொடங்கி, தமிழ் பயிற்சிமொழியாவதைக் குறை கூறி, குறுகிய எண்ணமுடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டி, அகில பாரத உபதேசம் செய்து, விவரம் தெரியாதவராக்கி முடித்திருக்கிறார்கள்.



## தொழிலமைச்சர்
## திரு. செ. மாதவன்

நான் சில கருத்துக்கள் கூறிப் பல நாட்களுக்குப் பின் இப்படிப்பட்ட விமர்சனம் திடீரென்று வருவதே வியப்பைத்தந்தது. விமர்சனத்தில் ஆத்திர உணர்ச்சி மிகுந்திருந்தது கவலையைத் தந்தது. ஆனால் விமர்சித்தவர்கள் பற்றிய நினைவு வந்தவுடன், எதிர்பார்க்க வேண்டிய கருத்துக்கள் தாம் என அமைதி அடைந்தேன்.

மத்திய அரசு நடத்தும் பள்ளிகளைப்பற்றி, நடத்த எண்ணும் கல்லூரிகளைப்பற்றி நான் தெரிவித்த கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டுள்ளன. மத்தியக் கல்லூரிகள் எப்படித்தோன்றப் போகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்குள்ளாக எதிர்ப்பேன் என்பதா, என வினா எழுப்பி, அமைதியோடு ஆலோசிக்க அறிவுரை தரப்பட்டுள்ளது. தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டு, ஏன் வேண்டும் மத்திய கல்லூரிகள் என்பதற்கு விளக்கமும் தரப்பட்டுள்ளது வேடிக்கையாக இருக்கின்றது.

இந்த விளக்கம் எங்களுக்குத் தெரிந்திருந்த காரணத்தினுலே தான் இந்தக் கொள்கையின் அடிப்படையையே நாங்கள் எதிர்த்து வருகிறது என்பதை ஆத்திரத்தில் மறந்து விட்டார் கள். அந்தஆத்திரத்தில் ''மாத வன் தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகத் திணித்து வருகிருர்'' என்று எழுதப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் அனைத்திலும் தமிழ் பயிற்சி மொழியாக ஆக்கப்படவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்றைக்கு அமுல் நடத்தப்படும் பயிற்சி மொழிக் கொள்கை முந்திய ஆட்சிக் காலத்திலிருந்தே அரசுக் கல் லூரிகளில் இருந்து வருவதை யும், தமிழகச் சட்டமன்றத்தில் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் ஐந்து ஆண்டுக்காலத்தில் செயல் படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள்ளதையும் ஆங்கில மோகத் தில் மறந்து விட்டார்கள். நான் கல்வித் துறைப் பொறுப்பேற்ற நாளில் எந்தவிதமான புதிய கொள்கையும் உருவாகவில்லை. எனினும், ஏதோ தனிப்பட்ட முறையில் நான் புகுத்துவதாகக் கற்பனை செய்து விட்டார்கள். தமிழ் நாட்டில் இப்படியும் சிலர்!

பல்கலைக் கழக மானியக் குழு பற்றி என்ன கூறினேன் என்று அறியாமலேயே அறியாமைப் பட்டம் சூட்டிவிட்டார்கள். ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உடை, ஒரே உணவு என்று கூக்குரலிடும் சில வெறி யர்களின் சாயல் விமர்சனத்தில் தெரிகின்றது. தாய் நாட்டில் தாய் மொழிக்கு எதிர்ப்பா என்ற வேதனைதான்.

அந்த நாளிதழின் தாக் குதல் மூலம் பயிற்சிமொழிக் கொள்கை பற்றியும், கல்வித் துறையில் மத்திய மாநில அரசு களின் அதிகார வரம்புகள் பற்றி யும் தமிழ் மக்களைச் சிந்திக்க வைக்க ஒரு வாய்ப்புக் கிடைத்த தில் பெருமகிழ்ச்சி.

நமது நாட்டில் பயிற்சிமொழி விவாதத்திற்குரிய ஒரு பிரச்சி னையாக ஆகிவிட்டதற்குக் கார ணம், இடைக்காலத்தில் வெள் ளையர் ஆட்சி ஏற்பட்டிருந்தது தான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆங்கிலம் கல்வித் துறையில் ஆக்கிரமிக்க நேரிட்ட சரித்திர நிகழ்ச்சி இப்போது நமக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

எத்தனை மொழிகள் கற்க வேண்டும் என்பதைத் தேவை யையும், அவசியத்தையும் பொறுத்துத் தீர்மானிக்க வேண் டும். அரசியல் ஆதிக்க உணர்வு களின் அடிப்படையில் தீர்மானிக் கக் கூடாது. இதன் காரணமா கத்தான் மும்மொழித் திட் டத்தை நாம் நிராகரித்தது.

அரசியல் விருப்பு வெறுப்புக் களுக்கு ஆட்படாது, தமிழரின் நன்மை கருதி, நமது அரசு இரு மொழித் திட்டத்தை நாட்டுக்குத் தந்தது. அந்த அடிப்படையில் பயிற்சி மொழித் திட்டத்தை யும் அணுக வேண்டும். முன்னரே குறிப்பிட்டபடி ஆங்கில ஆதிக் கம் நமது நாட்டில் ஏற்பட்டிருக் காவிட்டால் இந்தப் பிரச்சி னைக்கே இடமிருந்திருக்காது.




கற்போர் தங்களுடைய தாய் மொழியில்தான் கல்விப் பயிற்சி பெற வேண்டும் என்பதில் உல கில் எந்தக் கல்வி நிபுணரும் வேறுபட்ட கருத்துத் தெரிவித்த தில்லை. ஆங்கிலத்திற்காக முனைந்து வாதாடும் அறிஞர் களும் இதற்கு மாறுபட்ட கருத்தை இதுவரை தெரிவிக்க வில்லை. சரித்திர நிகழ்ச்சி தந்து விட்ட ஆங்கில மொழி இருக்கட் டும் என்று வாதாடுகின்ருர்களே தவிர, தாய்மொழியில்—இப் போதோ எப்போதோ—கல்விப் பயிற்சி அமைய வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிக் கருத்துத் தெரிவிப்பதில்லை. தாய் மொழியில் தான்—தமிழ் மொழி யில் தான் எல்லா மட்டங்களிலும் இன்ருேநாளையோ கல்விப் பயிற்சி தரவேண்டும் என்பது நமது உறுதியான கொள்கையாகும்.

இது மொழிப் பற்றின் அடிப் படையிலோ அல்லது சிலர் கற் பிப்பதுபோல் மொழி வெறியின் அடிப்படையிலோ அமைந்த கருத்தல்ல. கல்வி நிபுணர் கோத் தாரி அவர்கள் தலைமையில் இந் தியத் துணைக் கண்டத்தின் கல்வி நிபுணர்களையும் இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களையும் கொண்டு மத்திய அரசு நிறு விய கல்விக் குழுவின் அறிக்கை நம் கொள்கைக்கு ஆதரவாக அமைந்துள்ளது. அறிஞர் குழு வின் அறிவுரைகளைக் காண் போம் :—

''மாணவர்கள் சுலபமாக அறிவு பெறுவதற்குப் பயிற்சி மொழி வகை செய்ய வேண்டு மானல், தாய்மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்'' என்றும், ''பாட மொழியாக அயல் மொழி இருக் குமானல், மனப்பாடம் செய்வ திலேயே மாணவர்கள் கவனம் செல்லுமே ஒழிய, கருத்தைக் கிர கிப்பதில் செல்லாது'' என்றும் அறிஞர் குழு அறிவித்து உள்ளது.

உலகக் கல்வி நிபுணர்களே இவ்வளவு தெளிவாக ஒப்புக் கொண்ட பிறகு பயிற்சிமொழி பற்றி ஐயங்களை எழுப்பிச் சமு தாயத்தில், குறிப்பாக மாணவர் கள் உள்ளத்தில் குழப்பம் செய்ய முயல்வது நாட்டின் நலனுக்கு எதிரானது என்றே கருதுகின் றேன். இத்தகைய குற்றம் செய் பவர்களைச் சமுதாயம் கண்டிக்கத் தவறினல் எதிர்காலத் தமிழர் சமுதாயத்திற்குப் பெரும் தீங்கு விளையும் என நம்புகிறேன். அறி ஞர்கள் தந்த முடிந்த முடிவுக்குப் பின்னும் ஐயங்களை எழுப்புவது அறிஞர்களுக்கு அழகாமோ?

பிறிதொரு சாரார் தாய்மொழி தான் பயிற்சி மொழியாக அமைய வேண்டும் என்பதை முழுக்கவும் ஒப்புக்கொண்டு, ஆனல் இம் மாற்றம் ஏற்படும் போது மாண வர்களைப் பாதிக்காது, கல்வித் தரம் குன்றி விடாது பார்த்துக் கொள்ள வேண்டும் என விரும் பும் நல்லறிஞர்கள். இவர்களு டைய கருத்துக்களை ஏற்று மதித்து நடக்கத் தமிழக அரசு என்றைக்கும் தயாராக இருக்கின் றது.


ஆனல், இத்தகைய கருத்துடை யோர் இத்திட்டம் நிறைவேறு வதற்கு உருவான வழிமுறைகளை இதுவரை தந்திலர். மெதுவாகப் போகவேண்டும், அவசரம்கூடாது திணிக்கக் கூடாது என்று எச்சரிக்

கைகள் தருவதோடு நின்றுவிடுகின்றார்கள். உருப்படியாக இவர்கள் சொல்வதெல்லாம் பயிற்சி மொழி பற்றி முடிவு செய்வதை மாணவர்கள் பெற்றோர்கள் விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள் என்பதுதான். இதன் விளைவாகத் திட்டமிட்ட முயற்சி இல்லாமல் குழப்பம்தான் மிஞ்சும் என்பது திண்ணம். மாணவர்களை வழிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் விருப்பம் என்று கூறி, கல்லூரிகளில் நிலையற்ற தன்மையை உருவாக்கலாமா?

இதுகுறித்தும் கோத்தாரி கல்விக் குழு கூறும் கருத்துக்கள் நோக்கற்பாலன. "பயிற்சி மொழி மாற்றத்தில் நீண்ட காலத் தாமதம் ஏற்பட்டால், இந்தப் பிரச்னை மேலும் சிக்கலானதாகவும், சிரமமானதாகவும் ஆகி விடும்" என்று அக்குழு கூறியிருக்கிறது. இதை உணர்ந்த காரணத்தால்தான் தமிழக அரசு முதற் கட்டமாக அரசுக் கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழ்மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருகின்றது.

தமிழ் நாட்டில் தனியார் நடத்தும் கல்லூரிகள் 94. அரசுக் கல்லூரிகள் 39. தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழி விரும்பும் மாணவர்களுக்குத் தரப்படுகின்றது. அரசுக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் படிப்படியாகத் தமிழ் பயிற்சிமொழி வகுப்புக்களைத் தோற்றுவித்து வருகின்றோம். இப்படிச் செய்வது "கட்டாயத் திணிப்பு" என்று அலறுபவர்கள், இதைவிட வேறு சிறந்த திட்டம் தமிழைப் பயிற்சி மொழியாக்கத் தந்தார்களா என்றால், இல்லை. குற்றம் சொல்லித் திட்டத்தைக் குலைக்க விரும்புகிறார்களே தவிர, இவர்களுக்கு நல்லெண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறும்போது, இடைக்காலத்தில் பல இடர்கள் விளையலாம்-பல பிரச்சினைகள் உருவாகலாம்-பலசிக்கல்கள் ஏற்படலாம், மறுக்கவில்லை. இவைகளுக்குத் திட்டமிட்டு, வழிமுறைகள் கண்டாக வேண்டும். உதாரணமாகத் தமிழில் பாடநூல்கள் வெளி வர வேண்டும். தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக வேண்டும். இவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற முடியும்.




இதைத்தான் கோத்தாரி கல்விக் குழு அறிக்கை குறிப்பிடுகின்றது. இந்த அடிப்படையில் தமிழில் பாட நூல்கள் தோன்ற, தாய் மொழியில் எல்லா மாவட்டங்களிலும் பயிற்சியளிக்கத் திட்டங்கள் தருபவர்கள் வழி நின்று நடக்கத் தமிழக அரசு காத்து நிற்கின்றது. ஆக்க பூர்வமான ஆலோசனைகள் தராது, குறைகள் கூறித் தமிழ் ஆக்கம் பெறுவதைத் தடுத்துவிட எண்ணுவது மடமையாகும்

தமிழக அரசு புதிய பாட நூல்கள் தமிழில் வெளிவர, "புத்தகக் கழகம்" ஒன்று ஏற்பாடு செய்துள்ளது. மொழி பெயர்ப்பாக இல்லாது மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்கள் வெளிவர வேண்டும். மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக மாநிலத்தில் உள்ள கல்லூரி ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் தமிழில் கற்பிப்பதற்கான பயிற்சி நடைபெறுகின்றது. பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஒன்று கூடி விவாதித்துக் குறிப்புகளைத் தமிழில் தொகுத்துத் தமிழ் பயிற்சி மொழி வகுப்புகளைச் சிறப்புடன் நடத்தத் துணை செய்து வருகிறார்கள்.

இத்தனை முன்னேற்பாடுகளும் செய்து வருகின்றோம். இதற்குத் துணை நிற்காவண்ணம் தொல்லை தருவோர்கள் தமிழகத்தில் இருப்பது வெட்கப்படவேண்டிய நிலையாகும். இத் திட்டத்திலுள்ள சிரமங்களையும் உணர்ந்து ஊக்கம் தரும் கருத்துக்கள் மேற்சொன்ன கல்விக் குழுவின் அறிக்கையில் இருப்பதைக் காணலாம். இந்த உறுதியோடுதான் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் நிறைவேற்றப்படுகின்றது.




கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள் பயன்தரும் ஆலோசனைகளைத் தரவேண்டும். தமிழ் அறிஞர்கள் பிறமொழி அறிவியல் நூல்களைத் தமிழ் மொழியில் கொணர முன்வர வேண்டும். மாணவர் உலகம் குழப்ப வாதிகளின் கூற்றுக்களைப் புறக்கணித்துப் புத்துலகம் காணப் புறப்படுதல் வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியல் வண்ணம் பூசிக் கொள்கைக்கு மாசு ஏற்பட வழி வகுத்துவிடக் கூடாது. எதிர் காலத் தமிழ் உலகத்தின் நன்மையை மட்டும் கருதி நமது பயிற்சி மொழித் திட்டங்கள் அமைந்திடல் வேண்டும்.

தமிழில் பயிற்சி பெற்றோர்க்கு அரசு அலுவலகங்களில் அரசுத் துறை நிறுவனங்களில் வேலைக்கு முன்னுரிமை தரும் திட்டம் உருவாகி வருகின்றது. இடையிலே எதிர்ப்படும் இடுக்கண்கள் எதிர் காலத் தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகத் தரப்படும் விலை என்று கருதி முனைந்து செயல்பட வேண்டும்.

தாய்மொழியின் இன்றியமையாமை பற்றி விரிவாகக் கூறினும், ஆங்கிலத்தின் அவசியத்தைச் சிறிதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. கல்வித் துறையில் ஆங்கில மொழிப் பயிற்சிக்குச் சிறப்பான இடம் கொடுக்க வேண்டும். தமிழக அரசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடம் தொடங்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்கஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆங்கில அறிவு மாணவர்களுக்கு அதிக அளவு ஊட்ட, மேலும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஆங்கிலம் பயிற்சிமொழியாக இருந்தால்தான் ஆங்கில அறிவு மிகுதியாகப் பெற முடியும் என்பதை ஏற்க முடியாது. மாணவர்களுக்கு ஆங்கில அறிவு மிகுதியாகக் கிடைக்க வேறு ஆலோசனைகள் கூறினாலும் அரசு ஏற்றுச் செயல்படுத்தும்.

தமிழில் பயிற்சி பெற்றோர் வெளி மாநிலங்களுக்கு—வெளி நாடுகளுக்கு வேலைக்குச் செல்ல முடியாது என்ற வாதம் மாணவர்களையும் மயங்கச் செய்கின்றது.

தமிழகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்

கொண்டு விடுவதாலேயே இந்தப் பிரச்சினை தீர்ந்து விடாது. வெளி நாடுகளுக்குச் செல்வதைப் பொறுத்தும் சிந்திக்க வேண்டும். கற்ற மாநிலங்களில், வெளிநாடு மள் செல்ல விரும்புவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆங்கில அறிவு மிகுதியாகத் தொடக்கப் பள்ளியிலிருந்தே தருவதன் மூலமும், இத்தகைய விருப்பமும் அதற்கேற்ற தகுதியும் உள்ளவர்களுக்கு மேலும் ஆங்கிலத்தில் தனிப் பயிற்சி கொடுப்பதன் மூலமும்தான் இதற்குப்பரிகாரம் காண முடியும்.

திட்டமிட்டுச் செயல்பட்டுத் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் ஆங்கில மொழியில் மாணவர்கள் சிறந்த அறிவு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இரு மொழித் திட்டம்தான் தமிழர் சமுதாயத்துக்குப் பயன்தரும்.

அரசியல் சட்டப்படி கல்வித் துறை மாநில அரசின் பொறுப்பு என எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஆனால். இந்திய நாடு முழுமைக்கும் சீரான கொள்கை வகுக்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில் மத்திய அரசின் கல்விக் கொள்கைகளை, மொழிக் கொள்கைகளை மாநிலங்களில் புகுத்தும் முயற்சி அனுமதிக்கப்படலாமா? மாநிலங்கள் கூடி கல்வி வளர்ச்சி பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்வது, நல்ல கருத்துக்களை இந்திய நாடு முழுதும் செயல்படுத்துவது, இதற்கு மத்திய அரசு துணை நிற்பது— இவையெல்லாம் வரவேற்கத்தக்கவைகளே.

தமிழக அரசின் கல்வித் திட்டத்தில் சிறுபான்மையோர் நன்மைக்காகப் பிற மொழிகள் கற்பதற்கும், பிற மொழிகளைப் பயிற்சி மொழிகளாக் கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, இந்தி, குஜராத்தி, மராட்டி, ஆங்கில மொழிகளைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் இப்போதும் தமிழ்நாட்டில் இயங்கி வருவது இதற்குச் சான்றாகும். ஆனால், இவைகள் எல்லாம் மாநிலக் கல்வித் துறை றையின்கீழ் செயல்படுகின்றன.

மத்தியஊழியர்கள் வசதிக்காக பிற மொழிகளைப் பயிற்சிமொழிகளாகக் கொண்ட தனிப் பள்ளிகளை நடத்த விரும்பினாலும் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அப்பள்ளிகள் மாநில அரசின் கல்வித் துறையின்கீழ் இயங்க வேண்டும். மத்திய அரசின் விருப்பம் இதுவல்ல. அவர்களது கல்விக் கொள்கைகளை மாநிலங்களில் திணிப்பதுதான் மத்திய அரசின் விருப்பமாகும். இதற்கு நாமும் துணை போக வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். எப்படி இயலும்?

இப்போது மத்திய அரசுப் பள்ளிகள் எப்படி இயங்குகின்றன எனப் பார்ப்போம். மத்திய அரசின் கல்வி அமைச்சகம் தனது மேற்பார்வையில் மத்திய அரசுப் பள்ளிகளை நடத்துகிறது. மத்தியப் பள்ளிகளின் நிர்வாகக் குழுவிற்குத் தலைவர் மத்திய அரசின் துணைக் கல்வி அமைச்சர். மத்தியப் பள்ளிகளில் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படும் மொழிகள் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம். மத்திய அரசுஊழியர்களின் தாய்மொழி தமிழாகவோ, தெலுங்காகவோ, வங்காளியாகவோ இருக்கலாம். ஆனால், அந்தத் தாய்மொழி பயிலுவதற்கு மத்தியப் பள்ளிகளில் வாய்ப்பு கிடையாது! எனினும், இந்தியையும், சமஸ்கிருதத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும்!

இவ்வாறு தாய்மொழியைப் புறக்கணிப்பதுதான் நல்ல கல்வி முறையா? கல்வி நிபுணர் குழுவினர் தாய்மொழியில் கல்வி பற்றிக் கூறியுள்ள பரிந்துரைக்கு மாறான செயலன்றோ இது!

கல்வி மான்யக் குழுவின் செயல் திட்டங்களையும் ஆராய்வது நல்லது. பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவியளிப்பதற்கென்றும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கென்றும் நிறுவப்பட்ட கல்வி மான்யக்குழு நேரடியாகப் பல்கலைக் கழகங்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டு செயல்படுகிறது. நியாயமாகவும், சட்டப்படியும் மாநில அரசுகளின் வழியாகத்தான் அந்த நிதி உதவி அளிக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறுவதில்லை. ஏன்? பல்கலைக் கழகத்தின் கல்விக் கொள்கைகளையும் திட்டங்களையும் மத்திய அரசு தன் விருப்பம் போல் அமைப்பதற்குக் கல்வி மான்யக் குழுவைக் கருவியாகப் பயன்படுத்துகிறது.

நாடாளுமன்றத்தின் 1956-ம் ஆண்டு பல்கலைக்கழக மான்யக் குழுச் சட்டத்தின்கீழ் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டடது. அந்தச் சட்டத்தின்-12 வது பிரிவுப்படி பல்கலைக் கழகங்களின் கல்வி வளர்ச்சி ஒருங்கிணைந்து வளர்ச்சி பெற்றிட, கல்வித்தரம் சீர்பட்டு வளர்ந்திட இந்த அமைப்பு பணியாற்ற வேண்டும். இதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை.

ஆனால், இவைகளைப் பெறுவது எப்படி? நாட்டில் பல பகுதிகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களைக்கொண்டு ஏற்றுக்கொள்ளத்தக்க கல்விக் கொள்கைகளை உருவாக்கி நம்மைப் பின்பற்றச் சொன்னால் அதில் பொருளுண்டு. பணத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கு ஒரு அமைப்பா? அதன் மூலம் கல்விக் கொள்கைகளை உருவாக்குவதா? இந்தக் குழுவின் பரிவுரைகள் செயல்படுத்தப்படாவிட்டால் 14-வது பிரிவுப்படி மான்யங்கள் நிறுத்தப்படும். இதற்கு என்ன பொருள்? மான்யக் குழு தன்னாட்சி உரிமை" பெற்ற அமைப்பு என்று வாதிடலாம். ஆனால் 20-வது பிரிவுப்படி மத்திய அரசு ஆணையிடும் கொள்கைகளைத்தான் அடிப்படைக் கொள்கைகளாக ஏற்று மான்யக்குழு செயல்பட்டாக வேண்டும். ஆகவேதான், இந்த அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்கின்றோம்.

பண உதவியைப் பொறுத்த வரை பல துறைகளுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதைப் போலப் பல்கலைக் கழகக் கல்வி வளர்ச்சிக்கும் மாநிலங்கள் மூலம் திட்டங்களை நிறைவேற்றப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். நாட்டின் பிற பகுதிகளோடு பிற நாடுகளோடு தொடர்பும் வேண்டும். அதற்கு ஆங்கில மொழி அறிவும் வேண்டும். தாய்மொழியில் பயின்று, சிந்தித்து, ஆற்றல் பெருகி, அறிவியல் கருத்துக்களை அளவற்றுப் பெற்று, உலகம்போற்றும் பேரறிஞர்கள் நம் தாயகத்தில் தோன்றிடவும் செய்தல் வேண்டும். தேவைக்கேற்ற மொழிகளையும் கற்க வேண்டும். ஆதிக்கம் செலுத்த வரும் ஆதிக்க மொழியை எதிர்த்துத் தமிழகத்தின் தன்மானமும் காத்திட வேண்டும்.

# பாட்டுக்கொரு புலவன்



கலைஞர் மு.கருணாநிதி

தேர்ச் சாரதிபோல் தலைப் பாகை—
திசை நோக்கும் பெரும் விழிகள்
திருகிவிட்ட கூர் மீசை—
தேன்தமிழ்பால் தணியாத பேராசை!

ஏட்டுக்குள்
வீட்டுக்குள்—தமிழ்
நாட்டுக்குள்
இதயக் கூட்டுக்குள்
இடம்பெற்ற பாட்டுக்கொரு புலவன்!

பாவாணன்! பாரதிரக் கவிதைச் சாட்டை கொண்டு;
பரங்கியரைப் பழமைகளைத் தாக்கித் தகர்த்திட்ட
பத்தொன்பதாம் சித்தன்—பாரதியார்!
அவர் நினைவுநாள் இன்று! ஆம்; மகாகவி மறைந்தநாள்!
இன்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பு பிறந்து, நாற்பதுக்கும்
ஓராண்டு குறைவாக வாழ்ந்து, நாட்டு மக்களின் நாடிநரம் பெல்லாம்
உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்றுவிட்டவர் பாரதியார்.

ஆண்டுக்கொரு முறை என்றல்ல; ஆடுகின்ற மயிலைக் காணும்போதும்—கூவுகின்றக் குயிலை ரசிக்கும்போதும்—ஒடுகின்ற மழலையைப் பார்க்கும் போதும்—பாரதியார் நினைவு வந்தே தீரும். குயில் பாட்டும், குழந்தைப் பாட்டும் மறக்கக் கூடியவைகளா!

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!

ஆகா—விளையும் பயிருக்கு அவர் இடுகின்ற வீர உரம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா? நீல வானமும், நெடிய கடலும் அவர் நினைவை ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்:
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்."

சின்னஞ் சிறு மனப்பறவை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பறக்கிறது? எவ்வளவு தெம்பான வார்த்தைகள் எழில் கூட்டிக்கொண்டு மனப் பறவையின் உற்சாகப் பயணத்திற்கு ஊக்கமளிக்கின்றன!

தாயின் மணிக்கொடி பறக்கும் போதெல்லாம் அந்தத் தமிழ்க் கவி வேந்தனின் எழுச்சி கீதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

"தாயின் மணிக்கொடி பாரீர்—இதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்."

காக்கைச் சிறகும்—வெள்ளைப் பூனையும் அவர் தம் கவிதை வரிகளை சுருக்கென்று நம் நெஞ்சில் பாய்ச்சும்!

காணி நிலமும்—கரும்புத் தோட்டமும் அவர் பாடலை எதிர் நிறுத்தி நம்மைப் பாடாய்ப் படுத்தும்!

'விடுதலை' என்ற நான்கு எழுத்துக்களுக்கு, எழுத்துக்கு எழுத்து எரிமலைக் கனலை உருவாக்கி வடித்தவர் பாரதியார்.

எங்கோ நடந்த புரட்சியின் முடிவை இங்கே எழுதிக் காட்டி, தோள் தட்டி நிற்கும் விடுதலை மறவர்க்கு அவர் தந்துள்ள போர்க்கருவி எத்துணை வீறு கொண்ட பாடலாக எழுகின்றது!



“இம் என்றால் சிறை வாசம், ஏனென்றால் வனவாசம், இவ்வா றங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
முழுமையிலும் காத்திடுதல் விழியாலே
நோக்கினாள், முடிந்தான் காலன்.”

கொடியவர்களின் முடிவுக்கு மகிழ்ந்து, பாரதி காட்டிய மங்கல முரசமென்போம் இந்தப் பாடலை !

“ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் தேரீரோ ?

எனச் சங்கநாதம் செய்து, செத்த பிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருக்கும் பித்த மனிதரைச் சாடியவர் பாரதி!

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரைக் கடிந்துரைக்கும் கர்மவீரர்.

சிந்தையிற் கள் விரும்பிச் ‘சிவசிவ’ என்பவரை சீறிச்சாடும் செந்தீ அவர்!

‘‘இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவோர்—
இயந்திரங்கள் வகுத்திடுவோர்—
கரும்பைச் சாறு பிழிந்திடுவோர்—
கடலில் மூழ்கி முத்தெடுப்போர்—
மண் எடுத்துக் குடங்கள் செய்திடுவோர்—
உண்ணைக் காய் கனி தந்திடுவோர்—
உழுது நன்செய் பயிரிடுவோர்—
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவோர்—
இழையை நூற்று நல்லாடை செய்திடுவோர்—
பாட்டும் செய்யுளும் கோத்திடுவோர்—
நாட்டிலே அறம் கூட்டிடுவோர்’’—

—இவர்கள் அனைவரையும் தெய்வங்கள் என்றே தொழுதவர் பாரதியார்.

பழம்புலவர்கள் எல்லாம் சொர்க்கம் செல்ல வரம் கேட்பர்; பாரதியோ சொர்க்கத்தையே இந்தப் புவிமீது கொண்டுவந்து வைக்கும் வரம் பெற்றார்.

ஏழைகள் வாழ்வே அவருக்குச் சொர்க்கம்! இந்தச் சூழ் நிலையில் எழுகின்ற கவிஞர்கள்தான் மக்கள் கவிஞர்களாகிறார்கள். அவர்கள் கடல் முத்தைக் கண்டவுடன் அதனை உழைக்கின்ற ஏழைகளின் வியர்வை முத்துடன் ஒப்பிடவே முந்தி நிற்பர்! அவர்கள், கோவைக் கனியைப் பாவையின் இதழுக்கு ஒப்பிடுவதைவிடக் கொள்கைக்கெனக் குமுறி நிற்கும் வீரனின் சிவந்த விழிகளுக்கு ஒப்பிடுவதையே சிறந்ததெனக் கருதுவர்! ஆண்டவனைப் பற்றி ஆயிரம் பாடல் எழுதுவதும், ஒரு நாட்டின் அடிமைத்தளை முறிவதற்காக ஒரு பாட்டு எழுதுவதும் ஒன்றே தான் என எண்ணிச் செயல்படுவர் மக்கள் கவிஞர்!

அவர்களின் முதல்வரே, பாரதியார்!

‘‘இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்’’

எனும் குறள் படித்தார்.

‘‘தனியொருவனுக் குணவில்லையெனில்—இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்’’

என்ற குரல் கொடுத்தார்.

‘‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்’’

என்கின்ற குறளுக்கு ;

“தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்’’

என்று எளிய நடையில் விளக்கம் தந்தார்.

“நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்’’

எனக் கூறி அவ்வண்ணம் வாழ்ந்து காட்டியவர் அவர்.

உரைகூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில் பழந்தமிழ்நூல் படித்திட முடியாதென்ற நிலையிலிருந்தபோது, பசுமரத்தாணிபோல் நெஞ்சத்தில், பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி, அவ்விதமே தமிழகத்தைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. கத்தியை உச்சி மட்டும் தூக்கிக் கர்ச்சனை புரியும் படைத் தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம் செல்லும் வீரர்களைப் போல்—பாரதியின் கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப் போகும் பான்மையிலே பரங்கியரை எதிர்ப்ப

தற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறப்பதற்கு யாரால் முடியும்? எவரால் முடியும் ?

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

நாட்டுப்பற்றும்—சுதந்திரக் கனலும் ஒவ்வொரு வரியிலும் ஒளிவிடுகிறதன்றோ ; இந்நாடு விடுபட்டே தீரும் என்ற கவிஞரின் தீர்க்க தரிசனம்,

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே!"

என்ற நம்பிக்கை மிகுந்த சுதந்திரப் பள்ளாக அன்றே ஒலித்தது !

கனல்கொட்டி எழுதினார்—அனல்தெறிக்கப் பேசினார். துள்ளிவரும் வேல்போல—ஆவேசத்தை அள்ளிவரும் வாள்போலச்—சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டிவைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்தபோதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை, பூண்டுவிட்ட விடுதலைப் போர்க் கோலத்திலும் பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் போர்முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் ஆணவ உரைகள் அண்டியதில்லை. இழி மொழிகள், அவர் எழுத்தேடுகளின் பக்கம் எட்டிப் பார்த்ததுமில்லை. கவிதைக் கணைகள் கிளம்பும்—அவை கண்யத்தோடு கிளம்பும்.

எதிரிகளைப் பண்படுத்தும் எழுத்து, புண்படுத்தும் எழுத்தல்ல பாரதியின் எழுத்து ; தளையும் தொடையும் தெரிந்து விட்டால் தலைகீழ் நிற்கும் கவியுலகம் பாரதியின் காலத்தில் இல்லை.

பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு—உள்ளமோ அடக்கத்தின் கருவூலம், அவர் விழிகள் அம்பெனக் கூர் காட்டும்—ஆனால் அன்பினை மழைபோல் பொழியும். யார்க்கும் தலைதாழ்த்தா வணங்காமுடி, ஆயின் தமிழுக்கு—நல்ல தமிழர்க்குத் தெண்டனிடும் தேன் தமிழன்.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவிவீரன் !

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்".

இப்படிப் பெண்ணுரிமைக்காகப் புயல் கொள்கின்ற புலவன், இதோ தென்றல் தாங்கி வருகின்ற காட்சி கண்போம் :—

"சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே"—

தென்றலென வந்த பாரதி, இதோ, சிந்து பாடும் அருவியாக ;

"பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் மது நீ எனக்கு
தும்பியடி நான் உனக்கு—
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு"

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய், பாரதியின் இன்பக் கனவாய், இதோ ஒரு பாடல்..............

"சிங்களத் தீவினுக்கோர்பாலம் அமைப்போம்—
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்".

பாரதியின் வாரிசாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ;

"பாரதியார் உலக கவி அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாழ்ந்தோர்
ஒருருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான
ஓட்டைச் சாண் நினைப்புடையார் அல்லர்"

என்று பாடி மகிழ்ந்தார்—தமிழரையும் மகிழ வைத்தார்.







"சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு"—

பாரதி இனிக்க இனிக்கப் பாடிய தமிழ்நாடு...... இன்று இந்த மண்ணுக்குரிய பெயராய்........ மாநிலத்தின் புகழ் செதுக்கித் திகழ்கின்ற காட்சி கண்டு களிக்கின்றோம்......பாரதியை வாழ்த்துகின்றோம்.

யார் பாடினாலும்—அவர் எதைப் பாடினாலும்—பாரதி, விட்டதை அல்ல; தொட்டதைத் தானே பாடுகின்றார் என்ற நினைப்பு நமக்கு வராமல் இல்லை.

மறைந்த மகாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர் தந்த கருத்துக்களை மறக்காமல்......மறைக்காமல் இருப்பதுதான்!

அவர், சாதிகளைச் சாடினார்; நாம் அதனை முழுமையாக ஒழித்தோமா?

அவர், வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பெற்றதைப் பேணிக் காத்திட நாம் நம்மைச் சரியாகத் தயார் படுத்திக் கொண்டோமா?

பெண்ணடிமை தீர்க என்று கூவினார் முற்றிலும் தீர்த்தோமா?

"வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்"

என்றார்; இன்னும் அதில் குறைவைத்துள்ளோம்.

அவர் எண்ணியவைகளையெல்லாம் நாம் செய்துவிடப்போகிறோமா? அல்லது அவரே மீண்டும் எழுந்து வந்து நமக்கு உணர்த்தினால்தான் நாம் விழிப்போம் என்ற கருத்தில்;

பாரதி சென்ற திக்கு நோக்கி........

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிக்கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைக்கண்டு பொங்குவாய் வா வா வா"


என்று அவரை அழைக்கப் போகிறோமா? அழைப்பதற்கு முன்பு அவர் இதோ வந்து விட்டார்—அவர் கவிதைகளில் சிரிக்கிறார்—பாடல்களில் நடக்கிறார்—எழுத்துக்களில் நிற்கிறார்—எண்ணங்களில் நிறைகிறார்.

அந்த மாவீரர் முன்னிலையில்
மனிதனை மனிதன் மதித்திடக்
கற்றுக்கொள்வோம்—
அரசியல் பண்பு போற்றுவோம்—
ஜனநாயக மரபு காத்திடுவோம்—
அவர் தொட்டபணி தொடர்வோம்;

நலிவற்ற நாடு—வலிவுற்ற மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி—இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்.

வாழ்க பாரதியின் புகழ்! வாழ்க!!

# குருதி தருவோம்



# இன்னுயிர் காப்போம்

சென்னையில் மஞ்சட்காமாலை நோய் பரவலாகப் பற்றியிருந்த நேரம். சென்னை, எழும்பூரிலுள்ள சிறுவர் மருத்துவமனைக்குப் பத்து வயதுச் சிறுவனொருவன் மயக்கமான நிலையில் எடுத்து வரப்பட்டான். அவனுக்கு மஞ்சட்காமாலை நோய். உடலிலுள்ள இரத்தம் முழுவதும் கெட்டுவிட்டது. உயிர் தத்தளிக்கும் நிலை! இனிப் பிழைப்பது அரிது என்று கைவிடப்பட்டபின் துயரில் மூழ்கிய பெற்றோர், இறுதி முயற்சியாகச் சிறுவர் மருத்துவமனைக்கு அவனைக் கொணர்ந்தனர்.

மருத்துவ மனையில் கை தேர்ந்த டாக்டர்கள் அவனை ஆய்வு செய்தனர். உடலிலுள்ள இரத்தம் அனைத்தையும் மாற்றிப் புதிய இரத்தத்தை ஓடவிடுவதுதான் அச்சிறுவனைக் காப்பாற்றக் கூடிய ஒரே வழி எனக் கண்டனர்.

சிகிச்சை தொடங்கியது. சிறுவனின் உடலிலுள்ள நோய் குடி கொண்ட இரத்தத்தைச் சிறுகச்சிறுக எடுத்துவிட்டு, நல்ல, புதிய இரத்தத்தை உடலில் பாய்ச்சினர். தொடர்ந்து சிகிச்சை நடந்தது. சிறுவன் பிழைத்து எழுந்தான். பெற்றோரின் உள்ளத்தில் பாலை வார்த்தான். சிறுவனுக்கு இரத்தம் தந்து உதவிய கொடையாளரை மனமார வாழ்த்தினர், பெற்றோர்.

சில குழந்தைகளுக்குத் தாயின் கருவில் உருவாகும் போதே, தாய்மூலமாக மஞ்சட்காமாலை நோய் தொற்றிக் கொள்வதுண்டு. பிறக்கும் போதே அக்குழந்தைகள் மஞ்சட்காமாலையுடன் பிறந்துவிடும். அந்தக் குழந்தைகளுக்கு இம்முறையில், இரத்த மாற்றச் சிகிச்சை செய்தால்தான் அவை பிழைக்கும். குழந்தையின் தொப்பூழ்க் கொடிமூலம் இந்த இரத்தமாற்றம் செய்வார்கள். முதலில் 20 கன சென்டிமீட்டர் சுத்த இரத்தத்தைக்குழந்தையின் உடலுக்குள் செலுத்துவார்கள். பின் 10 கன சென்டிமீட்டர் கெட்ட இரத்தத்தை வெளியே எடுப்பார்கள். இவ்வாறு ஒரு தடவைக்கு 300 க.செ.மீ. ஆக, நான்கு முறை இரத்தமாற்றம் செய்யப்படுகிறது.

சென்ற ஆண்டு மட்டும், இந்தச் சிறுவர் மருத்துவ மனையில் இம்மாதிரி இரத்த மாற்றச் சிகிச்சை 15 குழந்தைகளுக்கும், 4 சிறுவர்களுக்கும் செய்யப்பட்டுள்ளது. மஞ்சட்காமாலைக்கு மட்டுமல்ல; வெட்டுக்காயங்களினால் அளவுக்கு மீறி இரத்தம் இழந்தவர்கள், விபத்துகளில் காயமடைந்தவர்கள், தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், இரத்தச் சோகையுள்ளவர்கள் ஆகியவர்களைக் காப்பாற்றவும் அறுவைச் சிகிச்சைகளின் போதும் நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்தப்படுவதுண்டு.

பிறந்தது முதலே இரத்தக் கோளாறுடன் பிறக்கும் குழந்தைகளும் உண்டு. சென்னையைச் சேர்ந்த ஒரு சிறுவன் பிறந்தது முதல் கடந்த 14 ஆண்டுகளாக இந்த இரத்த மாற்றத்திலேயே உயிர்வாழ்ந்து வருகிறான். இரத்தக் கோளாறு தவிர, மற்றபடி அவனுக்கு வேறு எந்த நோயும் கிடையாது. பிற சிறுவர்களைப்போல் பள்ளி சென்று பயின்று வருகிறான்.

சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மற்றொரு குழந்தையும் இதே வகையிலுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐந்து வாரங்களுக்கு ஒரு முறை அந்தச் சிறுமிக்கு (தற்போது வயது 2) இரத்தம் செலுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு தேவைப்படும் நேரத்தில் நோயாளிகளுக்கு இரத்தமளிக்க இரத்தம் எங்கேயிருந்து கிடைக்கிறது?

அதற்காகத்தான் நாடுமுழுவதும் பல இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் இதுவரை 8 இரத்தச் சேமிப்பு வங்கிகள் இயங்கி வந்தன. சிறுவர் மருத்துவமனையில் அண்மையில் துவக்கப்பட்ட வங்கியைச் சேர்த்து 9 வங்கிகளாகின்றன.

இதுவரை சிறுவர் மருத்துவ மனைக்கென்று தனியாக இரத்த சேமிப்பு வங்கி இருக்கவில்லை. தேவைப்படும்போது வேறு மருத்துவமனையிலுள்ள இரத்தச் சேமிப்பு வங்கிகளிலிருந்து பெற்றுவந்தனர். ஆனால் சில சந்தர்ப்பங்களில் தேவையான பிரிவைச்சேர்ந்த இரத்தம் கிடைப்பது அரிதாகையால் அறுவைச் சிகிச்சைகள் ஒத்திப் போட நேரிடுகின்றன.

எனவே இந்தச் சிறுவர் மருத்துவ மனைக்கென்று தனியாக இரத்தச் சேமிப்பு வங்கியைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. கடந்த நவம்பர் திங்கள் 24-ஆம்



சேகரிக்குமுன் இரத்தம் ஆய்வு செய்யப்படுகிறது

நாள் இந்த வங்கியைத் தமிழகக் கல்வி-பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். தமிழக அரசின் பொதுநலத் துறைச் செயலாளர் திரு. அம்பாசங்கர் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார். எழும்பூர் சிறுவர் மருத்துவ மனைக்கே உரிய எழிலுடன் சிறப்பாக இந்த விழாவினை நடத்தினார், அதன் இயக்குநர் டாக்டர் பால கோபால ராஜு. டாக்டர்கள் எம். எஸ். ராமகிருஷ்ணன், நரசிம்மாச்சாரி ஆகியோர் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றனர். மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் ரத்தினக்கண்ணன் வரவேற்புரை வழங்கினார். இரத்தச் சேமிப்பு வங்கிப் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் விமலா ராமலிங்கம் நன்றியுரையாற்றினார்.

மருத்துவமனை நுழைவாயிலில் பல வண்ணப் பூக்களால் பூக்கோலமாக வரவேற்பு அமைக்கப் பட்டிருந்தது, கண்ணுக்கு விருந்தாக — எழிலோவியமாக விளங்கியது. விழாவின் முக்கிய பிரமுகர்களுக்கான முதல்வரிசையில் இளஞ்சிறார்கள் (மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவோர்) இடம் பெற்றிருந்தது இளஞ் சிறார்களின் உடல் நலத்தில் இம்மருத்துவமனையினர் காட்டும் அக்கறையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

சிறுவர்களுக்கான இந்த இரத்த வங்கியில் ஒரு மாதத்திற்குக் குறைந்தது 200 புட்டி இரத்தம் சேகரித்து வைக்கப்படும். (குழந்தைகளுக்குத் தேவையான புட்டியில் 175 க.செ.மீ. ரத்தமிருக்கும்.) தற்போதைய இரத்தத்தேவை 200 புட்டிகள். ஆனால் விரைவில் இந்த அளவு, மாதத்திற்கு 1,500 புட்டிகளாக உயரும்.

இருபது ஆண்டுகளுக்கு முன் இரத்தச் சேமிப்பு வங்கி துவக்கப் படும் போது, தமிழகம் முழுவதும் ஆண்டுக்கு இரத்த தானம் செய்ய முன் வந்தவர்களின் எண்ணிக்கை ஐயாயிரம். இன்று ஆண்டுக்கு 40,000 பேர் இரத்த தானம் செய்கிறார்கள். ஆனால் இரத்தத் தேவையைக் கணக்கிடும்போது, இது மிகவும் குறைந்த அளவாகும். தற்

நோயாளிகளுக்கு மட்டுமே இரத்தம் தரப்படுகின்றது. மற்றவர்களுக்கு இரத்தம் தருவது அனாவசியச் செலவாகக் கருதப்படுகிறது. ஆனால் சிலவகை நோய்களுக்கு முதல் கட்டத்திலேயே இரத்தம் வழங்கினால் நோய் துரிதமாகக் குணமாகும். அப்படிப் பயன்படுத்த நேரிடும்போது இரத்தத் தேவை மிக அதிகமாகும்.


மேலைநாடுகளில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு மக்கள் மிகுந்த ஆதரவு அளிக்கின்றனர். சமூக நிலையங்களும் மிகவும் ஒத்துழைக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வகை இரத்தம் தேவை என்று வானொலியில் அறிவிப்பார்கள். உடனடியாக அந்த வகை ரத்த முள்ள பொது மக்கள் பலர் மருத்துவ மனைக்கு விரைந்து வந்து வரிசையில் காத்து நின்று இரத்தம் வழங்குவார்கள்.

ஆனால் நமது நாட்டிலுள்ள நிலைவேறு. இங்கும் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவைகள் இரத்த சேமிப்பிற்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இரத்த தானம் செய்பவர்களுக்கு அரசு 350 க.செ.மீ.க்கு (ஒரு நபர் ஒரு முறை தரக்கூடிய அளவு) ரூ. 7 வீதம் தருகிறது. ஆயினும் நம் நாட்டில் படித்தவர்கள் கூட இரத்த தானம் செய்ய அதிக அளவில் வருவதில்லை. இரத்தம் கொடுத்தால் உடல் மெலிந்து விடும், வலுக் குறைந்து விடும் என்ற பயம் ஒரு காரணம். இந்த அச்சத்திற்குத் தேவையே இல்லை. சிறுவர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கியில் முதல் இரத்ததானம் செய்தவர் அங்கு பணியாற்றும் டாக்டர் சாந்தவதனம். அவர் இதற்கு முன்னால் எட்டுத்தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார்.

“இரத்த தானம் செய்வதனால் வலுவிழந்தோ, களைத்தோ போய் விடுவதில்லை. இரத்தம் எடுக்கப் பட்டவுடன் நாம் பணியாற்ற எழுந்து செல்லலாம். முதல் இரண்டுநாள் வழக்கத்தைவிடச் சுறுசுறுப்பாகக்கூட இருக்கும்” என்று குறிப்பிடுகிறார், டாக்டர் சாந்தவதனம்.

ஒரு மனிதனின் உடலில் சுமார் ஆறு லிட்டர் இரத்தமிருக்கிறது. ஆனால் டாக்டர்கள் எடுப்பதோ அதில் மிகக் குறைந்த அளவு (350 க.செ.மீ.). 100 பவுண்டு எடைக்குக் குறைவாக உள்ளவர்களிடமும், 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களிடமும் இரத்தம் எடுப்பதில்லை. ஒரு முறை இரத்தம் கொடுத்தவர் மூன்று மாதத்திற்குப் பின்தான் மறு முறை இரத்தம் வழங்கலாம்.

பொதுவாக இரத்தத்தில் நான்கு வகைகள் உண்டு. (1) ஏ. பிரிவு, (2) பி. பிரிவு, (3) ஏ.பி. பிரிவு, (4) ஒ பிரிவு. இதில் 'ஏ. பி.' மிகவும் அரிதான ஒன்றாகும். 'ஒ' பிரிவு தான் வெகு எளிதில் கிடைக்கக் கூடியது.



இரத்தம் எடுக்கும் குழாய்கள் சுத்தம் செய்யும் கருவிகளில் வைக்கப்படுகின்றன

இரத்த தானம் செய்தவரின் இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று ஆய்ந்தறிந்து, அவரிடமிருந்து எடுத்த இரத்தத்தைத் தனி புட்டியில் சேகரித்து அது எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டு, அதன் பின் அதனைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்திருப்பர். ஒருவாரம் இந்த இரத்தம் கெட்டு விடாமல் இருக்கும். அதற்குப் பின் இதனை இரத்தம் செலுத்தப் பயன்படுத்துவதில்லை. பின்பு அங்கிருந்து ''கிங் இன்ஸ்டிடியூட்'' டுக்கு அனுப்பி விடுவார்கள். அங்கு அதன் செல்கள் பிரிக்கப்பட்டு 'பிளாஸ்மா'வை மட்டும் தேவைப்படுபவர்களுக்குப் பயன்படுத்துவார்கள். 'பிளாஸ்மா'வை ஆறு வாரங்களுக்குப் பயன்படுத்தலாம்.

இன்னுயிரினைக் காக்கும் இந்த இரத்த தானத்தினைத் தாராளமாக வழங்க முன்வருவது பொது மக்களின் கடமையாகும். அதன் மூலம் மரண வாயிலில் நிற்கும் பல உயிர்களைக் காப்பாற்றிய பெருமை அவர்களைச் சாரும்.

---

## வெங்காயத்தில் உள்ள சத்து

நூறு கிராம் எடையுள்ள சிறிய வெங்காயத்தில் கீழ்க் கண்ட சத்துக்கள் அடங்கியுள்ளன:—

புரதச்சத்து—1·8 கிராம்.
கொழுப்பு—0·1 கிராம்.
கால்சியம்—40 மில்லி கிராம்.
ஆக்சாலிக் அமிலம்—1·0 மில்லிகிராம்.
பாஸ்பரஸ்—60 மில்லிகிராம்.
இரும்புச்சத்து—1·2 மில்லிகிராம்.
சோடியம்—4·0 மில்லிகிராம்.
பொட்டாசியம்—127 மில்லிகிராம்.
தையாமின்—0·8 மில்லிகிராம்.
ரைபோபிளாவின்—0·02 மில்லி கிராம்.
நிக்கோட்டினிக் அமிலம்—0·50 மில்லி கிராம்.
வைட்டமின் 'சி'—2·00 மில்லி கிராம்.
வைட்டமின் 'ஏ'—25 ஐ.யூ.



குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள் : 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்



# மின்னலின் சின்ன இழை!

மகளின் திருமணம். கைத்தறி அங்காடிக்குக் குடும்பத்துடன் சென்று பட்டாடை தேர்ந்தெடுக்கிறார் குடும்பத் தலைவி. நல்ல தரமான பட்டுப் புடவைகள் நூற்றைம்பது முதல் ஆயிரம் ரூபாய் வரை பல வகையில் உள்ளன.

கட்டித் தங்கத்தைத் தட்டி ஒட்டவைத்தது போன்று தகதக வென்று மின்னிடும் பட்டுப்புடவையினைத் தேர்ந்தெடுக்கிறார், இல்லத்தரசி. அனைவருக்கும் திருப்தி தரும் எழிலான சேலை, அது.

மெல்லிய, நேர்த்தியான, தரமான, உறுதியான பட்டின் அழகிற்கு அழகு செய்வது, அதன் இழையோடு இணைந்து செல்லும் சரிகையாகும். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று கூறுவது போலப் பட்டாடை புத்தாடையாக இருக்கும் போதுள்ள மதிப்பினை, கிழிந்துபோன பின்னும் இழப்பதில்லை. பாத்திரக்காரர்கள் கிழிந்த பட்டுச் சேலை வேட்டிகளை விரும்பி வாங்குவதற்குக் காரணம் அதிலுள்ள தங்கச் சரிகைகளே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகம் பட்டு நெசவில் ஈடு இணையற்று விளங்கி வந்துள்ளது. இருப்பினும், இது காறும், நமது பட்டு நெசவுக்குத் தேவையான தங்கச் சரிகைகள், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சூரத் பகுதியிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. இந்தச் சரிகைத் தொழில் மூலம் அங்கு ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் வருவாய்கிடைக்கிறது. அங்கு சரிகைத் தொழில் குடிசைத் தொழிலாக இயங்கி வருகிறது. தமிழகம் மட்டும் சூரத்திலிருந்து ஆண்டுக்குச் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சரிகைகளை விலைக்கு வாங்குகிறது. இந்த நிலையை மாற்றி, சரிகைத் தொழிற்சாலையைத் தமிழகத்தில் அமைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

நெசவுக்குப் பெயர் போன காஞ்சியை விட வேறு எந்தத் திருத்தலம் இதற்குப் பொருத்தமாக இருக்க முடியும்? எனவே காஞ்சியிலேயே இந்தத் தொழிற்கூடத்தினை அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.

ஐந்து ஏக்கர் நிலத்தில் ரூபாய் 25 லட்சம் முதலீட்டில் இந்தத் தொழிற்கூடம் தனியார் துறையில் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும். இதில் பதினேழரை லட்சம் ரூபாய்க்கு இயந்திரங்கள் அமைக்கப்பட்டு ஏழு லட்சம் ரூபாய் முதலீடாக ஒதுக்கப்படும்.

இந்தச் சரிகை தயாரிக்க என்னென்ன தேவை? வெள்ளி, தங்கம், மிக நுண்ணிய தரமான பட்டு நூல் ஆகியவை. முதலில் வெள்ளி உருக்கப்பட்டு கம்பியாக்கப்படுகிறது. பின் அதன்மீது தங்க முலாம் பூசப்படுகிறது. இறுதியாகப் பட்டு நூல் வெளியே தெரியாவண்ணம் இதனுடன் சேர்க்கப்பட்டுச் சரிகை இழை தயாராகிறது. இதற்கு ஆண்டுக்குச் சுமார் 180 கிலோ தங்கமும், சுமார் 25,000 கிலோ வெள்ளியும் மற்றும் பட்டுநூல், ரசாயனப் பொருட்கள் ஆகியனவும் தேவைப்படும். காஞ்சி மண்ணில் இந்தச் சரிகைத் தொழிற்கூடம் தோன்றும் நன்னாள் வெகு தொலைவில் இல்லை.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ 8·00

அரையாண்டு ரூ 4·00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி, தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.



# கவிஞன் விலை குறித்தால்...

கவிஞர்
ஈரோடு தமிழன்பன்

பங்குனிபோல் கொதிப்புடைய தைமூர், கோரப்
படுகொலைப்போர் என்கின்ற மரணத் தொட்டில்
எங்கெங்கும் அமைத்துவந்தான்! ஆவி நீக்க
இயந்திரக்கூர் வாளோடு நாள்க ழித்தான்!
சிங்கத்தின் நகங்களைவாய்ச் சொல்லும் பாய்ந்து
சீறுபுலி ஆவேசத் தைத்தன் கண்ணும்
பங்கிட்டுக் கொள்ளச்செய் திருந்தான், சாவுப்
பதிகங்கள் இரத்தவெழுத் தாலே செய்தான்!

சமர்கண்டு சரித்திரத்தில் இடமும் கண்ட
சாமர்க்கண் டரசனவன் நெருப்பு நெஞ்சன்!
சமைத்துவைத்த சாப்பாட்டை ஒருகை பார்த்தால்
சாதனையா? சாகசமா? அதுபோ லத்தான்
நமைச்சல்போர்த் தைமூருக்கு மற்ற நாட்டை
நசுக்குவதும் பொசுக்குவதும்! கண்ணை மூடல்
இமைக்குமிகச் சுலபமன்றோ! தைமூ ருக்கும்
எதிர்ப்பவரை உதிர்ப்பதெலாம் அப்ப டித்தான்!

கொடும்பருந்தின் நிழலினிலே இருப்ப துண்டா
கொல்கொதிப்பு? தைமூரின் நிழலும் கூட
நடுப்பகல்தான்! சகாராதான்! அதனல் அந்த
நாசப்போர் நேசன்தன் கனவு நீண்டு
தொடும்நாடும் கரிந்துவிடும்! அவனைப் பற்றிச்
சொன்னலே வெறுப்பாகும்; உயிர்ந டுங்கும்!
எடுத்துவிட்டான் வாளென்ருல் மயானக் காட்டின்
இமைசிரிக்கும்! விழிமகிழ்ச்சி விழாஎ டுக்கும்!

ஆயிரமாம் பயங்கரங்கள் திரண்டு வந்தால்
அதனுருவம் தைமூரின் வாழ்க்கை நூலின்
பாயிரமாய் இருந்திடலாம்! பாத கங்கள்
பல்லவியாய்த் திரும்பத்தி ரும்பச் செய்த
தீயநெஞ்சில் பதங்கள்ப ரிமாறும் பாட்டுத்
தித்திப்பும் சிலவேளை தொட்ட துண்டு!
காயப்போர் இரைச்சலுக்கே உரிய காதைக்
கவிக்கிண்ணம் ஆக்கியவன் வைத்த துண்டு!

ஆடம்ப ரப்பொருள்கள் மட்டும் தன்னை
அபகரிக்க இடந்தந்தான்! கொழுத்த மேனி
மேடையிலே மாணிக்க மணிகள் முத்து
வெளிச்சவிழா நடத்துவதை ஆத ரித்தான்!
‘ ஆடைப்பூ ’ இதழ்ச்சிவப்புத் திராட்சைச் சாற்றை
அருந்துவதும் அவனுக்கு மிகப்பி டிக்கும்!
பாடல்செய் ‘ கிர்மானி ’ படைத்து வைக்கும்
பளிங்குச்சொல் வரிசைமிக மிகப்பி டிக்கும்!


தங்கச்சிங் காசனத்தில் பெருமை மோதத்
தைமூர்உட் கார்ந்திருந்தான் ஒருநாள்! வாளால்
அங்கபங்க அறுவடைகள், மரண வாசல்
அலங்கரிப்புச் செய்தவைர் இருந்தார்! இன்பச்
சங்கீதத் தோரணங்கள் தொடுக்க வல்ல
சரமழைபெய் பாவாணர் நிறைந்தி ருந்தார்
அங்கிருந்தான் கிர்மானி! அவனைப் பார்த்தே
அதிசயமாய் ஒருகேள்வி தைமூர் கேட்டான்!


சந்தங்கள் சந்திக்கும் சந்த னப்பாச்
சரந்தொடுக்கும் கிர்மானி! என்னை நீயோர்
சந்தையிலே விற்பதற்கு விருப்பங் கொண்டால்
சாற்றுகின்ற விலைஎன்ன இருக்கும் என்ருன்!
‘ எந்தநிலை ஆனுலும் எங்கள் வேந்தே
ஈரைந்து தஸ்கருக்கு மேல்போ காது
சந்தையிலே!’ எனக்கவிஞன் வணிகன் ஆனுன்!
சண்டைமன்னன் தோள்குலுங்கச் சிரித்துக் கொண்டான்!

‘சித்திரச்சொல் சிற்பங்கள் செதுக்கும் நீ,வி
சித்திரமாய் விடைவேடிக் கைசெய் கின்ருய்!
சத்தியமாய்ச் சொல்கின்றேன் எனதி டுப்புக்
க[illegible]ரைக்கே சரியாகும் என்னை விற்க
வைத்தவிலை ஈரைந்து ‘தஸ்கர்’ என்ருன்!
மதுரப்பாக் கிர்மானி, ‘யானும் சொன்ன
அத்தொகையே அதற்குத்தான் அரசே!’ என்ருன்.
அங்கிருந்தோர் தங்களுக்குள் நகைத்துக் கொண்டார்!











# வளமான வளர்ச்சிக்கும்
# அதிக உற்பத்திக்கும் சிறந்தவை
# ரோவிமிக்ஸ்
டிரேட் மார்க்

# மற்றும்
# ரோவிஸால் ஓரல்
டிரேட் மார்க்





**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:**
உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க கனிஜங்களால் கெடாத **ரோவிமிக்ஸ்** விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:**
ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்கு ஊட்டுதல், அதிகச் சூடு, அதிகக் குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்:
ROCHE **ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்**
பம்பாய்-34 WB

மற்ற விவரங்களுக்கு கீழ்க் காணும் ஏக வினியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள்:
VOLTAS **வால்டாஸ் லிமிடெட்**
கெமிக்கல்ஸ் டிவிஷன், த.பெ. 7803,
பம்பாய்-33 (DD).
த.பெ. 125, பெங்களூர்-1
த.பெ. 385, புது டில்லி-1
த.பெ. 1898, சென்னை-1
த.பெ. 34, கொச்சி-3
த.பெ. 606, கல்கத்தா-1
த.பெ. 35, கான்பூர்-1
த.பெ. 90, சிகந்திராபாத்-3

ஒருநாள் இரவு மணி 2 இருக்கும். நான் இரவின் அமைதியில் எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென '' ஐயய்யோ! என்ன செய்வேன்! ஓடி வாங்களேன்!'' என்று ஒரு குரல் கேட்டது. எழுதிக்கொண்டிருந்ததை நிறுத்தி விட்டு, வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தேன். பக்கத்திலிருந்த குடிசையிலிருந்து அழுகுரல் வந்து கொண்டிருந்தது. என்னவென்று அறிந்து கொள்ள விரும்பிக் குடிசையை நோக்கிவிரைந்தேன். பக்கத்துக் குடிசைகளிலிருந்தவர்களெல்லாம் அங்கு ஓடி வருவதற்கும், நான் அந்தக் குடிசையை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. அந்தக் குடிசையின் சொந்தக்காரர் ராமசாமி தன்னுடைய 3 வயது ஆண் குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டு அழுது கொண்டே வெளியே வந்தார்.

'' ராமசாமி ஏன் அழுது கொண்டே வருகிறாய்? என்ன நேர்ந்தது?'' என்றேன்.

'' பையனுக்கு ஜுரம் சார். ராத்திரி சாப்பிட்டுவிட்டுநல்லாத்தான் படுத்தான். இப்போ உடம்பில் கையை வைக்க முடியவில்லே. இங்கே பாருங்க சார். குழந்தைமுழிச்சது முழிச்சபடியே இருக்கு; பேசமாட்டேங்குறான் சார்'' என்று அழுதுகொண்டே கூறிவிட்டுக் குழந்தையை என்னிடம் காட்டினார்.

'' பயப்படாதே ராமசாமி. குழந்தைக்கு ஒரு ஆபத்தும் வராது. நீ தைரியமாயிரு'' என்று கூறிக் கொண்டே குனிந்து குழந்தையைத் தொட்டுப் பார்த்தேன். காய்ச்சல் கடுமையாகவே இருந்தது. குழந்தையின் கண்களைத் தொட்டுப் பார்த்தேன். கண்களில் அசைவே இல்லை. ஆனால் குழந்தை திணறித் திணறி இலேசாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தது.

'' சார்! ஒரு பத்து ரூபாய் கடன் கொடுத்து உதவுங்க சார்! ஆஸ்பத்திரிக்குப்போய்க் காட்டிப் பார்க்கிறேன். ஒரு வாரத்தில் ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றார் ராமசாமி.

'' ராமசாமி, நீ புறப்படத் தயாராக இரு; நான் பணம் எடுத்துக்கொண்டுவருகின்றேன்'' என்று சொல்லி விட்டு வீடு நோக்கி ஓடினேன்.

பணத்தை உடனே எடுத்து வந்து, ''ராமசாமி இந்தாபணம்; சீக்கிரம் புறப்படு!'' என்றேன். பணத்தைப் பெற்றுக் கொண்ட ராமசாமி மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டு புறப்பட்டார்.

அப்பொழுது '' ஏ! ராமசாமி, குழந்தையை இப்படிக்கொடு; நான் பார்க்கிறேன்!'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

அக்குரலுக்கு உரியவர் அக்குடிசைப் பகுதியில் வாழும் வயது முதிர்ந்த பாட்டி! ராமசாமி குழந்தையைப் பாட்டியிடம் கொடுத்தார். பாட்டிகுழந்தையை எடுத்துக் கொண்டு தெரு விளக்குக் கம்பத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். இந்தப் பாட்டி வேறு பெரிய டாக்டர் மாதிரி நினைச்சுக்கிட்டு குழந்தையைப் பார்க்கிறதால் காலதாமதமாகிறதே; குழந்தைக்கு என்ன ஆகுமோ? என்றுஎண்ணிய நான் அந்தப்பாட்டியை மனமாரத் திட்டிக் கொண்டிருந்தேன்.

தெரு விளக்கு வெளிச்சத்தில் குழந்தையை நன்கு பார்த்து விட்டு ராமசாமியை நோக்கி, '' இந்தக் காய்ச்சலை நிறுத்த, கடன் வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போறியா?'' என்று கேட்டார் அந்தப் பாட்டி.

'' குழந்தை பிழைக்க வேணுமானால் கடன் வாங்காமல் என்ன செய்வது?'' என்றார் ராமசாமி.

''அட போடா வேலையத்தவனே! நீயும் உன் பெண்டாட்






7

டியும் வண்டி இழுக்கப் போய் விட்டீங்க. நேற்று பூரா இந்தப் பய சாக்கடையில் விளையாடிக்கிட்டிருந்தான். அதனாலே காய்ச்சல் வந்திருக்கும்; நான் கூட இந்தப் பயலை வீட்டுக்குப் போடா என்று ரெண்டு தடவைவிரட்டிப்புட்டுத் தான் போனேன். கொஞ்சம் பொறு. இந்த ஜுரத்தை 15 நிமிடத்திலே இறங்க வைக்கிறேன்!'' என்று கூறிக்கொண்டே பாட்டி, ராமசாமியிடம் குழந்தையைக் கொடுத்தார்.

'' இந்தப்பாட்டியின் கழுத்தை நெரிச்சுப் போடணும்டா ! எதிலும் குறுக்கிடுது ! '' என்றார் ஒரு வாலிபர்.

''அவனெவண்டா என் கழுத்தை நெரிக்கிறவன் ? வாடா என் முன்னடி பார்க்கலாம் !'' என்றார் பாட்டி.

'' வாலிபப் பசங்க விளையாட்டுக்குச் சொல்றாங்க பாட்டி! நீ போய் உன் மருந்தைக் கொண்டு வா சீக்கிரம் '' என்றார் ஒரு பெரியவர்.

அந்தப்பாட்டி தன் வீட்டிற்குப் போய்விட்டுச் சற்றுநேரத்திற்குப் பின்பு திரும்பிவந்து, குழந்தையை வாங்கித் தன் மடியில் கிடத்தி நெற்றியிலும், தலையிலும், ஏதோ பசை போன்ற ஒரு பொருளைத் தடவினார். இரண்டு நிமிடங்களிலேயே குழந்தையின் கண்கள் அசைய ஆரம்பித்து மூடி மூடித் திறந்தன. ஆனால் குழந்தை அழவும் இல்லை ; பேசவும் இல்லை.

'' இனிமேல் கொஞ்சம் கொஞ்மாக ஜுரம் குறைந்து விடும் ! ராமசாமி 15 நிமிடத்திலே உன் மகன் பேசுவான் பாரேன் ! '' என்றார் பாட்டி.

ராமசாமி குழந்தையையே கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒவ்வொரு கணமும்ஒவ்வொரு யுகமாகக் கழிவதாகத் தோன்றியது ! அவர் மனைவியின் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகி வடிந்து கொண்டிருந்தது!

“தம்பி! இப்போ குழந்தையைத் தொட்டுப் பாருங்கோ '' என்று என்னை நோக்கிக் கூறினார் அந்தப் பாட்டி.

நான் குழந்தையைத் தொட்டுப் பார்த்தேன். அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்த உடம்பு சாதாரண நிலையில் இருந்தது.''பாட்டி! நீ சொல்லியது போலவே 15 நிமிடத்தில் காய்ச்சல் விட்டு விட்டதே ! '' என்று வியந்தேன்.

அப்போது குழந்தை 'அம்மா' என்று அழைத்துக் கொண்டே எழுந்திருக்க முயன்றது.

'' ராமசாமி இனிமேல் பயமில்லை ! இங்கே குளிர்காற்று வீசுது ! குழந்தைக்கு ஆகாது. குழந்தையை எடுத்துக் கொண்டு போய் குடிசைக்குள் படுக்க வைத்துப் பால் கொடுக்கச் சொல்லுப்பா '' என்றார் பாட்டி.

ராமசாமி தன் குழந்தையை எடுத்துக்கொண்டு குடிசையினுள் நுழைந்தார். கூட்டமும் கலைந்து விட்டது. நான் மட்டும் அந்தப் பாட்டியின் அருகில் நின்றுகொண்டிருந்தேன்.

'' நேரமாயிட்டுதே, நீ போகலையா தம்பி?'' என்றார் பாட்டி.

'' பாட்டி ! என்ன மருந்து போட்டே என்று சொல்லு '' என்றேன்.

'' வெங்காயம் !''—இதுதான் பாட்டியின் பதில்.

தந்தைபெரியாருக்குக் கோபம் வந்தால் ' வெங்காயம் ' என்று சொல்லுவார். அதுபோல் இந்தப் பாட்டியும் கோபம் வந்தால் ' வெங்காயம் ' என்று சொல்லுமோ என்று எண்ணி ''பாட்டி ! கோபித்துக் கொள்ளாதே! மருந்துப் பெயரைச் சொல்லு '' என்றேன்.

'' அதான்சொன்னேனே வெங்காயம் என்று ''—பாட்டி கூறினார்.

'' வெங்காயத்திலா பாட்டி இவ்வளவு சக்தி இருக்கிறது ?''

'' வெங்காயத்தின் மகிமை உங்களுக்கெல்லாம் தெரியாது தம்பி! ''

'' காய்ச்சலை நிறுத்தும் சக்தி வெங்காயத்திற்கு உண்டு என்பது உங்களுக்கு எப்படிப் பாட்டி தெரிந்தது ?''

'' எங்க அப்பா அந்தக் காலத்தில் கப்பலில் வேலை செய்து வந்தார். அப்போ அந்தக் கப்பலில் இருந்த மாலுமிகளிடமிருந்து வெங்காயத்தை நன்கு அரைத்து நெற்றியில் பூசினால் காயச்சல் விட்டு விடும் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொன்னார். அதன்படி நான் செய்து வருகின்றேன். நல்ல குணம் தெரிகிறது! நீயும் இனிமேல் செய்து பார் '' என்று சொல்லிக்கொண்டே பாட்டி தன் வீட்டிற்கு வேகமாகத் திரும்பிப் போனார்.

பாட்டியிடம் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்ற மன வருத்தத்துடன் வீடு திரும்பிப் படுக்கையை விரித்துப் படுத்தேன். வெங்காயத்தின் பயன் இன்னும் என்னென்ன இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியது. இப்படிப்பட்ட அரிய பொருளின் பயனை நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிவிக்காமல் இருந்த பெரியவர்களை நினைத்து வருந்தினேன்.

மறுநாள் வெங்காயத்தின் சக்திகளை அறிந்து கொள்ள விரும்பிப் பல்வேறு புத்தகங்களைப் படித்துப் பார்த்தேன். வெங்காயம் பல நாடுகளில் பல்வேறு வகைகளில் பயன்பட்டு வந்த விவரங்கள் எனக்குக் கிடைத்தன. அவைகளைத் தொகுத்து உங்களுக்குப் படைத்துள்ளேன்.

தலையில் ஏற்படும் வழுக்கை (baldness) முதல் நச்சுப் பாம்பு கடி வரை பல்வேறு நோய்களுக்கும் வெங்காயத்தைப்

## ஒரு நகரத்திற்குப் பெயர் வெங்காயம்

யூதர்களுக்கு வெங்காயம் என்றால் மிகவும் விருப்பமாம் ! அதனால் வெங்காயத்தின் பெயரை வைத்து ஒரு நகரத்தையே அமைத்தார்களாம் ! வெங்காயம் ' ஆனியன் ' (Onion) என்று கூறப்படுகிறது. எனவே, 'ஆனியன் ' என்ற பெயரில் ஒரு நகரம் கி. மு. 173-ஆம் ஆண்டில் சூயஸ் வளைகுடாவில் கட்டப்பட்டதாம். இந்த நகரைக் கட்டியவரின் பெயர் ஆனியாஸ் (Onias) எனப்படுகிறது. இந்நகரம் 343 ஆண்டுக் காலம் இருந்ததாம். என்னே வெங்காயத்தின் பெருமை !

பயன் படுத்துமாறு டாக்டர்கள் பரிந்துரைத்ததாக வரலாறு கூறுகிறது.

பழங்காலத்தில் மாலுமிகள் சொறிநோயினல் (Scurvy) தாக்கப்படுவதை வெங்காயம் தடுத்துள்ளதாகத் தெரிகிறது.

சமீபத்தில் நியூகேசில் பல்கலைக்கழகத்தில் டாக்டர்கள் அடங்கிய குழு ஒன்று, வேக வைத்த அல்லது வறுக்கப்பட்ட வெங்காயத்தை மருத்துவ மனை மருந்துக் குறிப்புகளிலும் பயன் படுத்தலாம் என்று கண்டு பிடித்துள்ளது. இரத்தக் குழாயின் உள்ளே இரத்தம் உறைந்து (இறந்து) கட்டியாகப் போய் விடுவதைக் (Clots) கரைத்து விடக் கூடிய சக்தியை இரத்தத்திற்கு வெங்காயம் ஏற்படுத்துவதாக அந்த டாக்டர்கள் கூறியுள்ளனர். எனவே 'கரோனரி திராம்பாசிஸ்' எனப்படும் பயங்கர வியாதியை எதிர்க்கும் புதிய ஆயுதமாக சாதாரண வெங்காயத்தைப் பயன் படுத்தலாம்.

மத்தியப் பிரதேச மக்கள் வெய்யிலின் கொடுமையிலிருந்து (Sun-stroke) தப்புவதற்காகத் தங்கள் சட்டைப் பைகளில் வெங்காயத்தை வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

வெங்காயம் வியாதியைக் குணப்படுத்துவதுடன், ஏழை மக்களின் வலிமை தரும் மருந்தாகவும் ( Tonic ) இருக்கிறது என்ற நம்பிக்கை மனித குலத்தில் நெடுங்காலமாகவே நிலவி வருகிறது.

'கிஷா' ( Giza) என்ற இடத்தில் உள்ள மாபெரும் பிரமிடுகளைக் கட்டிய வேலையாட்களுக்கு வெங்காயமும், பூண்டும் உண்பதற்காகக் கொடுக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது. பிரமிடுகள் கட்டுவது மிகவும் கடுமையான வேலையாகும். அவ் வேலைக்குத் தேவையான சக்தியையும், வலிமையையும் வெங்காயமும், பூண்டுமே கொடுத்ததாக அவர்கள் நம்பினர்களாம்.

மோசஸூம், ஆரானும் இஸ்ரேலியர்களை எகிப்தில் இருந்து அழைத்துச் சென்று சினய் பாலைவனத்தில் விட்டு விட்டபோது, இஸ்ரேலியர்கள் வெங்காயத்தை நினைத்து நினைத்து ஏங்கினர்களாம்.

ரோம் நாட்டிலிருந்து பிரிட்டனுக்குத் தங்களுடன் வெங்காயத்தைக் கொண்டு செல்லும் அளவுக்கு, ரோமானியர்களும் வெங்காயத்திடம் பற்று வைத்து இருந்தனராம். வெங்காயத்தைப் பார்த்த முதல் பார்வையிலேயே, ஆங்கிலேயர்கள் வெங்காயத்தை விரும்பி விட்டார்களாம். இதனல் அரசாங்க விருந்துகளிலும் வெங்காயம் இடம் பெற்றதாம். முதலாவது எலிசெபெத் மகாராணியின் காலையுணவில் ஒரு தட்டு மாட்டிறைச்சியும், ஊறுகாயாகச் செய்யப்பட்ட வெங்காயமுமே இடம் பெற்றிருந்தனவாம். அவைகளை உண்டபின் அவர் 'பீர்' என்னும் மது அருந்தித்திருப்தி அடைந்தாராம்.

**1941**-ல் வெங்காயமும் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்ததாம். அப்பொழுது சைரில் பிரிஸ்பை (Cyril Frisby) என்பவர் ஒரு கூடை வெங்காயத்தை லண்டன் ஸ்டாக் எக்சேஞ்சில் 'போர் ஆயுதவார நிதிக்காக' (Aid for the war weapon week) ஏலம் விட்டாராம். அந்த ஏலத்தில் ஒவ்வொரு வெங்காயத்திற்கும் 3,000 பவுன் கிடைத்ததாம்.

இலண்டனில் **1664**-ல் ஏற்பட்ட 'பிளேக்' நோயின்போது பெரும்பாலும் எல்லா வீட்டிலும் யாராவது இறந்து கொண்டே இருந்தார்களாம். ஆனல் அப்பொழுது 'பிளேக்' நோய் தொற்ருத இடம் வெங்காயமும் பூண்டும் விற்கப்பட்ட கடைகளேயாம்.

இப்படிப் பலவகையிலும் நண்பனைப் போல் உதவும், வெங்காயத்தை உங்கள் வீட்டில் உபயோகப்படுத்த மறவாதீர்கள். வெங்காயம் உணவுப் பொருள்களில் சுவையும், மணமும் ஏற்படுத்தக் கூடிய பொருளாகப் ( Condiment ) பயன் படுகிறது. இது ஓர் எளிய மருந்தாகவும் பயன் படுகிறது. வாணிகக் காய்கறிகளில் ஒன்ருகவும் இது விளங்குகிறது.

வெங்காயத்தை இந்தியா, ஆப்கானிஸ்தானம், சோவியத் குடியரசின் டாஜிக், உஸ்பெக், மேற்கு டைன் ஷான் ஆகிய நாடுகள் பெருமளவில் சாகுபடி செய்கின்றன. இந்தியாவில் 90,557 ஹெக்டர் பரப்பில் வெங்காயம் சாகுபடியாகிறது. இந்தியாவில் மகாராட்டிரம், தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், பீகார், பஞ்சாப் ஆகிய மாநிலங்களே வெங்காயத்தை முக்கியமாகப் பயிரிடுகின்றன.

இந்தியாவிலிருந்து ஆண்டு தோறும் ரூபாய் 2·50 கோடி மதிப்புள்ள வெங்காயம் இலங்கைக்கு அனுப்பப்படுகிறது.

வெங்காயத்தில் இரண்டு வகை உண்டு. அவை சிறிய வெங்காயம் (நாட்டு வெங்காயம்), பெரிய வெங்காயம் (பெல்லாரி வெங்காயம்) எனப்படும். சிறிய வெங்காயத்தில் சிவப்பு, வெள்ளை என இருவகைகள் உள்ளன.

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் சிறிய வெங்காயத்தை உபயோகித்து வருவதால், சிறிய வெங்காயத்தின் தேவை பெருகி வருகிறது. சில சமயங்களில் சிறிய வெங்காயம் கிலோ ரூபாய் 1·20-க்கு

## தங்கத்தைவிட விலை அதிகம்

நெதர்லாந்து நாட்டில் 1 கிலோ 'பெட்டூனியா' (Petunia) என்னும் பூச்செடியின் ஒட்டு வீரிய விதை ஏறத்தாழ 90,000 பிளாரின்ஸ் (சுமார் 1·8 இலட்சம் ரூபாய்) விலைக்கு விற்கப்படுகிறதாம்.

அந்நாட்டில் 'பெகோனியா' (Begonia) என்னும் மற்ருெருபூச்செடியின்ஒட்டு வீரிய விதை 1 கிலோ 1,60,000 பிளாரின்ஸ் (சுமார் 3·31 இலட்சம் ரூபாய்) விலையில் விற்பனையாகிறதாம்.

ஆனல் அந்த நாட்டில் 1 கிலோ தங்கத்தின் விலை 4,200 பிளாரின்ஸ் (சுமார் ரூபாய் 9,400) மட்டுமேயாகும்! எனவே, நெதர்லாந்து நாட்டில் தங்கத்தின் விலையைவிட பூச்செடியின் விலை அதிகமாக உள்ளது வியப்புக்குரிய செய்தி தானே!

மேலும் விற்கிறது. பெரிய வெங்காயம் பெரும்பாலும் நகர்ப் புறங்களிலேயே அதிகமாக விற்பனையாகிறது. பெரிய வெங்காயம் சாதாரணமாக கிலோ ரூ. 1·20-க்கு மேல் விற்கிறது. எனவே அதிக மகசூல் உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற விரும்பும் உழவர் பெருமக்கள் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளலாம்.

### சாகுபடி முறைகள்

**மண்:** வெங்காயம் பயிரிட, நன்கு இளக்கமுள்ள குறுமண், செம்மண், வண்டல் மண் ஆகியவை ஏற்றது. வடிகால் வசதியுள்ளதும், களிமண் அதிகமில்லாததுமான மற்ற வகை மண்களிலும் வெங்காயத்தைப் பயிரிடலாம்.

**பருவம் :** சிறிய வெங்காயத்தை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனல் ஜூன்-ஜூலையிலும், டிசம்பர்-ஜனவரியிலும் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். டிசம்பர் ஜனவரியில் பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம்.

பெல்லாரி வெங்காயத்தை ஜூன்-ஜூலை, டிசம்பர்-ஜனவரி பருவங்களில் பயிரிடுவதே சிறந்தது.

**வயது :** சிறிய வெங்காயத்திற்கு மூன்று மாதங்கள். பெரிய வெங்காயத்திற்கு 5 முதல் 6 மாதங்கள்.

**விதையளவு :** சிறிய வெங்காயம் பயிரிட ஏக்கருக்கு 450 கிலோ முதல் 550 கிலோ வரை விதை வெங்காயம் வேண்டும்.

பெல்லாரி வெங்காயம் பயிரிட வேண்டுமானல், பெல்லாரி வெங்காயத்தை நேரடியாக நடக்கூடாது. பெல்லாரி வெங்காய விதைகளை நாற்று விட்டே நட வேண்டும். ஒரு ஏக்கர் பெல்லாரி வெங்காயம் பயிரிட 2·25 கிலோ விதையை 5 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும்.

**நிலம் தயார் செய்தலும், உரமிடுதலும் :** நிலத்தை 4 அல்லது 5 முறை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக்கவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 முதல் 15 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு, 25 கிலோ அமோனியம் சல்பேட், 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு உழுது விடவேண்டும். அதன் பின் சிறிய வெங்காயம் பயிரிட பார் கலப்பையினல் 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளிகளில் பார் பிடிக்கவும். பெல்லாரி வெங்காயம் பயிரிட 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடை வெளிகளில் பார்பிடிக்க வேண்டும்.

**விதையூன்றுதல் :** சிறிய வெங்காயம் பயிரிட பார்களில் இரண்டு பக்கங்களிலும் 10 சென்டி மீட்டருக்கு (4 அங்குலம்) ஒன்று வீதம் விதை வெங்காயத்தை ஊன்ற வேண்டும். சில இடங்களில் தண்ணீர் விட்டு, பின்பு ஊன்றுவதும் உண்டு.

பெல்லாரி வெங்காயம் பயிரிட ஒரு மாத வயது உடைய நாற்றுகளை பார்களின் இரண்டு பக்கங்களிலும் 15 சென்டி மீட்டர் (5 அங்குலம்) இடைவெளிக்கு ஒன்று வீதம் நட வேண்டும்.

**நீர்ப்பாசனம் :** வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சலாம். மண்ணில் உள்ள ஈரம், மழை ஆகியவைகளுக்கு ஏற்ப நீர்ப்பாசன இடைவெளி நாட்களை மாற்றிக் கொள்ளலாம்.

**மேலுரமிடல் :** சிறிய வெங்காயம் நட்ட ஒரு மாதத்திற்குப்பின் 25 கிலோ அமோனியம் சல்பேட் இட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பெல்லாரி வெங்காயம் நட்ட ஒரு மாதத்திற்குப் பின் 45 கிலோ அம்மோனியம் சல்பேட் உரமிட வேண்டும்.

**பின்செய் நேர்த்தி :** களைகள் இல்லாதவாறு பயிரைப் பாதுகாக்க வேண்டும். நட்டு ஒரு மாதம் கழித்து வெங்காயம் சேதமாகாதவாறு கவனமாக மண் அணைக்க வேண்டும். நடவு செய்த 45 முதல் 60 நாட்களில் சிறிய வெங்காயத்தில் பூங் கொத்துகள் தோன்றும். இப் பூங் கொத்துகளைக் கிள்ளி எடுத்து விட்டால் வெங்காயம் நல்ல பருமனுக வளர்ந்து, அதிக மகசூலை அளிக்கும். இப்பூங்கொத்துகளை சமையலுக்குப் பயன் படுத்தலாம்.

**பயிர்ப் பாதுகாப்பு :** வெங்காயத்தை முக்கியமாகத் தாக்கும் பூச்சி 'திரிப்ஸ்' என்னும் செடிப் பேனேயாகும். இப்பூச்சிகள் வெங்காயத் தாள்களில் உள்ள சாற்றினை உறிஞ்சி விடுவதால், தாள்கள் வெளுத்துக் காய்த்துப்போகும். இதனல் வெங்காயத்தின் நல் வளர்ச்சி தடைப்பட்டு, அதன் மகசூல் குறைந்து விடும். இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ பி. எச். சி. 10 சத தூளைத் தூவலாம் அல்லது 3·2 கிலோ பி.எச்.சி. 50 சத மருந்தை 352 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது 360 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 360 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

வெங்காயத்தைத் தாக்கும் முக்கிய நோய் இலைப் புள்ளி நோயாகும் (Leaf spot). இதைத் தடுக்க 1 சத போர்டோ கலவை அல்லது தாமிர பூஞ்சாள மருந்தைத் தெளிக்கலாம். தற்பொழுது வெங்காயத்தில் புதிதாக 'இலைக் கருகல் நோய்' (leaf blight) ஒன்றும் தோன்றியுள்ளது. இதைத் தடுக்க ஏக்கருக்கு 1 கிலோ டைத்தேன் இஸட்-78 அல்லது சினப் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**அறுவடை :** வெங்காயத் தாள்கள் பழுப்பு நிறமடைந்து சாய்வது பயிரின் முதிர்ச்சியைக்காட்டுவதாகும். இதன் பின் நீர்ப் பாசனம் தேவை இல்லை. மணற்பாங்கான இடங்களில் வெங்காயத்தைக் கையினல் பிடுங்கி விடலாம். மற்ற மண்களில் வெங்காயத்தை களைக் கொத்தினல் தோண்டவும். இலைகளையும் வேர்களையும் அறுத்த பின் வெங்காயத்தை நிழலில் பரவலாக வைத்து 4 நாட்களுக்கு உலர வைக்கவும்.

**மகசூல் :** சிறிய வெங்காயம் ஏக்கருக்கு 4,000 கிலோ முதல் 5,500 கிலோ வரை மகசூல் கொடுக்கும். பெல்லாரி வெங்காயம் 5,000 முதல் 7,000 கிலோ வரை மகசூல் கொடுக்கும்.

பல வகையிலும் பயன்படும் வெங்காயத்தை மேற் கூறிய முறைகளில் சாகுபடி செய்து மகசூலைப் பெருக்கி, வருவாயையும் பெருக்கி வளமாக வாழுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேம்.

# எவரையும் கவரும் எளிய கலை!

பெருகிவரும் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ''அளவோடு பெற்று வளத்தோடு வாழ வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மக்களை எளிதில் கவரக் கூடிய சாதனங்களான, திரைப்படம், நாடகம், இசை, போன்றவைகளைப் பிரச்சாரக் கருவிகளாகக் கொண்டுள்ளனர். இந்த வரிசையில் புதிதாக இப்பொழுது சேர்க்கப்பட்டிருப்பது பொம்மலாட்டம். சமீபத்தில் புது டில்லியில் நடந்த பொம்மலாட்ட நிகழ்ச்சி ஒன்றில் நவீன உத்திகளோடும், நகைச்சுவையோடும் ஒரு பிரச்சாரக் காட்சியைக் காண்பித்தார்கள்.

ராம்லால் ஒரு பெரிய குடும்பத்தின் தலைவர். ஆனால் ஏழை விவசாயி. அவருக்கு 6 குழந்தைகள் இருக்கின்றன. விவசாயத்தில் போதிய வருமானம் இல்லாததால் தன்னுடைய ஆட்டை அடகு வைத்துக் கடன் வாங்குகிறார். அப்படியும் தனது குடும்பத்திற்கு முழு அளவில் உணவு அளிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறார். அப்பொழுது அவர் நண்பர் அர்ஜுன் ''திட்டமிட்ட குடும்பத்தின் பயனைப்பற்றிச்'' சொல்லுகிறார். அதற்கிணங்க ராம்லால் பெருகிவரும் தனது குடும்பத்தை நவீன முறைகளினால் கட்டுப்படுத்தி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்.

மிகச் சாதாரணமான சிறிய கதைதான். ஆனால் அதை நடத்தும் பாங்கு, கையாளப்படும் உத்திகள் நகைச்சுவையோடுகூடிய வசனங்கள் (ஆம், பொம்மைகள் பேசுகின்றன) இனிய இசை எல்லாம் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. இதைவிட இந்த பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்துபவர்ஓர் அமெரிக்கர்என்பதை அறியும்போது நம் வியப்பு இன்னும் பலமடங்காகிறது.

பில் பெர்டு (Bill Baird) என்ற இந்த அமெரிக்கர் 1922-ம் ஆண்டிலிருந்தே இக்கலையில் ஆர்வம் மிகக் கொண்டு சிகாகோ (Chicago) பல்கலைக்கழகத்தில் பொம்மலாட்டக் கலையில்



சிறப்பாகத்தேறிப் பட்டம் பெற்றவர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் பயணம் செய்திருக்கும்




நிகழ்ச்சியை நடத்தும் பில்பெர்டு

இவர் சொல்வது, ''இந்தியாவில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே மிகச் சிறந்தமுறையில் பொம்மலாட்டக்கலை இருந்திருக்கிறது. என்னுடைய கலை அறிவை உதயப்பூரைச் சேர்ந்த பொம்மலாட்டக்கலைஞர் ஒருவரிடம்தான் முழுமையாக வளர்த்துக் கொண்டேன்''.

எளிய மக்களைச் சிறந்த முறையில் கவர்வது பொம்மலாட்டம் தான் என்ற கருத்தைக் கொண்ட இவர் லக்னோ அருகில் டியோரி என்ற கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிக்குப்பின் சுமார் 600 குடும்பத்தினர் இதுபற்றிச் சிந்திக்கவும், விவாதிக்கவும் தொடங்கியிருப்பதைச் சான்றாகக் காட்டுகிறார்.

படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் ஏற்ற வகையில் வசனங்களை மாற்றித்தேவையான அளவு நகைச்சுவையைக் கூட்டி அல்லது குறைத்து, எந்த இடத்திலும் நிகழ்ச்சியை நடத்தத் தயாராயிருக்கும் இவர் நியூயார்க் நகரில், தினசரி ''ஹவுஸ் புல்''லாகும் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பொம்மலாட்ட அரங்கின் (தியேட்டர்) உரிமையாளர். ஆர்வமும், சுறுசுறுப்பும் கொண்ட இந்த 65 வயது ''இளைஞர்'' ஒரு புகழ் பெற்ற டெலிவிஷன் நிகழ்ச்சித் தயாரிப்பாளருங்கூட. இவர் தயாரிக்கும் கார்ட்டூன் படங்களும்—சிறுவர், சிறுமியர், கணிதப் பாடம் எளிதில் உணர்ந்துகொள்ள எடுக்கும் படங்களும் புகழ்பெற்றவை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் பிறந்த ஒரு கலை எப்படி வெளிநாட்டவர் ஒருவர்கைபட்டு நவீன மேடைஉத்திகளுடன் சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறது என்பது அவர் சமீபத்தில்அனைத்துலக (International) குடும்ப நலத் திட்ட நிறுவனத்திற்காக இந்த நிகழ்ச்சியைஆங்கிலத்தில் நடத்திக் காட்டிய போது புலனாயிற்று.



—எழிலன்.

—படங்கள் 'ஸ்பான்'




**வா**ன் என்ற சொல்லுக்கு மழை என்ற பொருள் உண்டு. மழையின்றி மாநிலம் இல்லை. பொன்னையும் பொருளையும் குவித்து வைத்திருந்தாலும் உணவின்றேல் உயிரேது? உணவை விளைவிக்க அடிப்படைத் தேவை நீர். அரசும் பண்டு தொட்டு இன்றுவரை பல்லாற்றானும் நீர் வளத்தைப் பெருக்குவதையே தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. ஆற்றல் கொண்டு கிளர்ந்து செல்லும் தன்படைக்குத் தடையாக நின்ற இமயத்தைக் கடிந்து அதன் உச்சியில் புலிக்கொடி பொறித்த பொன்னிவளவனாய கரிகால் பெருவளத்தான், காவிரிக்குக் கரையமைத்துக் கழனிகளுக்கு நீர் வழங்கும் பணியையே தன் உயர் பணியாக—உயிர்ப் பணியாகக் கொண்டான். '' நீர்இன்று அமையாது உலகு '' என்பதைக் குடவுலவியனார் என்ற பெரும்புலவர் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு எடுத்துரைக்கும் தன்மை நினைந்து மகிழ்தற்குரியது. '' வேந்தே! உன் பெயர் இவ்வுலகில் நிலைபெற்று நிற்க வேண்டுமென்ற வேட்கை உனக்கிருப்பின், நீ செய்ய வேண்டுவது இதுதான்! உடம்புக்கு நீர் இன்றியமையாதது. அவ்வுடம்போ உணவை முதலாக உடையது. உணவு என்பது நிலத்தோடு கூடிய நீர். எனவே நீரையும் நிலத்தையும் ஒன்றாகக் கூட்டியவர்கள் இவ்வுலகத்துக்கு உடம்பையும் உயிரையும் படைத்தவராவர். ஆதலால் செழிய! நிலங்குழிந்தவிடத்தெல்லாம் நீர் நிலைகளை விரைந்து தளைத்தோர் தம்பெயரை இவ்வுலகத்தோடு தளைத்தவராவர் '' என்பது அப்புறநானூற்றுப் புலவரின் கூற்று. உண்ணுகின்ற நீர்நிறைந்த கிணறுகளைத் தோண்டியவர்களைச் '' சாவா உடம்பெய்தியவர்கள் '' எனத் திரிகடுகம் உவந்து வாழ்த்துகிறது. ' வரப்புயர ' என்ற ஔவை வாழ்த்தின் வளத்தை நாம் அறிவோம். அவ்வாழ்த்தின் விரிவுரையாக—

சிலம்பொலி
சு. செல்லப்பன்
எம். ஏ., பி. டி.

'' வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ்-சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு ''

என்ற சிறுபஞ்ச மூலப் பாடல் அமைகிறது.

மழை, பார்மகளுக்குப் பச்சைப் பட்டாடையை நெய்துதரும் நெசவாளி! விண்முட்டும் முகடுகளில் மஞ்சுபடிந்து மழைபொழிவதால் அருவிகள் தோன்றி மலைகள் அழகு பெறுகின்றன. '' அருவிகள் வயிரத் தொங்கல், அடர்கொடி பச்சைப் பட்டே '' எனப் புலவர்கள் பாடிக் களிக்கின்றனர். அருவி நீர் பெருக்கெடுத்தோடிச் சமவெளிகளில் பாய்ந்து வயல்களை வளப்படுத்துகின்றது. வயல்களில் வாழை மரங்கள் செழித்து வளர்ந்து குலைகளைத் தள்ளுகின்றன. ' வளைந்து தொங்கும் தாறுகள் யானைகளின் துதிக்கைகளை நினைவூட்டுகின்றன. முற்றி அடி சாய்ந்துள்ள செந்நெற்கதிர்கள் குதிரைகளின் பிடரியை ஒக்கின்றன. நெல் மூட்டைகளை அடுக்கிச் செல்லும் வண்டிகளோ தேர்களாகின்றன. நெல்லறுப்பாரும், கட்டுகளைச் சுமப்பாரும் எழுப்பும் ஒலி போர்க்களத்தில் காலாட் படையினர் எழுப்பும் ஒலியை ஒத்திருக்கிறது. ' இவ்வாறு, கருங்கதலியாகிய யானைப்படை, செந்நெற் கதிர்களாகிய புரவிப்படை, வண்டிகளாகிய தேர்ப்படை, வினைஞர்களாகிய காலாட்படை என்ற நாற்படையையும் இயக்கிச் செல்லும் தானைத் தலைவனாக மருதம் அமையக் காரணமாயிருப்பது மழையேயன்றோ? மழையின்றேல் ' நானிலம் '' என்பதற்கு பொருளேயிருக்காது. அவை தம் பொலிவிழந்து ஒரே நிலமாக, பாலையாகி விடும். உலக இயக்கத்திற்கே காரணமாக மழை அமைவதால் வள்ளுவர் அதனை '' அமிழ்தம் '' என்கிறார்.

'' வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று ''

மழையின் சிறப்பை வள்ளுவர் மழையின்மையால் ஏற்படும் விளைவுகளைக் கொண்டு விளக்குகிறார். மழையின்றேல் உலகத்தைப் பசி வாட்டும். உழவர்கள் ஏர் கொண்டு உழ மாட்டார்கள். '' மேழி பிடிக்கும் கை, முகம் சோர்ந்து நிற்கும்; கலப்பை பிடிக்கும் கை கவினிழந்து நிற்கும்.'' பசும்புல்லின் தலையையும் காண முடியாது. கடலும் தன் வளங்குன்றிப் போகும். இவ்வளவேன்? வானோர்க்கு நடக்கும் திருவிழாவும் நடைபெறாது. ஆம். பசி வந்திட்டால் பக்தியும் பறந்துபோம்! பசித்தவனுக்கு உணவே பெருந் தெய்வமாய்த் தோன்றும்!

எளிய சிறுபாடல் ஒன்றைக் கண்ணுற்றேன். பாட்டு, தொடங்கியிருந்த முறையே அதைப் படிக்கத் தூண்டியது. '' தானதான தத்துவம்! இந்தத் தத்துவத்தைத் தப்பு என்றால் தடியெடுத்து மொத்துவோம் '' என்று தொடங்குகிறது பாடல். பாடலை இயற்றியவருடைய தத்துவத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் நமக்கு என்ன கிடைக்கும் என்பதை எடுத்த எடுப்பிலேயே கூறிவிடுகிறார். அவர் கூறும் அரிய தத்துவம்தான் என்ன? '' உள்ள தெய்வம் கல்லடா '' என்கிறார். உண்மைதான்! கோவிலில் அமைந்திருக்கும் தெய்வ உருவங்கள் கல்லால் ஆனவைகள் தாமே! அடுத்து ' உலாவும் தெய்வம் செம்படா' எனக் குறிக்கிறார். கோவிலில் உள்ள தெய்வம் கல்லாலானது; அது உலா வராது. உலாவி வரும் தெய்வ வடிவோ செம்பாலாயது. இவை இரண்டுமே பேசா வடிவங்கள். பேசக்கூடிய தெய்வங்கள் உண்டா? உண்டு என்கிறார். அவை எவை என்பதை அவரே எதிரில் இருப்பவனை நோக்கிக் கூறுகிறார். '' பேசும் தெய்வம் நீயடா, நானடா.'' கோவிலில் உள்ள கற்றெய்வமும், உலா வரும் செம்புத் தெய்வமும் பேசமாட்டா. பேசும் வடிவங்கள்—தெய்வங்கள்—நீயும் நானும்



தான். இவை போகட்டும். இவற்றை விடப் பெரிய தெய்வம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா ? அதுதான் சோறு.'' பெரிய தெய்வம் சோறுடா '' என்று பாடல் முடிகிறது.

பசி வரும்போது, அனைத்து நெறிகளையும் மறந்து உணவையே கருதும் எண்ணம் தோன்றிவிடுகிறது.

'' சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு ''

என்ற குறட்பா மூலம் இக்கருத்து விளக்கம் பெறுகிறது. இம்மட்டோ? மழை பெய்யவில்லையாயின் தானமுமில்லை. ஏன்? தவம் கூட இல்லையாகும்.

கைம்மாறு கருதாது உதவி செய்பவர்களை மழைக்கு நிகராக்குகிறார் வள்ளுவர். தமக்கு உதவும் மழைக்கு உலகத்தார் என்ன கைம்மாறு செய்கின்றனர்? ஒன்றுமில்லையே! அது போன்றே மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைமாறு வேண்டாதவையாம்! புகழ்பொருந்திய செல்வர் உற்ற சிறிய வறுமை, மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மை உடையது என்பார். அன்பு பூண்ட காதல் வாழ்க்கையில் தலைவன் தலைவிபால் காட்டும் அன்பு. உயிர் வாழ்கின்றவர்க்கு மேகம் மழை பெய்து காப்பாற்றுதலைப் போன்றது என்றுரைப்பார். எட்டுத் தொகையில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நற்றிணையின் முதற் பாடலில் ஒரு தலைவி தம்மையின்றியமையாத நிலையைத் தனக்குத் தந்துவிட்ட தலைவனை எண்ணுகின்றாள். தலைவனில்லாமல் தானில்லை என்பதனை விளக்க உலகம் உணர்ந்து அறிந்து கொண்டிருக்கின்ற உவமை ஒன்றனைக் காட்டுகின்றாள்.

''நீர்இன்று அமையாது உலகெனின் யார்
யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு''

என்னும் குறட்பாவைப் பலமுறை படித்துப் படித்து நெஞ்சிலே பதித்துக் கொண்டவள்போலத் தோன்றும் அவள்,

''நீரின் றமையா உலகம் போலத்
தாமின் றமையா நந்நயந் தருளி''

என்று பேசுகின்றாள். வான மழை வையகக் காதலுக்கும் உவமையாகி வாழ்விக்கிறது; வாழ்கிறது.

இன்று உலகில் அழகுப் போட்டிகள் நடைபெறுகின்றன. செய்தித் தாள்களில் அவ்வப்போது ஆணழகன் தேர்வு, உலக அழகி தேர்வு என்ற செய்திகளைக் கண்ணுறுகிறோம். பொருள்களின் அளவுகளைமதிப்பிட நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை போன்ற அளவைகள் நடைமுறையில் உள்ளன. அழகை மதிப்பிட அளவுகோல் உண்டா? ஆனால் ஒன்று;போட்டியில் கலந்துகொள்பவர்களில் கருப்புநிறம் உடையோரைக் காணமுடிவதில்லை. மேடைமீது கருமை நிறம் கொண்டோர் நின்றால் ''நெருப்புக் குளியல்! இதற்குப் போட்டி வேறா?'' என்று கூறிவிடுவர். எவ்வாறோ மக்களில் சிவப்பு நிறம் உடையவர்களை அழகியோர் என்று எண்ணும் நிலை வளர்ந்து விட்டது. வள்ளுவரோ கருமையைத் தான் அழகு என்று குறிப்பிடுகிறார். தன்னுடைய ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட் பாக்களிலும் 'எழில்' என்ற சொல்லை இரண்டு இடங்களில் மட்டுமே கையாளுகிறார். எழில் என்பதற்குப் பொருள் அழகு என்பதாம். நுட்பமான மாட்சியுடையதாய், ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய அழகு, மண்ணால் புனையப் பெற்ற பாவைக்கு ஒப்பானதாகும்.

''நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று''

இஃது எழில் என்ற சொல்லைக் கையாண்டுள்ள ஓரிடம். மற்றோரிடத்தில் அழகே உருக்கொண்டது என்ற வகையில் எழில் என்ற சொல்லைக் கையாளுகிறார். விண்ணில் மிதந்து செல்லும் கருமேகத்தை அழகின் திரட்சியாக-எழிலியாக-வள்ளுவர் காண்கிறார்.

''நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்
தெழிலி
தான்நல்கா தாகி விடின்''

கருமேகத்தை அவர் அழகு என்று எண்ண யாது காரணம்? அக் கருமேகத்தின் செயலைக் கருத்தில் கொணர்ந்து காண்கிறார். நீருண்ட கருமேகம், சூலுற்ற மாது போல செல்கிறது. இடையில் மலை தடுக்கிறது; உடன் மழையாக மாறுகிறது; நீராகப் பெருக்கெடுத்து ஓடி, நிலங்களில் பாய்ந்து நெல்லையும், கரும்பையும் மற்றும் பல்பொருள்களையும் விளைவிக்கிறது. மழையாக மாறும்போது மேகம் அழிகிறது. தன்னை அழித்துத் தண்ணீராக மாறி, மண்ணை வளமாக்கி மக்கள் குலத்துக்குப் பயனாகிறது. இவ்வாறாகத் தாம் அழிவதாயினும் வருந்தாது, பிற உயிர்கள் வாழப் பெருந் தொண்டாற்றுபவர்களே அழகுடையவர்கள் ஆவார்கள். ஒப்புரவால் கேடு வரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதியுடையது என்கிறார் திருவள்ளுவர்.

அழகு என்பது நிறத்தினால் அல்ல; உலகுக்குப் பயன்படும் தன்மையால் என்பதை வலியுறுத்தத் தான் போலும் வள்ளுவர் மேகத்தை 'எழில்' என்றார். ஈகைப் பண்பால் எழில் பெற்று விளங்குகின்ற வானத்தின் ஈடற்ற நிலைமையை வள்ளுவர் உள்ளம் ஓரிடத்திலே மட்டும் எண்ணி நின்று விடாமல் நெடுக நினைந்து செல்கின்றது. செங்கோன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பேசும் வள்ளுவனார்-அரசன் விளையும் பொருள்களைத் தக்காங்கு வகுத்துத் தந்து பாதுகாப்பினைக் குடிகளுக்கு வழங்க முடியும்; ஆயின் அவ்வரசனும், குடிகளும், மற்ற உயிர்களும், தத்தமக்குள்ளே ஒருவரையொருவர் நோக்கி வாழும் நிலையினராக இருப்பினும், ஒருமித்த நிலையில் எதனை நோக்கி வாழ வேண்டியிருக்கின்றது; வானத்தையல்லவா? அதனால்-''வான்நோக்கி வாழும் உலகெல்லாம்'' என்றார். அருள் இல்லாது ஆட்சி செய்யும் அரசனின் கீழ் வாழும் குடிகளின் பொலிவிழந்த தன்மைக்கு மழைத்துளி பெறாத உலகை எடுத்துக்காட்டாக்குகின்றார். மங்கல வாழ்த்துப் பாட வந்த சேரன் தம்பியும் தன் காப்பியத்தில், திங்களைப் போற்றிச் செங்கதிரைப் போற்றி நிற்காமல், ஒளிப்பொருள்களாகிய இவற்றோடு ''மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்'' என்கிறார். வள்ளுவர் வழி நின்று பாடும் அவரோடு நாமும் சேர்ந்து ''மாமழை போற்றுவோமாக!''




நெ.து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

3

'கல்லூரிப்பாட திட்டங்கள் மாற்றப்படவேண்டும்; புதிய உண்மைகள், கண்டுபிடிப்புகள், கருத்துகள், இடம்பெறவேண்டும். பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போனவற்றை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருத்தல் தவறு' இதுதான் தெளிந்தோர் கருத்து.

பாடத்திட்டங்கள் நவீனமாக வேண்டுமென்றால், புதிய உண்மைகளுக்கு இடங் கொடுக்க வேண்டுமென்றால், ஊளுத்துப்போன பழைய செய்திகளும், தகவல்களும் இடம் விட்டு நகரவேண்டும். பழைய செய்திகளின் அடிப்படையில் பாட நூல்களை எழுதியுள்ள நம்மவர்களும் உண்டு. புதிய பாடமுறை வரும்போது, பழைய பாட நூல்கள் பயனற்றுப் போகும். ஆசிரியருக்கும் நட்டம்; நூல் வெளியிட்டாருக்கும் நட்டம். இருசாராரின் தன்னலத்திற்கும் எதிரானவை, புதிய பாட திட்டங்கள்.

பாட நூல்கள் எழுதாதவர்களுக்கும், பழைய பாடங்களே இருப்பதுவசதி. ஏன்? பல்லாண்டுகளாகச் சொல்லிக் கொடுத்த பாடங்களைக் கற்பிப்பது எளிது. வகுப்பிற்கு வகுப்பு ஆயத்தஞ் செய்து கொண்டிருக்கவே தேவையில்லை. புதிய பழக்கங்களை மேற்கொள்ளப்புதிய தனிச் சிந்தனை தேவை; அதைவிட அதிகம் துணிச்சல் தேவை. அதேபோல், புதுப்பாட முறைக்கு, புதுப்புதுச் சிந்தனை தேவை. பழகாத பாடங்களாகையால், அவைகளை சமாளிக்க துணிச்சல் தேவை. எந்தச் சமுதாயத்திலும் இவை இரண்டும் பரவலான உணர்ச்சிகள் அல்ல. உள்ளத்தைக் காக்கும் இயல்பினரே, 'மாறார்'. 'அவர்கள் உளர்' என்பதை உணர்ந்து, அவர்கள் மனப் போக்கை ஓரளவு மாற்ற, ஒழுங்கான, திட்டமிட்ட முயற்சிகளை முன்னேறிய நாடுகள் மேற்கொள்ளுகின்றன. நாம் இவ்வழியில் செய்ய வேண்டியதைப் பின்னர், காண்க.

'மாறாரும்' 'தன்னலக்காப்பரும்' உள்ள சூழ்நிலையே எங்கும். அதற்காகச் செய்யவேண்டியவற்றைச் செய்யத்தவறக்கூடாது அதில் காலதாமதமும் கூடாது என்று, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு கருதியது. விளைவு?

இவ்வாண்டு, ஜூன் திங்கள், 'கல்விக்குழு'க்கள் மாற்றியமைக்கப்பட்டன. அக்குழுக்களில் பிற பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களும் உண்டு. ஏன்? புதிய காற்று வீசுவதற்காக. ஒவ்வொரு பாடத் துறைக்கும் ஒரு குழு உண்டு. அக் குழுக்களை மாற்றி அமைக்கும்போது,

'ஒவ்வொரு பாடத்திட்டத்தையும், முழுமையாக, மறுபரிசிலனை செய்யவும், அதைக் கூடிய அளவு தற்காலப்பாட மாக்கித் தரும்படி கல்விக் குழுக்களைக் கேட்டுக் கொள்ள முடிவுசெய்யப்பட்டது. பொருள் என்ன? இதை, இதை இப்படி இப்படி மாற்ற வேண்டுமென்று, ஆட்சிக்குழுப் பெரியவர்கள் ஆணையிடாமல், கல்விக் குழுக்களிலுள்ள நிபுணர்களின் சிந்தனைக்கும், ஆலோசனைக்கும், கருத்துக்கும் பாடதிட்ட மாற்றங்கள் விடப்பட்டன.

துணை வேந்தர், எல்லாக்கல்விக் குழுக்கூட்டங்களிலும் கலந்து கொள்ள உரிமை உடையவர். கருத்து தெரிவிக்கவும் உரிமை உடையவர். ஆயினும், கல்விக் குழுக்களின் முதற்கூட்டங்களில் கலந்து கொண்டு, கருத்தினைச் சொல்லும்சாக்கில், கட்டுப்படுத்த விரும்பவில்லை. எனவே, பேராசிரிய நிபுணர்களே, தங்களுக்குள் ஒளிமறைவின்றிப் பேசி முடிவு எடுக்க விட்டு விட்டோம்.

குழுக்கூட்டங்கள் நடந்தன. ஒவ்வொன்றிலும் மனம் விட்டுப் பேசினர். பாடத்திட்டங்களை மாற்றிப் புதியதாக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டனர். அதற்கான உட்குழுக்களை அமைத்தனர். அவை, ஒவ்வொரு நிலை பாடத்திட்டத்தையும் விரிவாக அலசிப் பார்த்துப்புதுப்பிக்க வழி சொல்லும்.

மாற்றமென்றால், உள்ளதை உள்ளபடியே,

துலக்கிப் பளபளக்க வைப்பதா? அல்லது சில பாடங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்கி, முன்னிலும் அதிகமாகவும் சீராகவும் கற்க வகை செய்வதா ? பிந்தியதாயின், அதிக நேரத்தை எப்படிக் கண்டு பிடிப்பது ? இக் கேள்விகள் எழுந்தன. இவற்றிற்குப் பொதுவிடைகள் காண வேண்டும், இல்லாவிட்டால் குழப்பம் விளையும். பட்டப் படிப்பில் வேதியல் பாடத்திற்கு ஓரளவு காலமும் பௌதீக பாடத்திற்கு வேறோரளவு காலமும் ஒதுக்கினால் என்னவாகும் ? வேதியல் மாணவர்களுக்குக் கிடைக்கும் மொழிப்பாடக்காலம் ஒன்றாகவும், பௌதீக மாணவர்களுக்குக் கிடைக்கும் மொழிப் பாடக் காலம் வேறாகவும் அமையும். இப்படி ஒவ்வொரு பாடப் பிரிவிற்கு ஒவ்வொரு வகையாக, மொழி நேரம் ஒதுக்குதல், நிர்வகிக்க முடியாததாகும். வெவ்வேறு பிரிவு மாணவர்களுக்கும், தாம் படிக்கும் மொழி அளவு சரியா, தம்மைவிட மற்றொரு பிரிவினர் அதிக இலாபம் பெற்று விடுவார்களோ என்று அச்சமும் குழப்பமும் ஏற்படும். ஆகவே எல்லோருக்கும் பொதுவான அடிப்படையில், மொழி நேரத்தையும், பாடநேரத்தையும் பங்கிட்டு விட்டால், அதற்கேற்ப, மொழிப்பாடத் திட்டங்களையும், பிற பாடத் திட்டங்களையும் மாற்றியமைக்க முடியும். இதுவும் ஒருமித்த கருத்து.

பாடங்களுக்கு நேரங்களைப் பங்கிடுதல், பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பொறுப்பு. அப்பொறுப்பினை மேற்கொள்ளும் முன்னர், உரியவர்களின் ஆலோசனையைக் கேட்கும் மரபினை மேற்கொண்டது. ஆட்சிக் குழுவின் ஆலோசனைப்படி, கல்விக்குழுக்களின் தலைவர்களோடு, துணைவேந்தர் கலந்து ஆலோசித்தார்.

முதலில், மொழிபற்றிய கல்விக் குழுக்களின் தலைவர்கள், தனியே, துணைவேந்தருக்கு ஆலோசனை கூறினார்கள். அவர்கள் நான்கு திட்டங்களை, ஆய்ந்தார்கள். அவை வருமாறு:

(1) பட்டப்படிப்பில் மொழிப் படிப்பைக் கட்டாய நிலையிலிருந்து நீக்கிவிடுவது ; விரும்பும் மாணவர் விரும்பும் மொழியைப் பாடமாக்கிக் கொள்ள விட்டுவிடுதல். இதுவே மேனாடுகளில் நடைமுறையிலிருக்கும் முறை.

(2) இப்போதிருப்பதுபோல், இருமொழிகளையும் இதே அளவு கட்டாயப்படுத்துவது.

(3) இப்போதிருப்பதுபோல் இருமொழிப் படிப்பைக் கட்டாயமாக்குவது. ஆனால், ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்வது.

(4) ஒரு மொழியை மட்டும் கட்டாயமாக்குவது ; அதற்கும் ஒதுக்கும் காலத்தைக் குறைப்பது. மற்றொரு மொழியை விரும்பியவர்க்கு மட்டும் கற்றுக் கொடுப்பது.

மேற்கூறிய நான்கின், நன்மை தீமைகளை மனம்விட்டுப் பேசினார்கள், குழுத்தலைவர்கள்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா ஆகியவை தொழிற்றுறையில் ஓங்கியுள்ள நாடுகள். அந்நாட்டவர் யாரும், வேலை தேடிக்கொண்டு, பிற நாட்டிற்குப் போகவேண்டிய தேவை இல்லை. ஆகவே அவர்களுக்குத் தம் தம் தாய்மொழி அறிவு போதும். பிற மொழி அறிவு, நம்மளவு, தேவையில்லை. தாய்மொழி அறிவை போதுமளவு பள்ளியிலே பெற்றுவிடுவதால், கல்லூரியில் தாய்மொழிப்படிப்பு கட்டாயமாக்கத் தேவையில்லை. நாம் அந்த நிலையில் இல்லை. நாம் வேலைதேடி வெளியே போகவேண்டியநிலையில் இருக்கிறோம். நம்நாடோ அந்நாடுகளைப் போல் ஒரு மொழி நாடல்ல. பல மொழிநாடு, இந்நிலையில் நம் மாணவர்கள் பிற மொழிப் பகுதிகளுக்குப் போக வேண்டும். மேலும் அந் நாடுகளில், தம், தம் தாய்மொழி ஆட்சிமொழியாகி பலநூற்றாண்டுகள் ஆகிவிட்டன. எனவே ஆட்சி மொழியும், மக்கள் மூச்சுமொழியாகிவிட்டது. அந்நாடுகளின் மொழி முறையைப் பின்பற்றும் நிலை, இன்னும் உருவாகவில்லை என்பது அவர்கள் கருத்து.

கற்பிக்கும் முறைகளைச் செம்மைப் படுத்துவதால் கற்கும் திறத்தை வளர்க்க முடிந்தால், இப்போது ஒதுக்கும் கால அளவிலேயே, 'பாடங்களை'த் தற்கால அளவிற்குக்கற்றுக்கொடுக்கலாம். பாடங்களில் ஏற்படும் திறன் குறைவாக இருந்தால் உலக வாய்ப்புப் போட்டிகளைச் சமாளிக்க முடியாது. மொழித் திறன் பாடத்திறன் குறைவை முழு அளவு ஈடு செய்யாது. இன்றையப் பாடங்களுக்கு அதிக நேரம் தேவை. முன்னிலும் அதிக நேரம் தேவை. மொழி நேரப் பங்கீட்டை அப்படியே வைத்திருந்தால், பாடங்களுக்குப் போதிய நேரம் கிடைக்காது. எனவே மொழி நேரத்தை ஓரளவு மாற்ற வேண்டும் என்பது வெளியாயிற்று.

மொழி நேரத்தை மாற்றுவது மொழித்திறனைப் பாதிக்காத வகையில் அமைக்க முடியுமா என்பதும் பேசப்பட்டது.

முன்பெல்லாம், நம் பல்கலைக் கழகத்தில் கூட, அறிவியல் பட்ட மாணவர்களுக்கு ஒரு மொழியே —ஆங்கிலமே— கட்டாயமாக இருந்தது. அதற்கும் இப்போது ஒதுக்கும் அளவு நேரம் ஒதுக்கவில்லை. வாரத்திற்குச் சிலமணிகளே ஒதுக்கினார்கள். இதையும் சுட்டிக்காட்டிஆலோசித்தார்கள்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு, தொடங்கிய அம்முறை விடுதலை பெற்ற சூழ்நிலைக்குப் பொருந்தாது என்பதாலே, சில ஆண்டுகளாக, அறிவியல் மாணவர்களுக்கும் இருமொழி முறை வந்துள்ளது. ஒருமொழியென்றால், 'ஆங்கிலமே' அனேகமாக இடம் பெறும், இன்றுள்ள உணர்ச்சி நிலையில்.

இன்றைய மாணவர், நாளைய அலுவலர். அந்த அலுவல், இங்கா அங்கா ? எங்கே என்பதை உறுதியாகக்கூற முடியாது. இப்போதைய நிலையில் வெளிநாட்டு அலுவலுக்கும் வழி விடவேண்டும். இதுவா ? அதுவா ? என்று ஒரு மொழிக் கொள்கையை மேற்கொள்வது, பேச்சுக்குக் கவர்ச்சியாக இருக்கலாம். எதிர்கால வாழ்க்கைக்குப்போதுமா என்பது இன்னும் தெளிவாகாத ஒன்று. எனவே, விடுதலைக்கு முந்திய நிலைக்குத்திரும்புதல் தீங்காக முடியுமென்று நிபுணர்கள் கருதினர். மிச்சம் என்ன ?

இப்போது போல், இனியும் இருமொழி முறையைத் தொடர்வது. ஒவ்வொரு மாணவரும் இருமொழி கற்றுத் தேறவேண்டும். மற்றொன்றையும் நினைவு படுத்திக் கொண்டோம். அது என்ன ?.

பி.ஏ., பி.எஸ்.சி. பட்டப் படிப்பு, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பிரிவு தமிழ் அல்லது தெலுங்கு முதலிய இந்திய மொழியோ அல்லது ஜெர்மன், பிரஞ்சு போன்ற பிற மொழியோ. இரண்டாம் பிரிவு, ஆங்கிலம், மூன்றாம் பிரிவில், வரலாறு, பொருளியல் ஆகிய கலைப் பாடங்கள் கற்கலாம். அல்லது வேதியல், பௌதீகம், கணக்கு ஆகிய அறிவியல் பாடம் படிக்கலாம். இவ்விரு தொகுப்புகளை விட்டு விட்டு, மூன்றாம் பிரிவில் கூட மொழிப்பாடத்தையே படிக்கலாம். பன்னிரண்டாம் பிரிவில் தமிழ் மொழியையோ ஆங்கில மொழியையோ பிறிதொருமொழியையோ, பிற பாடங்களுக்குப் பதிலாகப் படிக்கலாம். அதாவது மாணவர் ஒருவர், முழுக்கமுழுக்க மொழிப் பாடங்களோடு நின்று விடலாம். அவருக்கும் பட்டம் உண்டு. எடுத்துக் காட்டாக, தம்பியொருவர், முதற் பிரிவில் தமிழும், இரண்டாம் பிரிவில் ஆங்கிலமும், மூன்றாம் பிரிவிலும் ஆங்கிலமும் படிக்கலாம். இரண்டாம் பிரிவில் ஆங்கிலம் படித்து மூன்றாம் பிரிவில் ஆங்கிலம் படிக்கும் போது, இரண்டிற்கும் பாடத் திட்டத்தில் வேற்றுமையிருக்க வேண்டாமா? இரண்டாம் பிரிவில் மொழி கற்பதற்கு முதலிடமும், மூன்றாம் பிரிவில் இலக்கியக் கல்விக்கு முதலிடமும் கொடுப்பதே முறை என்று கருதினார்கள் மொழி நிபுணர்கள். 'மொழி கற்பதற்கும் இலக்கியம்' வேண்டுமென்பதை அறியாதவர்கள்அல்ல அவர்கள். மொழி கற்கும்போது இலக்கியத்தைக்கையாளும் முறை வேறு. இலக்கியக் கல்வியின் போது இலக்கியத்தைக் கையாளும் முறை வேறு ; இவற்றைக் கருதி, ஆங்கிலத்தில், சேக்ஸ்பியரின் நாடகத்தையும், மில்டனின் கவிதையையும், மூன்றாம் பிரிவில் இணைத்து விட வேண்டும் என்கிறார்கள். இரண்டாம் பிரிவு ஆங்கிலத்திலிருந்து இவற்றைமூன்றாம் பிரிவுக்கு மாற்ற முடிவு செய்தார்கள். நடுநிலையிலிருந்து காண்போர் யாரும்இந்த பிரிவுமாற்றத்தைத் தீங்காகக் கருதமாட்டார்கள். யாருக்கு இலக்கியத்தில் விருப்பமோ, அவருக்கு நிறைய இலக்கியமும் மற்றவர்களுக்கு, மொழித் திறனுக்கு வேண்டிய அளவு நடைமுறை ஆங்கிலமும் தர, நிபுணர்கள், தன்னிசையாக செய்த முடிவிற்கு மாறாக, நம் உணர்ச்சிகளைவளர்த்துக்கொள்ள தேவையில்லை.

ஆங்கில மொழிக்கு வாரத்தில் ஆறு மணி என்பது, ஏற்கனவே கூறப்பட்ட ஆலோசனை. இப்போது திடீரென முளைத்ததல்ல. அதை இப்போது ஒப்புக்கொண்டார்கள். அவ்வளவே! ஆங்கில மொழிக்குச் சமமான நிலை தமிழ் முதலியமொழிகளுக்கும்கொடுக்க முடிவு செய்தார்கள். அந்த அளவிற்கு உலகம் அறிந்தவர்கள் மொழி நிபுணர்கள்.

மொழிபற்றிக் கலந்துரையாடும் போது, மொழி வகுப்புகள் மிகப் பெரிதாக இருக்கும் குறை சுட்டிக் காட்டப்பட்டது. இக்குறை இதற்குமுன் பல முறை காட்டப் பட்டது. வகுப்புக்கு நூறு மாணவர்கள் என்பது சமாளிக்க முடியாத நிலை என்பதிலே கருத்து வேற்றுமையிராது. எவ்வளவுக்குக் குறைக்கலாம் என்பதை, மொழிக் கல்விக்குழுக்கள் கலந்து பேசி முடிவு செய்ய உரிமை கேட்கப்பட்டது. அவ்வுரிமை கொடுக்கப்பட்டது. 'பிரிவு' தோறும்ஒதுக்கும் ஆங்கிலப் பாட நேரம் குறைந்தாலும், வகுப்பு உச்ச எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம், குறிப்பிட்ட எண்ணிக்கைஉள்ள வகுப்புக்கு அதிகப் பிரிவுகள் தேவைப்படும். அது கல்லூரிக்கு மொத்த ஆங்கிலப் பீரியடுகளும் 'தமிழ் மணி'களும் குறையாது காக்கும். எனவே, ஆசிரியர் நீக்கப்படத் தேவை ஏற்படாது.

(இன்னும் வரும்)



இன்சூரன்ஸ் ஏஜெண்ட் :

உங்கள் அலுவலகச் சாமான்கள் எல்லாவற்றையும் இன்சூர் செய்துவிடட்டுமா ?

அலுவலக நிர்வாகி :

அந்தக் கடிகாரத்தைத்தவிர.. வேலைசெய்பவர்கள்தான் எப்போதும் அதைப் பார்த்த வண்ணமிருக்கின்றனரே..

தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்.

* * *

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;

* * *

இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.

* * *

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

— பாரதியார்.

## வண்ணப் படங்களில்

### 42-ம் பக்கத்தில்

1. சென்னைக்கு வருகை தந்த மேற்கு ஜெர்மனி நாட்டுப் பத்திரிகையாளர்கள் முதல்வர் கலைஞரை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிடும் காட்சி (26-11-1970).

* * *

2. சென்னையில் குருநானக் கல்லூரிக்கு, முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில், தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். படத்தில் ஆளுநர் உரையாற்றுவதைக் காணலாம். கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் படத்தில் உள்ளார்கள்.

* * *

3. தேசிய மாணவர் படையின் 22-வது ஆண்டு விழா நேரு அரங்கத்தில் நடைபெற்றது. மாணவர் படையின் அணி வகுப்பினைக் கல்வியமைச்சர் பெற்றுக் கொள்ளும் காட்சி(22-11-1970)

* * *

4. இந்தியப் பயிற்சி நிறுவனத்தில் (ஐ.டி.ஐ.) ஆறாவது அனைத்திந்தியத் திறமைப் போட்டியில் தமிழகம் முதல் மாநிலமாக வெற்றி பெற்றது. மைய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையாவிடம் வெற்றி பெற்ற மாணவர் பரிசு பெறுகிறார். மாநிலத் தொழிலாளர் நல அமைச்சரும், தொழிலமைச்சரும் அருகே உள்ளனர். (28-11-1970).

* * *

5. மன நோயுள்ளவர்கள் பற்றிய மூன்றாவது தேசியமாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் 4-12-1970 அன்று நடைபெற்றது. அதையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சியினை தமிழ் நாடு ஆளுநர் அவர்களும், வேளாண்மை அமைச்சர் அவர்களும் பார்வையிடுகின்றனர்.

* * *

6. சிம்லாவில் நடந்த அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிவாகைசூடித் திரும்பினர் தமிழகக்காவல்துறை வீரர்கள். 23-11-1970 அன்று அவர்கள் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் வந்திறங்கியதும் காவல் துறைத் தலைவர் திரு ஆர். எம். மகாதேவன் மாலைசூட்டி வரவேற்றார்.

* * *

7. இளங்குற்றவாளிகள் நல்வழிக் கழகத்தின் 15-வது ஆண்டு விழா பெரம்பூரில் உள்ள காவல் துறை ஆணையாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது (23-11-1970). அதில் அமைச்சர் திரு கே. வி. சுப்பையா உரையாற்றுகிறார்.

* * *

### 39-ம் பக்கத்தில்

1 & 2. சென்னையில் கடந்த நவம்பர் திங்கள் 22, 23 தேதிகளில் இடைவிடாது பெய்த பெரு மழையினால் சேதம் அடைந்த பகுதிகளை, முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிஅவர்களும் உணவு-உள்ளாட்சி அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்களும், வேளாண்மை-அரிசனநல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களும் பார்வையிடுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் உணவு வழங்குகிறார்.

* * *

3. சென்னை தேனாம்பேட்டையில் மாநகராட்சிப் பூங்காவினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். நகரத் தந்தை திரு. வை.பாலசுந்தரம், குடிசைப்பகுதி வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., திரு வி. முனுசாமி எம். சி., ஆகியோரும் உடன் உள்ளனர்.

* * *

4. முதல் 7 வரை திருவண்ணாமலையில் நிலமற்ற ஏழை மக்களுக்கு முதல்வர் பட்டா வழங்கிடும் காட்சி.

* * *

6. பட்டா பெற்ற நிலமற்ற ஏழைகளில் சிலர்.

* * *

### மையப் பக்கத்தில்

**வைகை அணைக் காட்சிகள்**

## வெண்பாப் போட்டி-6

**"பொங்கல்...... எனத் தொடங்கிக் கரும்பு" என முடியும் வகையில் நேரிசை வெண்பா அனுப்புமாறு வேண்டுகிறோம்.**

**முடிவு நாள் : 2—1—1971.**



பரிசு : ஓராண்டு **தமிழரசு** அன்பளிப்பு.


வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

**ஆசிரியர்** (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.


குறிப்பு : முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா !


1
2
3
4
5
7









வைகை அணைக் காட்சிகள்




VIEWS OF VAIGAI DAM






1



GURU NANAK COLLEGE
MADRAS
FOUNDATION STONE
LAID BY
HIS EXCELLENCY
SARDAR UJJAL SINGH
OF
HON'BLE THIRU M. KARUNANIDHI
2



3


4


5







# மகளிர் பகுதி

இந்த இதழின் இன்னொரு பகுதியில் வெங்காயத்தின் மகிமை வெளியாகியுள்ளது.

அந்த மகிமைக்குரிய வெங்காயத்தை நாம் பலவகையில் பயன்படுத்தி வருகிறோம். புதியவகை உணவுகளாக உள்ள சப்பாத்தி போன்றவற்றை நாம் தயாரிக்கும்போது, அவற்றிற்குத் தகுந்தாற்போல் கறிவகைஉடன் இருப்பின் உணவின் சுவை மேலும் அதிகமாவது இயற்கையே. சப்பாத்திக்கு ஏற்ற வெங்காய 'குக்கும்பர்' செய்து சாப்பிட்டால் அதன் சுவையே தனி! வெங்காயம் சேர்ந்த ஒரு சில உணவுப் பொருள்கள் பற்றிய குறிப்பினை இப்பகுதியில் விளக்கியுள்ளோம்.

## வெங்காய குக்கும்பர்

### தேவையான பொருள்கள்
### (அளவு 8 பேர்களுக்கு)

வெங்காயம்—550 கிராம்
கொத்தமல்லிக்கீரை—சிறிய கட்டு ஒன்று
பச்சை மிளகாய்—10 கிராம்
எலுமிச்சம்பழம்—4 மூடிகள்
தக்காளி—$\frac{1}{4}$ கிலோ
உப்பு—ருசிக்குத் தக்கபடி

**செய்யும் முறை :—**

வெங்காயத்தைப் பொடிசாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். (நீளவாகிலும் அறியலாம், குறுக்கு வசத்திலும் அறியலாம்) நன்கு பொடிசாக இருக்கவேண்டும். பச்சை மிளகாயை, நீளவாக்கில் நறுக்கி, பின்னர் பொடிசாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். தக்காளியைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கவும். கொத்தமல்லித் தழையைப் பொடிசாகக் கிள்ளி வைத்துக்கொள்ளவும். இவையெல்லாவற்றையும் ஒன்ருக ஒரு கிண்ணத்தில் போட்டு, உப்பையும் உடன் சேர்த்து, எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து ஊற்றி நன்ருகக் கிளறிவிட்டுச் சப்பாத்திசாப்பிடுவதற்கு வைத்துக்கொள்ளலாம். இதனை மட்டன் குழம்பு வைக்கும் போதும் தயாரித்துச் சாதத்திற்கு வைத்தும் உண்ணலாம்.

## உருளைக்கிழங்கு பிரியாணி

### தேவையான பொருள்கள்
### (அளவுகள் 8 நபர்களுக்கு)

புலவு அரிசி—450 கிராம்
பயத்தம்பருப்பு—225 கிராம்
உருளைக்கிழங்கு—450 கிராம்
நெய்—30 கிராம்
பூண்டு—பெரிய பூண்டு 3
தேங்காய்—1 தேங்காய்
இஞ்சி—1 துண்டு
வெங்காயம்—120 கிராம்
கொத்தமல்லி—$\frac{1}{2}$ கொத்து
தயிர்—60 கிராம்
லவங்கப்பட்டை—1 துண்டு
மஞ்சள் பொடி—1 சிறிய ஸ்பூன்
மிளகாய் பொடி—6 கிராம்
உப்பு—ருசிக்குத்தக்கபடி

**செய்யும் முறை:—**

அரிசியைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளவும். பருப்பையும் நன்ருகக் கழுவிக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கி வைத்துக்கொள்ளவும். நெய்யை நன்ருகக் காயவைத்து, அதில் வெங்காயத்தைப் போட்டு நன்கு வதக்கி எடுத்துவைத்துக்கொள்ளவும். பின்னர் அரிசியையும், பருப்பையும் போட்டு நன்ருக வறுக்கவும். அதனில் அவ்வரிசியும், பருப்பும் வேகுமளவிற்குச் சுடுதண்ணீரை ஊற்றவும். பின்னர் மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, லவங்கப்பட்டை, இஞ்சி, இவைகளைப் போட்டு ஆறவைக்கவும். உருளைக்கிழங்கை வேகவைத்துத் தோலை உரித்தபின் நன்ருக நசுக்கிவிட்டு, மறுபடியும் வேகவிடவும். அரிசி வெந்தவுடன் உருளைக்கிழங்கையும் உப்பையும் போடவும். அவ்வப்போது கிண்டிக்கொண்டே இருக்கவும். பக்குவமடைந்ததும் இறக்கி, கொத்தமல்லித் தழையையும், வதக்கிய வெங்காயத்தையும் போட்டுக் கிண்டவும். பின்னர் உண்டால் நன்ருக இருக்கும்.

அசைவம்

## மட்டன் பஜ்ஜி

### தேவையான பொருள்கள்

இறைச்சி (கொத்துக்கறி அல்லது கைமா)—300 கிராம்
தேங்காய்ப்பூ—½ முடி
பொட்டுக்கடலை—1 பெரிய ஸ்பூன்
வெங்காயம்—5 கிராம்
வெள்ளைப்பூண்டு—2
பெருஞ்சீரகம்—1 சிறிய ஸ்பூன்
கசகசா—1 சிறிய ஸ்பூன்
பச்சைமிளகாய்—6 கிராம்
உப்பு—ருசிக்குத்தக்கபடி
முட்டை—4
கறிவேப்பிலை—சிறுகொத்து
மிளகாய்த் தூள்—1 சிறிய ஸ்பூன்
மஞ்சள்பொடி—1 சிறிய ஸ்பூன்
எண்ணெய்—200 கிராம்

செய்யும் முறை :— தேங்காய்ப்பூ, கழுவிச் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி, பொட்டுக்கடலை, வெங்காயம், பச்சைமிளகாய், பெருஞ்சீரகம், கசகசா, வெள்ளைப்பூண்டு, உப்பு இவற்றையெல்லாம் ஒன்றாகப்போட்டு, கோளா உருண்டைக்கு அறைப்பது போல் நன்றாக அறைக்கவேண்டும். பின்னர் அதில், மிளகாய்ப்பொடி, மஞ்சள் பொடி, கருவேப்பிலை எல்லாவற்றையும் போட்டு, நன்றாகப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். பின்னர் முட்டையை உடைத்து ஊற்றி நன்றாக அடித்து வைத்துக்கொண்டு அதில் சிறிதளவு உப்பு கலந்துகொண்டு, அறைத்து வைத்துள்ள இறைச்சியைச் சிறு சிறு உருண்டைகளாக எடுத்து, நீளவாக்கில் பஜ்ஜிபோல் தட்டி வைத்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய்யை ஊற்றி நன்றாகக் காய்ந்தவுடன், அடித்து வைத்துள்ள முட்டையில், கட்டி வைத்துள்ள மட்டனை நனைத்து எடுத்துக்காய்ந்துள்ள எண்ணெய்யில் போட்டு, வறுத்து எடுத்து வைத்துச் சாப்பிடவும்.

# பாரதியார் கூறும் பயிற்சிமொழி !

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லாரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சிலதினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்துகூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப்படும்படியான அவமான நிலை விரைவில் நீங்கவேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

(பாரதியார் அவர்கள், மேற்கூறியவாறு 8-3-1916 அன்று காளிதாசன் என்ற புனை பெயரில் எழுதியுள்ள கட்டுரையில் ஒரு பகுதி).

# பாரதியாரின் தமிழ்ப்பற்று

தமிழ், தமிழ், தமிழ்—என்று எப்பொழுதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

* * * *

தம்பி—நான் ஏது செய்வேனடா; தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதி யான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

* * * *

தம்பி—தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் திர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன—கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது. தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி.

(அமரகவி பாரதியார் அவர்கள், நெல்லையப்பருக்கு 19-7-1915 அன்று எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்).

# அன்னபூரணி

## வ. சம்பந்தம்



படுக்கையை விட்டு நெட்டி முறித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார் ராமசாமி. பொழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது. மார்கழி மாதக்குளிர் மார்கழி மாதத்தில் தான் வர வேண்டுமென்று ஏதாவது வரைமுறை உண்டா என்ன ? கார்த்திகை மாதமே குளிர ஆரம்பித்துவிட்டது. கடந்த வாரம் பெய்த மழையினால் சுற்றுப்புறம், சூழ்நிலை எல்லாமே குளிர்ந்திருந்த காலை நேரம் ........ அரையாண்டுத் தேர்வு சமயம் ; பக்கத்து வீட்டுப் பையன் படிக்கிறேன் என்று எழுப்பும் உரத்த சத்தம் காலை வேளையில் காதுக்கு நாராசமாக இருந்தாலும் - மனத்திற்கு இதமாக இருந்தது ராமசாமிக்கு. என்னவோ தெரியாது! படிக்கின்ற பையன்களைப் பார்த்தாலே அவருக்கு ஓர் அலாதி மகிழ்ச்சி. வீதியிலே 'அம்மா.. பால்' என்ற குரல். ரங்கநாயகி கதவைத் திறந்து பால் வாங்கிக் கொண்டிருந்தாள். வேலைக்காரர்கள் இருந்தார்கள். இருந்தாலும், இதெல்லாம் அவள் கையால்தான் நடக்க வேண்டும். அப்படி அவளுக்கு ஒரு வழக்கம். ரங்கநாயகி அந்த வீட்டின் இரண்டாவது மருமகள். படுசுட்டிப் பெண். அதிகமாகப் படிக்கவில்லையென்றாலும் புத்திக் கூர்மை மிகுந்தவள். அந்தப் பெரிய வீட்டிலேயே அவள் மீது ராமசாமிக்கு ஒரு தனிப்பிரியம். எதையுமே கச்சிதமாகச் செய்து முடிப்பாள். கலகலவென்று அந்த வீட்டில் அவள் தொட்ட இடமெல்லாம் துலங்கிக் கொண்டிருந்தது. பால் வந்து விட்டது. இன்னும் பத்து நிமிடங்களுக்கெல்லாம் 'மாமா காப்பி' என்று ஆவி பறக்கும் காப்பியை எடுத்துக் கொண்டு வந்து நிற்பாள் ரங்கநாயகி. படுக்கையை விட்டு எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொள்ளச் சென்றார் ராமசாமி.

அந்த வீட்டில் அவருக்கு ஒரு கவலையும் கிடையாது. மூன்று பிள்ளைகள், இரண்டு பெண்கள் அவருக்கு. பெண்கள் இருவரையும் நல்ல இடத்தில் கொடுத்து விட்டார். பையன்கள்...... பையன்களா அவர்கள்? திருமணமாகிக் குழந்தைகள் பெற்றுப் பெரிய பெரிய பிள்ளைகளாக வளர்ந்து விட்டார்கள். மூன்று பிள்ளைகளையும் மணி மணியாக வளர்த்திருந்தார் அவர். இன்று அவர்கள் நல்ல நிலையில், நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றார்கள். மூன்று பிள்ளைகளும் பெரியவர்களாகி விட்டாலும், அப்பாவின் அரவணைப்பிலேயே, ஒரே வீட்டிலேயே ஒன்றாக வாழ்ந்து வந்தனர். மூன்று பிள்ளைகளின் குடும்பமும் ஒரே வீட்டில் ! சகோதரர்கள் ஒற்றுமையாக இருப்பது அப்படி ஒன்றும் வியப்பிற்குரியதல்ல ; வீட்டுக்கு வந்த மூன்று மருமகப் பெண்களும் ஒற்றுமையாக, எந்தவித மனக் கிலேசமுமின்றி, அழகாகக் குடும்பத்தை நடத்திக்கொண்டு சென்றனர். 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற கவிஞனின் கூற்றுக்கு இலக்கணமாக, இலக்கியமாகத் திகழ்ந்தது ராமசாமியின் குடும்பம் !

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்தார் ராமசாமி. பேரப் பிள்ளைகள் பள்ளிப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தனர். 'மாமா.. காப்பி' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் ரங்கநாயகி. 'மாமா இன்னைக்கு என்ன சமையல்.... என்ன மெனு? சொல்லுங்கள்' என்றாள். ராமசாமி அவளை ஏறிட்டுப் பார்த்தார். களை சொட்டும் முகம்—அதற்குள்ளாகச் சீவி முடித்துப் பொட்டிட்டு அலாதி ஒளி வீசிக் கொண்டிருந்தது, அந்த முகத்தில்! ராமசாமியின் அருமை மனைவி அன்னபூரணி காலமாகி ஆண்டுகள் ஐந்து உருண்டோடி விட்டன. ரங்கநாயகிதான் இப்பொழுது சமையலறைக்குப் பொறுப்பு. மூத்த மருமகள் சொர்ணம் முன்பு பார்த்துக் கொண்டிருந்த 'மானேஜ்மென்டை' ரங்கநாயகியிடம்ஒப்புவித்து விட்டாள். கூடத்தில் ராமசாமியின் அருமை மனைவி அன்னபூரணியின் திரு உருவப் படம் பெரிய அளவில் மாட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்தை ஏறிட்டுப் பார்த்தார் ராமசாமி. பளிச்சென்று மங்களகரமான முகம். காலச்சவுக்கினால் அடிபட்டுச் சற்று கன்றிப் போயிருந்தாலும் ஒளி குன்றாத முகம். தமிழ்க் குடும்பத்தின் போன தலைமுறையின் எடுத்துக் காட்டாக.

பெரிய குடும்பத் தலைவியின் உணர்வுகளைபிரதிபலிக்கும்முகம்! நெஞ்சத்து உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ரங்கநாயகி கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிவிட்டுக் காப்பியை பருகி விட்டுக் கூடத்தில் உள்ள சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்தார் ராமசாமி.

''அப்பா.......... கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன். திரும்பி வீட்டுக்கு வந்துட்டு தான் ஆபீசுக்கு போகணும்'', மூத்த பிள்ளை முருகேசன் அப்பாவிடம் சொல்லிவிட்டுக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினன். அவன் சென்ற நடையழகையே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் ராமசாமி. முருகேசன் மூத்த பிள்ளை. வயது 40 இருக்கும். இன்று அவன் ஒரு பெரிய. இஞ்சினியர்....நினைவு அலைகள் ராமசாமியின் எண்ணக் கடலிலே உருண்டு உருண்டு ஓடி வந்தன.



அந்தக் காலத்தில் அதாவது ராமசாமிக்குத் திருமணமாகி, அன்னபூரணியைக் கைப்பிடித்துக் குடும்பப் பொறுப்பேற்ற பொழுது, அவருக்கு வருமானம் ஒன்றும் அதிகமாகக் கிடையாது. வசதிகள் அவ்வளவு கிடையாது. வாய்ப்புகளும் அவ்வளவு கிடையாது. சாதாரண மத்தியதரக் குடும்பம் என்று கூடச் சொல்ல முடியாது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல் தமிழ்ச் சமுதாயத்தில் இலட்சோப இலட்சம் குடும்பங்களிலும் இதே நிலைதான். சமுதாய அமைப்பு முறை அப்படி. சமுகத்தில் கீழ் மட்டத்தில் இருந்தவர்கள் கீழ் மட்டத்திலேயே இருந்தனர். மேல் மட்டத்தைப் பிடித்துக் கொண்டவர்கள்அதை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அது மட்டுமல்ல; கீழே உள்ளவர்கள் எங்கே மேலே நந்து விடுவார்களோ; வம்மைப் போல் அவர்களும் படித்து எங்கே உயர்ந்து விடுவார்களோ என்ற அச்ச மேலீட்டால் சுயநல உணர்வுடன் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள், ஏமாளிகளாகக் கீழே இருந்தவர்களைப் படிக்க விடாமல், அண்டவிடாமல் அழுத்தி வைத்துக் கொண்டிருந்த காலம். பற்பல புரியாத விஷயங்களை யெல்லாம் பெரிசு பெரிசா எடுத்துச் சொல்லி உபதேசங்களை வாரி இறைத்துக் கீழே உள்ளவர்களைத் திசை திருப்பி விடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களும் நம்மைப் போல் படித்து விட்டால் எங்கே விஷயங்களைத் தெரிந்து கொள்வார்களோ என்ற குரோத உணர்வில் அவர்களுடைய அறிவுக் கண்களை மூடி வைக்க, உச்சத்தில் இருந்தோர் அரும்பாடுபட்டுக் கொண்டிருந்த காலம்! இந்தச் சூழ்நிலையில் வசதியற்ற பிரிவைச் சேர்ந்த ராமசாமி எதிர்நீச்சல் போட்டுத் தெளிவுடன் செயலாற்றி வெற்றி கண்டார். தான் சிறு வேலையில் இருந்தாலும், சம்பளம் குறைவாகப் பெற்றுலும், பிள்ளைகளை நன்ருகப் படிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். அதற்குத்தான் எத்தனை எதிர்ப்புகள்! எத்தனை ஏசல்கள் அந்தக் காலத்தில்! ஆனல், ராமசாமி இதற்கெல்லாம் மசியவில்லை. தன் இலட்சியத்திலேயே கண்ணுக இருந்தார். தன் குடும்பத்தை, தன் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதிலே எந்த விதத் தியாகத்தையும் செய்யத் தயங்கவில்லை அவர். அவருக்குக் குறைந்த சம்பளம். குடும்பத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும். மூன்று பிள்ளைகளையும் படிக்க வைக்க வேண்டும். கல்லூரியில் படிப்பதென்பது , அதற்கான வாய்ப்புகள் வசதிகள், சமுகத்தில் ஒரு பகுதியினருக்குத் தான் முடியும், என்றிருந்த மோசமான காலம். மூன்று பிள்ளைகளையும் அரும்பாடுபட்டுப் படிக்க வைத்தார். மூத்த பிள்ளை இஞ்சினியர். இரண்டாவது பிள்ளை டாக்டர். மூன்ருவது பிள்ளை வக்கீல் · பிற்பட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டும். அதற்கு, அந்தச் சமுதாயத்தில் அனைவரும் நன்ருகப் படிக்க வேண்டும் ; அதுதான் அடிப்படைத் தேவை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட ராமசாமி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு இன்று வெற்றி கண்டு விட்டார். ஆனல், அதை யெல்லாம் பார்க்க, கண்டு மகிழ, இன்று அவருடைய அருமை மனையாட்டி அன்ன

பூரணி தான் உயிரோடு இல்லை. கஷ்ட காலத்தில் அவள் அவருக்கு உறுதுணையாக இருந்தாள். நன்ருக இருக்கும்பொழுது இல்லை. தன் மனைவியின் திரு உருவப் படத்தைப் பார்த்ததும் அவர் கண்களில் நீர் கலங்கியது. பேரப் பிள்ளைகள் பார்த்து ''ஏன் தாத்தா கண் கலங்குகிறீர்கள்'' என்று கேட்டுவிடுவார்களோ என்று அவசரம் அவசரமாகக் கண்ணில் வழிந்தோடும் நீரைத் துடைத்துக் கொண்டார்.

''யாரோ வந்திருக்காங்க தாத்தா உங்களைத் தேடிக் கொண்டு'' பேரப் பிள்ளை மணி ஓடி வந்தான்.

வந்தவர் யார் என்று பார்த்தார் ராமசாமி. அடையாளம் புரியவில்லை. நல்ல இளவயதுப் பையன். வயது இருபது இருபத்திரண்டுதான் இருக்கும். அடக்க ஒடுக்கத்துடன் கரங்கூப்பி நின்ருன்.

''யார் தம்பி தெரியலியே?..''

''ஐயா.. உங்களுடன் கோயமுத்தூரில் ஒன்ருக இருந்த ராசமாணிக்கம் பேரனுங்க! இப்ப கும்பகோணத்தில் இருக்கோம். இங்கே சென்னையில் ஒரு வேலைக்காக வந்திருக்கேன். அது சம்பந்தமா உங்களைப் பார்க்கச் சொன்னுங்க தாத்தா....லெட்டர் கூடக் கொடுத்திருக்காங்க!''.... என்று அடக்கத்துடன் ஒருகடிதத்தை நீட்டினுன்.

'' அப்படியா......கொண்டா தம்பி....'' என்று கடிதத்தை வாங்கிப் படித்தார்.

'' தம்பி இராசமாணிக்கம் பேரனு நீ.. ரொம்ப மகிழ்ச்சி.. ....நல்ல சமயத்துக்கு வந்தே. நான் கட்டாயம் சொல்றேன்'' என்று விவரத்தைக் குறித்துக் கொண்டார்.

'' ரொம்ப நன்றிங்க ..நான் வரேனுங்க.... வந்து பார்க்கிறேனுங்க..'' என்று கரங்கூப்பி விடை பெற்றுக் கொண்டான் அந்தப் பையன்.

அவன் போவதையே சற்று நேரம் வெறிக்கப் பார்த்துக் கொண்



டிருந்தார் ராமசாமி. ''பையன் பி. ஏ. படிச்சிருக்கான். நம்ப பையன், கட்டாயம் அவனுக்கு ஏதாகிலும் செய்யணும்'' என்கிற மனத்தில் இயற்கையாகவே ஏற்பட்டு விட்ட ஒன்று. வளர்ந்து வரும் இன்றையச் சமுதாயத்தில் அவன் ஓர் அங்கம். பல எதிர்ப்புகளிடையேமெள்ளத் தலை தூக்கி ஊன்றிக் கொள்ளப் பார்க்கும் சமுதாயத்தில் அவனும் ஒருவன். ராமசாமியின் எண்ண அலைகள் மீண்டும் உருண்டு உருண்டு ஓடி வரத் தொடங்கின. அன்றைக்கு நம்மையெல்லாம் படிக்கவே கூடாது என்றார்கள். பல காரணங்களைக் கூறி நம்மை நசுக்கி வைத்திருந்தார்கள். இன்று நம்ப பிள்ளைங்க நிறையப் படிக்கிறாங்க.. ஆனால், கைதூக்கிவிட ஆள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். வேலையின்மை—வேலை வாய்ப்பு இல்லாத நிலை இன்று பரவலாக உள்ளது. உண்மைதான். ஆனால், வாழ்விலே வசதி படைத்தவர்கள், நம்மைச் சேர்ந்தவர்கள் பெரிய பெரிய பொறுப்பில் வந்துள்ளவர்கள், தான் இந்த பொறுப்புக்கு வரக்காரணமாக இருந்த, அடித்தளமாக இருந்த, சில பல இலட்சியங்களை எண்ணிப் பார்த்துத் தான் வந்த பாதையைச்சற்றுத் திரும்பிப் பார்த்துத் தங்களாலான உதவிகளை, தங்களாலானதை, சுயநல உணர்வைச் சற்று ஒதுக்கித் தள்ளிச் சமுதாய உணர்வுடன், தான், தன் குடும்பம் என்று எப்பொழுதும் வரையறுத்துக் கொள்ளாமல்—தன் சமுதாயத்தில் வாய்ப்பு இல்லாத காரணத்தால் திண்டாடிக் கொண்டிருக்கும் பிரிவினரையும் கை தூக்கிவிட முன் வந்தால் இந்தப் பிரச்னையை ஓரளவாவது தீர்க்க முடியாதா என்ன? பாரம்பர்யம் பாரம்பர்யமாக நின்று நிலவி வரும் சமுதாய உணர்வு என்ற சங்கிலித் தொடர் அறுந்துபடாமல் பார்த்துக் கொள்வார்களேயானால்—தமிழ்ச் சமுதாயம் நிச்சயம் ஏறுநடை போடும். இது சமுதாயப் பிரச்னை. வசதி படைத்தவர்கள், தேவை என்றில்லாதவர்கள் சற்று விலகி நின்று, சற்று விட்டுக்கொடுத்து வசதியற்றவர்களுக்கு இடம் கொடுத்தால்— வழி வகுத்துக் கொடுத்தால் என்ன?''

....நினைவு அலைகள் நெஞ்சத்திலே மிதக்க, பக்கத்திலே இருந்த தினத்தாளைப் புரட்டினார் ராமசாமி. தினசரியிலேயே 'ஆசிரியருக்குக்கடிதங்கள்' என்ற தலைப்பில் வரும் கடிதங்களை அவர் படிக்காமல் இருக்க மாட்டார். முதலில் அதைத் தான் பார்ப்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு. நாட்டின் நிலவரங்களை, மக்களின் இதய நாடித்துடிப்பை அக் கடிதங்களிலே காணலாம் என்ற உணர்வு அவருக்கு! ஆனால், குறிப்பாக அதுவும் சில மாதங்களாகப் பொறுப்புள்ள பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்ளும் பத்திரிகைகளில் வெளியாகும் கடிதங்கள்—அவற்றில் கண்டுள்ள விஷயங்கள், அவருடைய நல்லிதயத்திற்கு வேதனையையே தந்து விட்டிருக்கின்றன. அன்றைய பத்திரிகையில் ஒரு கடிதம் குறிப்பாக அவர் கவனத்தைக் கவர்ந்தது. ''அரிசி விலை ஏறிவிட்டது என்று அந்த விலை ஏற்றத்தைப் பற்றிக் காரசாரமாகத் தீட்டியிருந்தார் அந்தக் கடிதத்தில் ஒரு நண்பர். ''விலைவாசி அதிலும் குறிப்பாக அரிசி விலை விஷம்போல் ஏறிவிட்டது..... அரசு என்ன தூங்கிக் கொண்டிருக்கிறதா?'' என்று நெருப்பை அள்ளிக் கொட்டியிருந்தார் அந்தக் கடிதம் எழுதியிருந்தவர். அந்தக் கடிதத்திற்கு அந்த நாளிதழ் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் போட்டிருந்தது.

அதைப் படித்ததும் ராமசாமிக்கு உள்ளம் கசந்தது. இந்த அறுபதாண்டு வாழ்விலே அவர் சகலத்தையும் பார்த்தவர். நல்லது கெட்டது இரண்டையும் பார்த்தவர். ஏற்றம், இறக்கம் இரண்டையும் அனுபவித்தவர். தன்னுடையது மட்டுமல்ல, சமுதாயத்தில் வளர்ச்சியை, வீழ்ச்சியை, மறுபடியும் ஏற்றத்தை எல்லாம் நேரில் கண்டு அனுபவித்தவர். அந்தக் காலத்தில், அவர், இருபதாண்டுக் காளையாக இருந்த காலத்தில் இருந்த வாழ்க்கை நிலையும் அவருக்குத் தெரியும்.

அவர் நினைவு எங்கெங்கோ ஓடியது....முப்பதாண்டுகளுக்கு முன்னால் கோவையில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது யுத்த காலம். அடிப்படைத் தேவையான பொருள்கள் கூட மக்களுக்குக் கிடைக்காது. அரிசியைக் கண்ணால் பார்ப்பதே குதிரைக் கொம்புதான்! அன்று ஒருநாள் வீட்டில் ஒரு குண்டுமணி அரிசி கூட இல்லை. எங்கோ ஒரு கடையில் அரிசி போடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர் மனைவி அன்னபூர்ணி பையை எடுத்துக் கொண்டு அந்தக் கடையை நோக்கிப் போனவள் வெகு நேரமாகியும் வீடு வந்து சேரவில்லை. ஆபீசிலிருந்து வீடு திரும்பிய ராமசாமி செய்தி கேட்டுத் துடிதுடித்துப் போய் விட்டார். அந்தக் கடையை நோக்கி ஓடினார். கூட்டம் சொல்ல முடியாது. அந்த நெரிசலில் அன்னபூரணியைக் காணோம்! அங்குமிங்கும் அவளைத் தேடிக் காணாமல் அலைந்து விட்டு வீடு திரும்பும் பொழுது அன்னபூரணி வெறும் பையுடன் கை, கால் சோர வீதியில் வந்து கொண்டிருந்ததைக் கண்டார். அவள் முகத்தில் களை தட்டிப்போயிருந்தது. அந்த முகம் அவருக்கே பிடிக்கவில்லை. அன்று கடை ரொட்டி உணவு தான் வீட்டில்! அந்த நாளை ராமசாமி தன் வாழ்நாளில் என்றுமே மறந்ததில்லை. தமிழ்ப் பெண்கள் ஒரு படி அரிசிக்காக வீதியில் அலைவதா? தமிழ்க் குடும்பங்களுக்கு இவ்வளவு பெரிய சீரழிவா? பெண்மைக்கு நாம் கொடுக்கும் மதிப்பா இது....? அவர் உள்ளம் குமுறியது. அந்தக் கசப்பான அனுபவம்- இன்று நினைத்தாலும் அவர் நெஞ்சைப் பிளந்துவிடும் போலிருந்தது!

அதன் பிறகு கால ஓட்டத்திலே எவ்வளவோ சம்பவங்கள்.... எவ்வளவோ நிகழ்ச்சிகள்.... பாலத்திற்கடியில் எவ்வளவோ தண்ணீர் ஓடி விட்டது. அவருக்கு எல்லாமே நினைவிருக்கிறது. அன்று கோவையின் வீதிகளிலே தன் மனைவி ஒரு படி அரிசிக்காக அலைந்ததை விட, மிகப் பெரிய சீரழிவு சென்னை நகரிலே தினந்தோறும் நடந்துகொண்டிருந்த காட்சியை அவர் நேரில் பலமுறை பார்த்தவர். அன்றுவது யுத்த காலம். பொருள்கள் கிடைக்கவில்லை. இது அமைதியான காலம். அந்தக் காலத்தில் தான் இதே சிங்காரச் சென்னையில், பண்புக்கும் பெண்மைக்

கும் உறைவிடமான ஆயிரமாயிரம் அன்னபூரணிகள், தமிழ்க் குலத்தின் தாய்மார்கள் நட்ட நடுவீதியில், இரவென்றும், பகல் என்றும் பாராமல், ஒரு படி அரிசிக்கு ஆலாய்ப் பறந்து கொண்டிருந்த காட்சி; அரிசிக் கடைகளில் நடு இரவில் கூட கையில் பையுடன் தாய்மார்கள் கியூ வரிசையில் காத்துக் கிடந்திருந்த கொடுமைகளை அவர் பார்க்கவில்லையா? இதை விடச் சீரழிவான செயல் தமிழகத்தில் எப்பொழுதுமே நடந்தது கிடையாதே! ஆனால் அந்த நிலையை மாற்றி, மக்களைப் பிடித்திருந்த பீடையான உணவுப் பற்றுக்குறையை விரட்டிப் பசுமைப் புரட்சிக்கு வழி வகுத்து, மனம் குளிர வைத்துள்ள இன்றுள்ள நிலையை நினைத்துப் பார்க்கும்பொழுது யாருக்குத் தான் பூரிப்பில்லாமல் இருக்கும்? நன்றி உணர்வு உள்ள எந்த உள்ளமும் இதை வாழ்த்தாமலிருக்க முடியாது?

''என்ன, அப்பா கொஞ்சம் கோபமாக இருக்கிறதாத் தெரியுது'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராமலிங்கம். அவருடைய இரண்டாவது மகன். ஊரில் செல்வாக்குள்ள டாக்டர். நல்ல கை ராசிக்காரன். எதற்குமே கவலைப் பட்டுக்கொள்ளமாட்டான் எப்பொழுதும் சிரித்த முகம். அப்படி ஒரு டைப்!

''ஒன்றுமில்லை ராமலிங்கம். என்ன ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டுவிட்டாயா? போயிட்டு வாப்பா'' என்று அன்பொழுக மகனை அனுப்பி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தார் ராமசாமி. வீட்டில் பசங்கள் பள்ளிக்கூடம் செல்கிற நேரமாகி விட்டது. ஒரே ரகளை. அத்தனையிலும் ஒரு மனநிறைவான சூழ்நிலை. அது தான் அவருக்குப் பிடித்திருந்தது. அந்த மனோரம்யமான சூழ்நிலை; அதை அடைய அவர் பாடுபட்டது—அந்த உழைப்பின் பின்னணியில் புதைந்து கிடக்கும் நிகழ்ச்சிக் கோவைகள்—எண்ணத்துகள்கள்—நெளிவு சுளிவுகள்—எதிர் நீச்சல்கள்—எல்லாமே ஒரு சுவையான நாடகத்தையே அவர் மன அரங்கிலே நடமாட விட்டுக்கொண்டிருந்தன.

''மாமா....குளிக்க வாங்க.. பாய்லரில் தண்ணீர் பிடிச்சுட்டேன்....'' ரங்கநாயகியின் அன்புக் குரல்! ''இதோ வந்துட்டேன்....உன் மூத்தார், அதான் முருகேசன் திரும்பி வரேன்னு போயிருக்கான்.... வந்தாச் சொல்லு.... ஒரு சங்கதி அவங்கிட்டே சொல்லணும்..'' காலையில் வந்த பையன். அவன் இண்டர்வியூ விஷயத்தைப் பற்றி பெரிய மகனிடம் சொல்ல வேண்டும். அது என்னவோ இனம் புரியாத ஒரு கடமை உணர்வு அவரை விட்டு என்றுமே போனதில்லை! எந்த வேலையை எடுத்தாலும் நாம் நாலு பேருக்குப் பயனுள்ளவகை இருக்க வேண்டும்; சமுதாயத்தில் கீழே உள்ளவர்களைத் தூக்கிவிடவேண்டும் என்ற உணர்விலே ஊறிப் போனவர் அவர்....

**குடும்பநலக் குலுக்கல்.**

குடும்ப நலத் திட்டத்தில் பங்கேற்பவர்கள்பலனடைய ஒரு பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேற்கு வட்டார ரயில்வேயினர் கொண்டுவந்துள்ளனர். இதன்படி, குடும்ப நல அறுவைச் சிகிச்சை, லூப், கருத்தடைக் கருவிகள் பயன்படுத்தும் ரயில்வே ஊழியர்களுக்கு அந்ததிட்டங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு வரிசையில் எண்கள் தரப்படுகின்றன. மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த எண்கள் குலுக்கி எடுக்கப்படுகின்றன. மொத்தம் 22 பரிசுகள் ரூ 15 முதல் ரூ 200 வரை பரிசுகள் வழங்கப்படுகின்றன.

குளித்துவிட்டு ''டிபன்'' சாப்பிட உட்கார்ந்தார். மல்லிகைப் பூப்போல் இட்லியை எடுத்து இலையில் வைத்தாள் ரங்கநாயகி. அதை விண்டு சாப்பிடும் பொழுது ... இன்று என்னவோ பழங்கால நினைவுகள் அவர் முன்னே பளிச்சிட்டன. கோவையிலே அன்று ஒரு நாள் அன்னபூரணி பையை எடுத்துக் கொண்டு படி அரிசிக்காக வீதி வீதியாக அலைந்தது எல்லாமே அவர் நினைவில் நர்த்தனமாடின. அவர் கண்களில் நீர் கலங்கியது. ரங்கநாயகி அதைக் கவனித்துவிட்டாள். படுசுட்டியாயிற்றே! அந்த உள்ளத்தின் வேதனை அவளுக்குப் புரியவில்லை. மாமா சில சமயங்களில் தான் இப்படிக் கண் கலங்கி அவள் கண்டிருக்கிறாள் .... மாமியின் நினைவு வந்திருக்கும் என்று அவள் எண்ணினாள்.


''ஏன் மாமா..ஒரு மாதிரியா இருக்கீங்க..இட்லி சாப்பிடுங்க ..என்னங்க இது..கண்களிலே கண்ணீர்..மாமியை நினைச்சுட்டீங்களா மாமா..சொல்லுங்க என்ன செய்றது..உங்களுக்குத் தெரியாததா?''..அவள் குரலும் கம்மிப் போயிருந்தது.

ராமசாமி ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் அமைதியாக இருந்தார். மௌனமாக டிபனை முடித்துக் கொண்டு ரங்கநாயகி கொடுத்த காப்பியை சாப்பிட்டுவிட்டு சோபாவில் வந்தமர்ந்தார். ரங்கநாயகியும் கூடத்துக்கு வந்தாள்.


''அம்மா....ரங்கம்....உன் மாமி அன்னபூரணியின் நினைவு எனக்கு வந்து விட்டதா என்று தானே கேட்டாய்? அவளை நான் மறக்க முடியுமா? அன்னபூரணி என் வாழ்வோடு ஒன்றிப் போனவள். என் சுக துக்கங்களில் எல்லாம் என்னோடு தோளோடு தோள் கொடுத்து நின்றவள். இன்று நாம் நல்ல நிலையில் இருக்கிறோம். என் வாழ்விலே நான் மன நிறைவுடன் இருக்கிறேன் என்றால் அவள்தானம்மா இதற்கெல்லாம் முழுக்க முழுக்க காரணம். அவள் இருந்த காலத்தில் நம் குடும்பத்தில் இவ்வளவு வசதி கிடையாது. குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்; நன்றாகப் படிக்க வைக்கவேண்டும் என்பதிலே அவள் சகல தியாகங்களையும் செய்து என்னுடன் சேர்ந்து அரும்பாடு பட்டாள். அவள் இல்லாமல் இருந்திருந்தால் நான் இல்லை..'' இந்தக் குடும்பமே இல்லை.. அவர் கண்களில் நீர் கலங்கியது. ரங்கநாயகி கற்சிலையாக நின்று அவர் வாயையே பார்த்துக்கொண்டிருந்தாள். ராமசாமி பேசிக் கொண்டே போனார்.. ''அவளுக்குப் பின் இந்த வீட்டுக்கு மருமகளாக நீ வந்திருக்கிறாய். நீ விஷயம் தெரிந்த பெண். பத்திரிகை படிக்கிறாய். உலக விவகாரம்

உனக்கு மற்ற மருமகள்களை விடத் தெளிவாகத் தெரியும். அதனால்தான் அம்மா இதையெல்லாம் உன்னிடம் நான் சொல்கிறேன். இன்று நான் நினைத்ததெல்லாம் காலம் சென்ற என் மனைவி, உன் மாமியார் அன்னபூரணியைப் பற்றி அல்ல..அவள் இந்த ஒரு குடும்பத்திற்குத்தான் ஒளி விளக்காய் இருந்தாள். ஆனால் இந்தத் தமிழ் நாட்டிற்கே ஒளி விளக்காய் நின்று படியளக்கும் அன்னபூரணியைப் பற்றித்தான் இன்று என் நினைவெல்லாம்! பசுமைப் புரட்சிப் பசுமைப் புரட்சி என்று பத்திரிகையிலே அடிபடுகிறதே, ரங்கம் படித்திருப்பாய். இன்று அந்த பசுமைப் புரட்சி நம் செந்தமிழ் நாட்டில் நடக்குதம்மா! என்னுடைய அறுபதாண்டுக் காலத்தில்—அதுவும் வாழ்வின் வசந்த காலத்திலிருந்து எண்ணிப் பார்க்கிறேன். நம்ம குழந்தைகள் படிக்கிறார்கள். நன்றாகப் படிக்கிறார்கள். அந்தக் காலதில் இதுவே ஒரு பெரிய விஷயம். இன்று நாட்டில் ஏராளமாக அரிசி கிடைக்கிறது. வளமான பாதையில் நடக்க நாம் ஆரம்பித்திருக்கிறோம். எத்தனைச் சிக்கல்களுக்கிடையே எத்தனைக் குறைபாடுகளுக்கிடையே....இந்தக் காரியங்கள் நடைபெற வேண்டியுள்ளது தெரியுமா? நல்லது செய்ய வேண்டும்; அதுவும் இன்றே செய்ய வேண்டும் என்ற இதய சுத்தியான தொண்டுள்ளம் இருக்கிறதே; அதுதான் பெரிய விஷயம். என்னுடைய அன்னபூரணி மறைந்து விடவில்லையம்மா....உயிருடன் இருக்கிறாள். அதை நான் உணருகிறேன். தமிழகத்தின் எல்லா வீடுகளிலும் இன்று நீக்கமற நின்று நிலவிக் கொண்டு இருக்கிறாள். முழுமையான உருவுடன் உண்மையான அன்னபூரணியாகவே இன்று காட்சி கொண்டுள்ளாள்! அதை யாரும் அழிக்க முடியாது. நன்றி உணர்வு இல்லாதவர்கள்——பொய்ம்மையிலேயே வாழ்பவர்கள் வேண்டுமானால், பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கலாம். ஆனால் உண்மையைத் திரைபோட்டு மறைத்து விட முடியாது.... இது தானம்மா சாதனை! இல்லையாம்மா....எதை எதையோ நினைத்தேன்.... உன்னிடம் கொட்டிவிட்டேன் போ.... முருகேசன் வந்து விட்டானா பார். காலையில் நம்ப ஊர் பையன் ஒருவன் வந்திருந்தான். அவனைப் பற்றி முருகேசனிடம் சொல்லனும்....''

''சரி மாமா....'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே சமையற்கட்டிலே நுழைந்தாள் ரங்கநாயகி. இனம் புரியாத ஒரு மன நிறைவுடன் நாற்காலியில் சென்றமர்ந்தார் ராமசாமி. அவர் தலைக்கு மேலே அன்னபூரணியின் திருஉருவப் படம் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.



# வாழ்க தாய்மை வளர்க மழலைகள்!



**யா**ழினும் இனியதென இன்புற்று மகிழ்ந்து, பேறுகளிலெல்லாம் பெரும்பேறென இறும்பூது எய்தி, மழலைச் செல்வங்களைக் கண்டு, மழலை மொழி கேட்டுப் பாராட்டி, மகிழும் வள்ளுவப் பெருந்தகை, அவையத்து முந்தியிருக்கும் பெருநிலையினை அக் குழந்தைகள் பெறுதற்குரிய வழி வகை காண வேண்டிய பெருங் கடனையும் நினைவுறுத்திச் சென்றுள்ளார்.

'' தம்மில், தம் மக்கள் அறிவுடைமை, மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது '', என்று சமுதாயம் வருங்காலத் தலைமுறையினர்க்குச் செய்ய வேண்டிய பணியினை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இன்றைய குழந்தை நாளைய தந்தை. '' நாளைய தந்தைக்கு இன்றைய குழந்தைதான் தகப்பன்'' என்றான், இயற்கை வளர்ச்சியில் இறைவனைக் கண்டு மகிழ்ந்த இயற்கைப் பெருங் கவிஞன் வேர்ட்ஸ் வொர்த். குழந்தைப் பருவத்தில் உருவாகும் குணங்கள்தாம் குமரப் பருவத்தையும், வாழ்வின் பிற் பகுதியையும் உருவாக்குகின்றன, அல்லது உருக் குலைக்கின்றன. கள்ளங் கபடமற்ற குழந்தைகள் தாம் பின்னர் அற வழி நின்று அமைதி நெறி காத்த அண்ணல் காந்தி, உலக நாடுகளுக்கு உயர் நெறி காட்டிய உத்தமர் நேரு, கேட்டார் வியந்து கேளாரும் வேட்ப மொழிந்த சொல்லாளர் அறிஞர் அண்ணா முதலாய மாநிலம் போற்றும் மாமேதைகளாக உருவாகின்றனர் ; உருவாக்கப்படுகின்றனர்.

வள்ளுவர் வழி நின்று வருங் காலத் தலைவர்களாம் குழந்தைகளைப் பேணிக் காக்க நம் அரசு வகுத்துள்ள திட்டங்கள் பல. செலவிடும் நிதியும் அதிகம். பள்ளி செல்லும் வயதுக்கு உட்பட்ட மழலைச் செல்வங்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியும் வகை யறியாது பெற்றோர் தவிக்கின்றனர். அப்பெரும் பொறுப்பினை அரசு மேற்கொண்டு திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. பாலர் பள்ளி ( Pre-schools ) எனப்படும் அறிவாலயத்தின் தொடக்க நிலையங்கள்பலவற்றை அரசு திறந்துள்ளது. பாலர் பள்ளித் திட்டம் ( Pre-school Programme) என்னும் மழலைக் கல்வித் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

இப் பாலர் பள்ளித் திட்டத்தின் கீழ் 1,040 ஊராட்சிகளில் பயிற்சி பெற்ற பணிப் பெண்கள் மழலைச் செல்வங்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இட வசதி இல்லாததால் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், தாய், சேய் நல விடுதிகள், சமுதாய மன்றங்கள், சாவடிகள், கோயில் மண்டபங்கள் ஆகிய இடங்களில் இப் பாலர் பள்ளி நடைபெற்று வந்தன.

சில இடங்களில் மரத்தின் நிழலே மழலைப் பள்ளியாக அமைந்ததும் உண்டு. இக்குறையினைக் களைவதற்கு ' கேர் ' (காப்பு) நிறுவனமும் முன் வந்துள்ளது. பாலர் பள்ளிகளுக்கென ஆயிரம் கட்டடங்கள் கட்டித் தரக் காப்பு நிறுவனம் முன் வந்துள்ளது. முதற் கட்டமாக 115 பள்ளிகளுக்கு மனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பதினைந்து பள்ளிகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

இம் மழலைப் பள்ளிகளில் உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் '' கேர் '' நிறுவனம் திட்டமிட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் ஆயிரம் பாலர் பள்ளிகள் திறப்பதென அரசு திட்டம் வகுத்துள்ளது. ஆண்டு தோறும் 200 பள்ளிகள் திறக்கப்படும். இப் பள்ளிகளில் பணியாற்றுவதற்காக 190 சமூக நலப் பணிப் பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். தற்சமயம் தமிழ் நாட்டில் 116 பாலர் பள்ளிகள் நடைபெறுகின்றன. தமிழ் நாடு முழுவதும் 1,100 மழலைச் செல்வங்கள் இப்பள்ளிகளில் பயில்கின்றனர். இப் பள்ளிகளுக்காக 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 1.72 லட்சம். 1971-72-ஆம் கல்வி ஆண்டில் ரூ. 1·52 லட்சம் செலவில் மேலும் 200 பள்ளிகள் திறக்கப்படும்.

### சிறுவர் நலக் கூட்டு நடைமுறைத் திட்டம்

பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் உடல் நலனைப் பேணி, அறிவு நலனைக் காத்து, உடல் வளத்துடன் அறிவு நலமும் அரும் பண்புகளும் கொண்ட ஆற்றல் மிக்க இளைஞர்களை உருவாக்கிக் காப்பதற்கெனச் சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள் திறக்கப் பட்டுள்ளன. இந்த நோக்கத்துடன் பூந்தமல்லியில் சிறுவர் நலக் கூட்டு நடைமுறைத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இத் திட்டத்தில் இடம் பெறுகின்றனர். ஆறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. மகளிர் நலத் துறை, பொது நலத் துறை, சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் ஊக்கமிக்க கூட்டு முயற்சியில் இத் திட்டம்

செயற்படுத்தப்படுகிறது. இச் சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் 50 தாதியர் பணியாற்றுகின்றனர். மத்திய அரசின் நிதி உதவியுடன் துவக்கப்பட்ட இத்திட்டம் 1968 முதல் மாநில அரசின் நிதி உதவியுடன் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. சத்துணவுத் திட்டத்தினால் இந்த இல்லங்கள் பயன் பெற்றுள்ளன. சிறுவர்களுக்கு முட்டை, மீன் முதலியன வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ. 500 செலவில் கல்விச் சாதனங்களும் சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. சிறுவர் இல்லங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 90,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கென நூலகங்கள், பூங்காக்கள் அமைப்பதற்கும் நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

மழலைகளைப் பேணினால் மட்டும் போதுமா? மகளிரை மறக்கலாமா? சேயைப் பேணிடும் அரசு தாயையும் பேணும் நோக்குடன் மகளிர்-குழந்தைகள் கூட்டு நலத் திட்டம் ஒன்றினை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைத்துள்ளது. இவ்விணைப்புத் திட்டத்தின் கீழ் உணவு நடைமுறைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி ஆறு மாதக் குழந்தைகள் முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படும். தாயாகப் போகும் பெண்டிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கப்படும்.

இருபத்தைந்து ஒன்றியங்களில் மகளிர் மன்றங்களின் ஒத்துழைப்புடன் செயல்படவிருக்கும் இத்திட்டத்திற்கென 1970-71-ல் ரூ. 1.7 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் நலம் பேணுவோம்! செம்மை வாழ்வு காண்போம்! வாழ்க தாய்மை; வளர்க மழலைகள்!

# உங்களுக்குத் தெரியுமா ?

### மாம்பழ அன்னை வாராவதி

சென்னையில் மாம்பழ அன்னை வாராவதி என்று ஒரு வாராவதி (பாலம்) இருக்கிறது உங்களுக்குத் தெரியுமா?

சென்னை சைதாப்பேட்டையிலுள்ள மர்மலாங் பாலம் தான் அது. மாம்பழ அன்னை (Our Lady of mangoes ) தான் மாமில்லான்னாவாக மாறி பின் மர்மலாங் என்று மாறியதாகக் கூறப்படுகிறது.

1726-ல் பீட்ரஸ் உஸ்கன் என்ற ஆர்மோனியக்காரரால் கட்டப்பட்டதால் இந்த வாராவதி ஆர்மேனியன் வாராவதி என்றும் முதலில் அழைக்கப்பட்டது.

### பெரியது எது?

இந்தியாவிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையம், நெய்வேலி அனல் மின் நிலையம் தான்.

இங்கு சென்ற ஆண்டு 224 கோடி கிலோவாட் (K.W.) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

### மின்சாரத் தட்டச்சு

மின்சாரத்தினால் இயங்கும் தட்டச்சு (டைப்ரைட்டிங் இயந்திரம்) செய்யும் முயற்சியில், சென்னையிலுள்ள "இந்துஸ்தான் டெலிபிரிண்டர்'' நிறுவனம் ஈடுபட்டுள்ளது. விரைவில் இந்த மின்சாரத் தட்டச்சு இயந்திரத்தை இந்த நிறுவனம் தயாரிக்கும்.

இதுவரை இந்த நிறுவனத்தில் அஞ்சலகங்கள், நாளிதழ்கள், வணிக அலுவலகங்கள் பயன்படுத்தக் கூடிய டெலி பிரிண்டர்களைத் தயாரித்து வந்தன. இந்த ஆண்டு சுமார் 48 லட்ச ரூபாய்க்கு 'டெலி பிரிண்டர்கள்' அனுப்பும்படி வெளிநாடுகளிலிருந்து ஆணைகள் வந்துள்ளன. கேட்டுள்ள நாடுகள் குவைத், ஈரான், இலங்கை, பூட்டான், நேப்பால், ஏமன் ஆகியவையாகும்.

### டாலர் வரலாறு

அமெரிக்கா, கனடா மற்றும் பல நாடுகளில் பணத்தை டாலர் என்று அழைக்கின்றனர். டாலர் என்ற பெயர் எப்படி வந்தது?

ஜெர்மன் மொழியில் 'தால்' என்றால் பள்ளத்தாக்கு என்று பொருள். 1519-ல் முதல் முறையாக இந்த நாணயங்கள் பொகிமியா நாட்டிலுள்ள தூய ஜோச்சிம் என்ற பள்ளத்தாக்கில் தயாரிக்கப்பட்டன. அதனால் அவை ஜோச்சிம் தாலர் என்று அழைக்கப்பட்டது. பின் அது 'தாலர்' என்று பெயர் பெற்றது. ஆங்கிலத்தில் அது டாலர் ஆக மாறி அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

### கண், மூக்கு, பல்

பெண்களுக்கு கண் இமையின் முடிகள் கரு கருவென்று வளர வேண்டுமா? இரவில் படுக்கப் போகு முன் கண்ணிலும், இமையிலும் விளக்கெண்ணெய் சில துளிகள் விடவேண்டும். முடி அழகாக வளரும்.


சளி பிடிப்பதைத் தடுக்க, கடுகு எண்ணெய்யை மூக்கு நுனியில் தடவுங்கள்.

பற்கள் பளபளவென்று விளங்க, பல் பொடியுடன், சிறிதளவு உப்பும் எலுமிச்சஞ் சாறும் சேர்த்துப் பல் துலக்கலாம்.

### வழிகாட்டும் தொழில் நிறுவனம்

லார்சன்-டூப்ரோ நிறுவனச் சார்பில் சிறு சேமிப்பில் முதலீடு செய்யும்படி ஒன்றரை லட்ச ரூபாயினை மாநில சிறு சேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களிடம், அந் நிறுவனத்தின் அதிகாரி திரு. ஏ. கே. நடராஜன் வழங்கியுள்ளார். இதுவரை இந்த நிறுவனம் சிறு சேமிப்பில் பத்து லட்சம் ரூபாயினை முதலீடு செய்துள்ளது.

# அண்டிப் பிழைக்கும் ஆடு



கீழைக்கரிசல் என்றால் என்ன தெரியுமா? ஏதோ ஊரின் பெயரென்றுதானே எண்ணுகிறீர்கள்; உண்மைதான். ஆனால், அது ஊரின் பெயர் மட்டுமல்ல; ஒருவகை ஆட்டின் பெயருமாகும்.

கீழைக்கரிசல் அருப்புக்கோட்டைத் தாலுகாவிலுள்ளது. இங்கு வளர்க்கப்படும் ஆட்டின் வயிற்றின் கீழ்ப்பகுதி கருமையாக இருப்பதால் இந்த வகை ஆட்டினைக் கீழைக்கரிசல் என அழைக்கிறார்கள்.

கீழைக்கரிசல் ஆடுகள் இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை, மண்டபம், கமுதி, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

இந்த இனத்தின் அபிவிருத்திக்காகத் தமிழக அரசு பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகிறது. இவற்றை விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி செய்ய, செட்டிநாடு, புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி, சாத்தூர், நாங்குனேரி, காட்டுப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கப் பண்ணைகளில் இவை வளர்க்கப்படுகின்றன. சிற்றூர்களிலே ஆட்டிறைச்சி மிகுதியாய்க் கிடைக்கும் வகையில் இங்குச் சிறந்த ஆட்டுக்கடாக்களை உற்பத்தி செய்து கிராமங்களுக்கு வழங்கி ஆட்டின் தரத்தை உயர்த்துவதே இந்தப் பண்ணைகளின் நோக்கமாகும்.

இந்த ஆட்டைப் பார்த்தவுடனேயே கீழைக்கரிசல் ஆடென அடையாளம் தெரிந்து கொள்ளலாம். இவ்வினத்தைப் பற்றி, செட்டிநாட்டு மாநிலக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள இனவழி ஆய்வுப் பிரிவினர் வரையறுத்துக் கூறியுள்ளனர்.

பொதுவாக, இந்த இனம் நடுத்தர அமைப்புள்ளது. நிலக்கோட்டைப் பகுதியில் சிறிது குட்டையான ஒருவகையும் இந்தக் கீழைக்கரிசல் இனத்தில் காணப்படுகிறது. தமிழகத்தே வெப்பமான பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படும் உரோம இன ஆடுகளைச் சேர்ந்தவை இவை எனக் கூறலாம். இந்த ஆட்டின் நிறம் பொதுவாகத் தவிட்டு நிறம். ஓரங்களில் கருமை நிறம் காணப்படும். கறுப்பு நிறம் வயிற்றின் அடிப்பாகத்திலும், கண்ணின் உட்பக்கத்திலும், வாயின் ஓரங்களிலும், தாடை நெஞ்சுப் பகுதிகளிலும், காதின் ஓரங்களிலும், முழங்காலுக்குக் கீழே கால்களின் உட்பக்கத்திலும் காணப்படுகிறது. இந்த இன ஆட்டில் எவற்றின் மீதேனும் எங்கேனும் வெள்ளைநிறம் காணப்பட்டால் அது அந்த இனத்தின் குறைபாடாகவே கருதப்படுகிறது. இந்த ஆட்டின் தலை மேற்புறம் அகன்றும், கீழ்ப்பாகம் குறுகியும் இருக்கும்; மேலுயர்ந்த நெற்றி இதற்குண்டு. காதுகள் மெல்லியதாய், நடுத்தர அளவினதாய் கீழேதொங்கும்தன்மையன.

முதுகின் மேற்புறத்தில் நீண்ட மயிர் நிறைந்து காணப்படும். தோள் உறுதியாக அமைந்து முதுகினும் உயர்ந்து தோன்றும். முதுகு தலைப் பாகத்திலிருந்து தாழ்ந்து அமைந்திருக்கும். கடாக்களின் கொம்பு கரடு முரடானது; கருமையாய் தலைக்குச் சிறிது வெளிப்புறம் வளைந்து முறுக்கிச் சுருண்டிருக்கும். பெண் ஆட்டிற்குப் பெரும்பாலும் கொம்புகள் இல்லை. எனினும், இதுபற்றி ஆராய்ந்தபோது 312 பெண் ஆடுகளில் 15 ஆடுகளுக்குக் கொம்புகள் இருந்தன எனத் தெரிய வந்தது. கடாக்களின் இடது கொம்பு 45.4 செண்டி மீட்டர் நீளமுள்ளதாயும் வலது கொம்பு 44.1 செண்டிமீட்டர் நீளமுள்ளதாயும் காணப்படுகின்றன. இவ்வாட்டின் வால் குட்டையானது. ஓரத்தில் கருமை நிறம் காணப்படும். கடாவின் வாலின் நீளம் 10.2 செண்டிமீட்டர்; ஆண் ஆட்டின் வாலின் நீளம் 9.05 செண்டிமீட்டர்.

விலங்குகள் மிகவும் பயனுள்ளவை. பசு பாலைத் தரும். நாய் வீட்டைக் காக்கும். மாடும் குதிரையும் வண்டி இழுக்கும். ஆடோ உண்ணப் பால் தருகிறது. அதனை உணவாகவும் பயன் படுத்துகின்றனர். அதன் கொம்பு, குளம்பு, எலும்பு, கொழுப்பு, தசை அனைத்தும் பயன்படுகின்றன. அதன் தோலும் மயிரும் நமக்கு எப்போதும்உதவுகின்றனஎன்றால் ஆட்டைப் போல பிறருக்குதவும் விலங்குகள் ஏதேனும் உண்டா?

‘‘அண்டிப் பிழைக்கும் நம்மை,
ஆடு— இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா’




## தைக்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னமேயே . . .


சேமிக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டான்.

என்ன சேமிக்கிறாள் என்பது பெரிதல்ல; சேமிக்கும் பழக்கத்தைத் தொடங்கி விட்டாளே அதுவே பெரிது. உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இன்னமும் சேமிக்கக் கற்றுக் கொடுக்கவில்லையா என்ன ? ஸ்டேட் பாங்கிலே அவர்களுக் கென ஒரு சேமிப்புக் கணக்கைத் துவக்குங்கள். சேமிக்கும் பழக்கத்தை எந்தச் சிறுவயதிலும் தடையின்றித் துவக்கலாம்.

# சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

Aiyars S. 101 TM

# ஊட்டச்சத்துள்ள உணவுபெற வீரிய ஒட்டு மக்காச் சோளம்



மனித இனத்தின் நல்வாழ்வுக்குப் புரதச் சத்து (Protein) மிகவும் இன்றியமையாததாகும். புரதச்சத்துப் பற்றுக் குறையினலேயே உடல்நலமின்மையும், அறிவு வளமின்மையும் ஏற்படுவதாக ஊட்டச் சத்து வல்லுநர்கள் (Nutritional experts) கூறுகிருர்கள்.

உலகில் உள்ள மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் புரதப் பசியினுல் (Protein hunger) வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேளாண்மைக் கழகமும் (F A.O.), உலகச் சுகாதாரக் கழகமும் ( W. H. O. ) கணக்கிட்டுள்ளன. புரதச் சத்து மிக்க உணவுகள் மக்களுக்குக் கிடைக்க ஒவ்வொரு நாடும் முயற்சி செய்ய வேண்டும் என்று அக்கழகங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. எனவே, புரதச் சத்துமிக்க உணவு தானியங்கள் மக்களுக்குக் கிடைத்திடவேண்டுமென்பதற்காகவே, புரதச் சத்து மிக்க வீரிய ஒட்டு மக்காச் சோளத்தையும் தமிழ் நாட்டில் சாகுபடி செய்வதற்கு ஆவன செய்து வருகிறது தமிழ் நாடு அரசு.

மக்காச் சோளத்தில் அரிசியைவிட அதிக அளவு புரதச் சத்தும், வைட்டமின்களும், கொழுப்புச் சத்தும் அடங்கியுள்ளன என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**100 கிராமில் உள்ள சத்துக்கள்.**

| | மக்காச் சோளம். | அரிசி. |
|---|---|---|
| புரதச் சத்து (கிராம்) | 11·1 | 6·8 |
| கொழுப்புச் சத்து (மில்லி கிராம்) | 3·6 | 0·5 |
| வைட்டமின்—'ஏ' (ஐ.யூ.) | 1502 | .. |
| வைட்டமின்—'பி-1' (மில்லி கிராம்) | 0·42 | 0·09 |
| வைட்டமின்—'பி-2' (மில்லி கிராம்) | 0·10 | 0·03 |
| கால்சியம் (மில்லி கிராம்) | 10 | 10 |
| இரும்பு (மில்லி கிராம்) | 2·0 | 3·1 |

அரிசியைவிட அதிக அளவு சத்துக்களைக் கொண்டிருக்கும் மக்காச் சோளத்திலிருந்து பூரி, பக்கோடா, பஜ்ஜி, போண்டா, தோசை, இட்லி, தேன்குழல், கட்லட், முறுக்கு, ரொட்டி போன்ற பல்வேறு சுவையான உணவுப் பொருள்களைத் தயாரிக்க முடியும். அவைகளை நாம் அன்ருடவாழ்வில் பயன்படுத்தினுல் கலப்பு உணவுப் பழக்கம் ஏற்பட்டு உடல் வளமும், மனவளமும் பெறுவதுடன் அரிசியின் தேவையையும் குறைத்திட இயலும்.

நன்ருக விளைந்த ஓர் ஏக்கர் நெற்பயிரை விட, ஏக்கருக்கு 3,600 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய வீரிய ஒட்டு மக்காச் சோளம், 5 அல்லது 6மடங்கு அதிகமான மக்களுக்குச் சுலபமாக உணவளிக்கும்.

மக்காச் சோளம் மனித இனத்திற்குச் சத்துள்ள உணவுகளை அளிப்பது போலவே, கால்நடைகளுக்கும் சத்துள்ள சிறந்த தீவனத்தைக் கொடுக்கிறது. ஓர் ஏக்கர் மக்காச் சோளத்தட்டையை நல்ல முறையில் பதனப்படுத்தி ''சைலோ'' தயாரித்து, அவைகளைக் கறவை மாடுகளுக்கு அளித்தால், ஏக்கருக்கு 1,820 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய நெற்பயிரிலிருந்து கிடைக்கக்கூடிய உணவை விட 8, அல்லது 9 மடங்குஅதிகமான மக்களுக்கு வேண்டிய உணவை, பால், வெண்ணெய் போன்றவை மூலம் பெற முடியும். மேலும் அக்கால்நடைகளிலிருந்து கிடைக்கும் தொழு உரத்தைச் சேமித்து மறுபடியும் நிலத்திற்கு இட்டால் தொடர்ச்சியாக மக்காச் சோளத்தையே பயிரிட இயலும்.

மக்காச் சோளம் மனித இனத்திற்கு வேண்டிய உணவாகவும், கால்நடைகளுக்கு வேண்டிய தீவனமாகவும் பயன்படுவதுடன், பல்வேறு வகையான தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் மலர்ந்திடவும் வழி வகுக்கும். இதனுல் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதுடனும், உழவர் பெருமக்களின் வருமானமும் பெருகுவதுடனும், தமிழ்நாடு தொழில் துறையில் மேலும் ஒரு படி முன்னேற முடியும்.

மக்காச் சோளம் பயிரிடுவதால், ஓர் ஏக்கரிலிருந்து 3,600 கிலோ தானியத்தையும், 15 முதல் 20 டன்கள் வரை தீவனத்தையும் 100 முதல் 110 நாட்களில் எளிதாக உழவர் பெரு மக்கள் பெறக்கூடும். கோவை மாவட்ட உழவர் பெரு மகன் ஒருவர், ஓர் ஏக்கர் நிலத்தில் 4,630 கிலோ மக்காச் சோளம் விளைவித்துள்ளார் என்பது மிவும் குறிப்பிடத்தக்கதாகும். அதிலிருந்து ரூபாய் 4,630 அவருக்கு வருமானம் கிடைத்துள்ளது. செலவு போக அவருக்கு நிகர லாபமாக ரூபாய் 4,000 கிடைத்துள்ளது.

மக்காச் சோளத்தைப் பயிரிடத் தமிழ் நாட்டில் வாய்ப்பும் வசதியும் அதிகமாக உள்ளன. இதை எந்தப் பருவத்திலும் பயிரிடலாம். நீர்ப்பாசன வசதி மட்டும் இருக்குமானுல், மக்காச் சோளத்தை ஓர் ஆண்டில் மூன்று போகம் பயிர் செய்யலாம். ஓர் ஏக்கரில், ஓர் ஆண்டில் மூன்று போகம் மக்காச் சோளத்தைப் பயிரிட்டால், குறைந்தது ரூபாய் 6,000 நிகர லாபமாகக் கிடைக்கும்.

தற்பொழுது மக்காச் சோளத்தை இந்திய உணவுக் கழகம் ( Food Corporation of India) வாங்கிக் கொள்கிறது. அரசாங்க அனுமதி

யுடன் மக்காச் சோளத்தை மற்ற மாநிலங்களுக்கும் அனுப்ப முடியும். விரைவில் கோவை மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில் ஒரு மக்காச் சோளத் தொழிற்சாலையும் துவங்கப்பட விருக்கிறது. எனவே, மக்காச் சோளத்திற்கு நல்ல எதிர்காலம் உள்ளது.

நல்ல வடிகால் வசதியும், தண்ணீர் தேங்காத நிலங்களும், உவர் அல்லது களர் இல்லாத நிலங்களும் மக்காச் சோளம் பயிரிட ஏற்றவையாகும். பெரும்பாலும் மக்காச் சோளப் பயிரை அதிகப் பூச்சிகளும், நோய்களும் தாக்குவதில்லை. குருத்துப் புழு மட்டும் தான் தாக்குவதாகத் தெரிகிறது. பூசண நோய் எதுவும் தாக்குவதாகத் தெரியவில்லை. இதனாலேயே வீரிய ஒட்டு மக்காச் சோளத்தின் பரப்பு பின்கண்டபடி ஆண்டிற்கு ஆண்டு தமிழ் நாட்டில் பெருகி வருகிறது.

| | | | ஏக்கர். |
|---|---|---|---|
| 1966–67 | .. | .. | 2,213 |
| 1967–68 | .. | .. | 3,969 |
| 1968–69 | .. | .. | 19,628 |
| 1969–70 | . | .. | 29,140 |

உலகெங்கும் ''பசுமைப் புரட்சி'' தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவைகளுள் வீரிய ஒட்டு மக்காச் சோளமும் ஒன்று. எனவே, தமிழ் நாட்டில் தோன்றியுள்ள பசுமைப் புரட்சி மேலும் பரவிடவும், உழவர்ப் பெரு மக்களின் வருவாய் பெருகிடவும், தமிழ் நாட்டினரின் உடல் வளமும் மன வளமும் பெருகிடவும் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிடுமாறு கேட்டுக்கொள்வதுடன், கீழ்க்கண்ட சாகுபடி முறைகளையும் பரிந்துரைக்கின்றோம்.

### விதை.

தமிழ் நாட்டில் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிட விரும்புகிறவர்கள், 'தக்காண மக்காச் சோளம்' அல்லது 'ஹை-ஸ்டார்ச்' என்னும் ரகங்களையே பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ரகங்களின் வயது 100 முதல் 110 நாட்களேயாகும்.

நல்ல தரம், தூய்மை, அதிக முளைப்புத் திறன் கொண்டதும், அத்தாட்சி பெற்றதுமான விதையையே (Certified seeds) விதைப்பதற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தாட்சி பெற்ற விதைகளை வேளாண்மைத்துறையின் கிடங்குகளிலிருந்தோ, தேசிய விதைக் கழகத்திடமிருந்தோ (National seeds Corporation), தேசிய விதைக் கழகத்தின் அனுமதி பெற்ற விதை உற்பத்தியாளர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்வதே சிறந்தது. விதைகளை வாங்கிய உடன் விதைப் பையின் மேல் கீழ்க்கண்ட விவரங்கள் அடங்கிய அட்டை கட்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டும்.

(1) அத்தாட்சியான ரகத்தின் பெயர்.

(2) லாட் நம்பர்.

(3) விதையில் கலந்துள்ள மற்ற பொருள்களின் சதவீதம்.

(4) முளைப்புத் திறன்.

விதைகள் கெட்டுவிடாமல் இருக்க விதைப் பைகள் நன்ருக 'சீல்' வைக்கப்பட்டிருக்கிறதா என்றும் பார்த்து வாங்க வேண்டும்.

ஓர் ஏக்கர் மக்காச் சோளம் பயிரிட வேண்டுமானல் 8 கிலோ விதைகள் வேண்டும், ஒவ்வொரு முறையும் புதிய வீரிய ஒட்டு மக்காச் சோள விதைகளையே வாங்கி உபயோகிக்க வேண்டும். சென்ற தடவை மகசூலுக்காகப் பயிரிட்ட பயிரிலிருந்து கிடைத்த விதைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், பின் வரும் சந்ததி பயிரின் வீரியம் குறைந்து, மகசூலும் பெருமளவில் குறைந்து விடக் கூடும்.

### நிலம் தயாரித்தல்.

நிலத்தை இரும்புக் கலப்பையினுல் சுமார் 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) ஆழத்திற்கு உழுது கட்டிகளை உடைத்து விட்டுப் புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அதன் பின் வயலில் பாத்திகளையும், பாசன வாய்க்கால்களையும் அமைக்க வேண்டும். அல்லது பார் அமைக்கும் கலப்பையினுல் (Ridge plough) 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும்.

### உரமும் உரமிடுதலும்

மக்காச் சோளப் பயிருக்குத் தேவையான தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்று முக்கியச் சத்துக்களையும் தேவையான அளவு இடுவது மிகவும் அவசியமாகும். இச்சத்துக்களின் தேவை நிலத்திற்கேற்ப மாறுபடும். ஆகவே, மண் மாதிரி எடுத்து, பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பி அதிலுள்ள சத்துக்களைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப தேவையான அளவு உரமிடுவதே மிகவும் சிறந்த முறையாகும்.

மண் பரிசோதனை செய்ய இயலாவிட்டால், வீரிய ஒட்டு மக்காச் சோளத்திற்குப் பொதுவாகப் பரிந்துரைக்கப்படும் அளவாகிய 54 கிலோ தழைச் சத்து, 27 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட வேண்டும். வளமான நிலமாக இருந்தாலும், வீரிய ஒட்டு மக்காச்சோளம் நல்ல மகசூல் கொடுக்க வேண்டுமானுல், மேற்கூறிய அளவு இரசாயன உரமிடுவது மிகவும் அவசியமாகும்.

**அடியுரம்** :—ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து (90 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 41 கிலோ யூரியா), 27 கிலோ மணிச் சத்து (190 கிலோ கிலோ சூப்பர் பாஸ்பேட்), 18 கிலோ சாம்பல்சத்து (30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை விதை ஊன்றுவதற்கு முன்பு இடவேண்டும்.

பாத்தி அமைத்திருந்தால், மேற்கூறிய அளவு 3 சத்துக்களும் அடங்கிய உரக்கலவையை மக்காச் சோளம் விதைக்கப் போகும் வரிசைகளின் ஒரு பக்கமாக 5 முதல் 7½ செண்டி மீட்டர் (2 முதல் 3 அங்குலம்) அகல இடம் விட்டு, 5 முதல் 7½ செண்டிமீட்டர் (2 முதல் 3 அங்குலம்) அகலமும், 5 முதல் 7½ செண்டி மீட்டர் (2 முதல் 3 அங்குலம்) ஆழமும் உள்ள சிறு பள்ளம் (Small furrows) தோண்டி, அதில் உரக் கலவையைத் தூவி மண்ணுல் மூடி விட வேண்டும்.

பார் அமைத்திருந்தால் மேற்படி உரக் கலவையை பார்களின் (Ridge) நடுவில் உள்ளக் கிடங்கில் தூவி மண்ணுல் மூடி விடவும்.

**மேலுரம்** :—மக்காச் சோளம் விதைத்த 45 நாட்களுக்குப் பிறகு பயிர்கள் சுமார் 18 அங்குல உயரம் இருக்கும் பொழுது 18 கிலோ தழைச் சத்தை (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 41 கிலோயூரியா) முதல்தடவையாகஇடவேண்டும். அதன்பின் மகரந்தம் கொண்ட நார்கள் உருவாகும் பொழுது இரண்டாம் தடவையாக 18 கிலோ தழைச் சத்தை (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 41 கிலோ யூரியா) இடவேண்டும்.

மேலுரத்தை இடும்பொழுது பயிரின்மேல் உரம் படக்கூடாது. தண்டின் அருகிலும் உரமிடக் கூடாது. தண்டிலிருந்து 25 செண்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளி விட்டுத்தான் இரசாயன உரங்களை வரிசைகளுக்கு இடையில் தூவவேண்டும். அமோனியம் சல்பேட் உபயோகித்தால் 111 அடி நீளத்திற்கு அரை லிட்டர் வீதமும், யூரியா உபயோகித்தால் 275 அடி நீளத்திற்கு அரை லிட்டர் வீதமும் தூவலாம்.

மேலுரத்தை 2½ செண்டி மீட்டர் (1 அங்குலம்) முதல் 3.75 செண்டி மீட்டர் (1 அங்குலம்) ஆழத்தில் இட வேண்டும். இவ்வாறு செய்ய, வரிசைகளின் இடையே இரசாயன உரங்களைத் தூவி மேல் மண்ணைக் கொத்தி விட்டு, உரம் மேற்கூறிய ஆழத்தில் நன்றாகக் கலந்து விடும்படி செய்ய வேண்டும். இதன் மூலம் பெருத்த மழை பெய்தால்கூட வாய்வு நிலையிலிருக்கும் தழைச் சத்து மழை நீரினுல் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்க முடியும்.

### விதைப்பு.

மக்காச் சோள விதைகளை வரிசைக்கு வரிசை 60 செண்டி மீட்டர் (2 அடி) இடைவெளியிலும், வரிசையில் விதைக்கு விதை 25 செண்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியிலும், 3.75 செண்டி மீட்டர் (1½ அங்குலம்) ஆழத்திலும் விதைக்க வேண்டும். மக்காச் சோளம் முதிரும் சமயத்தில் ஏக்கருக்கு 29,000 பயிர் இருக்குமாறு விதைக்க வேண்டியது அவசியம். பாத்திகளில் விதைப்பதை விட, பார்களின் சரிவில் விதைகளை ஊன்றுதலே சிறந்தது.

### பின் செய் நேர்த்தி.

விதைத்து 2 முதல் 3 வாரம் கழித்து மண்ணைக் கொத்தி விட்டு களைகள் இருந்தால் அகற்றிவிடவும். எப்பொழுதும் களைகள் இல்லாமல் மக்காச் சோள வயலை வைத்திருக்க வேண்டும். வயலை 2½ முதல் 5 செண்டி மீட்டர் (1 முதல் 2 அங்குலம்) ஆழத்திற்கு மேல் கொத்தி விடக்கூடாது.

### நீர்ப்பாசனம்.

விதைகளை ஊன்றிய உடனேயே நீர்ப் பாய்ச்சவும். அதன் பின் 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறைவீதம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மக்காச் சோளப் பயிர் நிலத்தில் போதிய ஈரமின்றி வாடும்படிவிடவே கூடாது. மக்காச் சோளம் பூக்கும் பருவத்தில் நீர்ப் பாசனம் செய்யத் தவறவே கூடாது. கதிர் உருவாகும் தருணத்தில் மக்காச் சோளப் பயிருக்கு அதிகத் தண்ணீர்தேவைப் படுவதால், பூத்த பின் கதிரில் மணி முற்றும் வரை தேவையான அளவு தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியமாகும்.



மாண்புமிகு முதலமைச்சர் மக்காச்சோளக் கதிரைப் பார்வையிடுகிருர்.

### வடிகால் வசதி.

நீர்ப்பாசனத்தைப் போலவே வடிகால் வசதியும் மக்காச் சோளத்திற்கு அவசியமாகும். மக்காச் சோளம், தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் நன்றாக வளராது. எனவே, நல்ல மகசூல் பெற போதிய வடிகால் வசதி மிகவும் இன்றியமையாததாகும்.

கனத்த மழைக்குப் பின் வெகு விரைவில் தண்ணீரை வடிக்க வயலைச் சுற்றியுள்ள வரப்புகளைத் தேவையான இடங்களில் வெட்டி, நீரை வடித்து விட வேண்டும். அத்துடன் கூட நிலமட்டத்திலிருந்து 90 செண்டி மீட்டர் (3 அடி) ஆழம் வரைத் தண்ணீர் தேங்காமல் இருக்க வடிகால் வாய்க்கால்களை அமைத்து, அவைகளின் மூலம் நீரை வடித்து விடவும்.

பயிர்ப் பாதுகாப்பு.

மக்காச் சோளப் பயிர்களைப் பெரும் பாலும் குருத்துப் புழுவும், கதிர் துளைக்கும் புழுவுமே (கம்பளிப் பூச்சி) தாக்கி சேதம் விளைவிக்கின்றன. இவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய தடுப்பு முறைகளை அறிய உங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க அலுவலரையோ அல்லது ஊர்ப் பணி யாளரையோ கலந்தாலோசியுங்கள்.

மக்காச் சோளத்தில் தண்டு அழுகல் நோய் காணப்படுவதைத் தடுக்க விதைத்த 35-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக 2 முறை பைட்ட லான் மருந்தைத் ($2\frac{1}{2}$ கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்து மண்ணை நனைக்கவும்.

மக்காச் சோளக் கதிர்களுக்கு பறவைகள், குரங்குகள், குள்ள நரிகள் ஆகியவைகளாலும் பெரும் சேதம் ஏற்படக் கூடுமாதலின், அவை களிலிருந்தும் மக்காச் சோளத்தைக் காப்பாற்ற வேண்டும்.

அறுவடை.

கதிரைச் சுற்றியுள்ள இலைகள் இளம் பசுமை நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக மாறிக் காய்ந்த பின்னர் கதிர்களை அறுவடை செய்யவும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு மக்காச் சோள மகசூலைப் பெருக்கிப் பெரும்பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு

சென்னை-81

உயர்ந்த தரமுள்ள

"கோபுரம்" மார்க்

மைதா, சூஜி

மற்றும்

"கப்பல்" மார்க்

ஆட்டா

கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath


## வெளிநாடு செல்லும் வேலூர்க் காலணிகள்

வேலூரில் செய்யப்படும் காலணிகளுக்கு அமெரிக்காவி லிருந்து அழைப்பு வந்துள்ளது. சுமார் 50 ஆயிரம் ரூபாய்க்கு மகளிர்க்கான நவநாகரீகக் காலணிகள் ஆடவர் களுக்கான அழகிய காலணிகள், தோல்பைகள் அனுப்பும்படி வேலூரில் உள்ள கதர் வாரியத்தின் தொழிற்கூடமான காலணி அலகிற்கு அந்த வேண்டுகோள் வந்துள்ளது.

இந்த ஆணை கிடைத்ததற்கு முக்கியக் காரணம் இந்தத் தொழிற் கூடத்தில் செய்யப்படும் காலணிகளும், தோல் பொருட்களும் எழிலோடு இருப்பதுடன் மிகக் குறைந்த விலையில் கிடைப்பதும் முக்கிய காரண மாகும். ஒருமுறை அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜோசப், வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்தார். அவர் ஒரு நாள் மாலையில் இந்தத் தோல் அங்காடிக்கு வருகை தந்தார். தரமான தோலினால் மலிவான விலையில் செய்யப்பட்ட காலணிகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. தனக்கு ரூ. 23.50-ல் ஒரு காலணியும், தனது துணைவியாருக்காக ஒரு அழகுப் பையும் வாங்கினார். அமெரிக்கா திரும்பி யதும் அவர் இந்தக் காலணி அங்காடியின் சிறப்புப் பற்றி எடுத்துரைத்தார். அதன் பலன் இம்மாதம் 2-ம் தேதி இந்த ஆணை வந்தது. அமெரிக்காவுக்குப் பத்து ரகங்களில் பல்வேறு காலணிகளும் தோல் பொருட்களும் அனுப்பும்படி அந்த ஆணையில் கேட்டிருந்தனர். அவர்கள் விரும்பிக் கேட்ட பொருட் களின் மொத்த மதிப்பு 50,000 ரூபாய் இருக்கும்.

"அமெரிக்காவைத் தொடர்ந்து சோவியத் நாட் டிற்கும், மற்றைய வெளிநாடுகளுக்கும் காலணிகள் ஏற்றுமதி செய்யக் கடும் முயற்சி எடுத்து வருகிறோம்.

இங்கு வருகை தருகிறவர்களில் காலணிகளின் மலிவான விலையைப் பாராட்டாதார் யாருமிலர். அயர் லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் எல்லிஸ் மேரி, இங்குள்ள காலணிகள் போல் நேர்த்தியான எழிலுடன் மலிவான காலணிகளை எங்கும் பார்த்ததில்லை என்று பாராட்டினார். அவர் தேர்ந்தெடுத்த காலணி எட்டரை ரூபாய்தான் என்றதும் "ஆகா.. எவ்வளவு குறைந்த விலை" என்று ஆச்சரியப்பட்டார். குடியாத்தத்தைச் சேர்ந்த கல்லூரி முதல்வர், விலை மலிவாகயிருப்பதனால் அவருக்கு நாலாண்டுகளுக்குத் தேவையான காலணிகளை அப்போதே வாங்கிவிட்டார். மக்கள் விரும்பும் வகை களிலும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போலும், அதிக லாபம் கருதாமலும் நாங்கள் தோல் பொருட்களைத் தயாரிக்கிறோம். அதுதான் அனைவரையும் கவரும் எங்களது தொழில் ரகசியம்" என்கிறார் காலணி அலகின் ஆர்வமிக்க நிர்வாகி பொன்னுசாமி.




இன்றைய தமிழ்நாடு அரசு, உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், வருவாய் பெருகிடவும் செய்துள்ள நன்மைகள் ஒன்றல்ல! இரண்டல்ல!! ஆயிரம்! ஆயிரம்!!

''ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!'' என்பது போல், தமிழ்நாடு அரசு ஆயிரமாயிரம் நன்மைகள் செய்திருப்பினும் அவைகளில் சிலவற்றை ஈண்டு எடுத்துரைக்கின்றோம்.

**1. குறைகேட்டு நிறைசெய்ய முன் வந்த முதல் அரசு இது!**

''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது'' என்ற வழக்கத்திலிருக்கும் பழமொழியை மாற்றி, ''மேழி பிடிக்கும் கை, மேதினி ஆளும் கை!'' என்ற புதுமொழிக்கேற்ப உழவர் பெருமக்களின் நிலையை உயர்த்திட வேண்டுமானால், அவர்களின் குறைகளை முதலில் கேட்டறிந்து, அக்குறைகளைப் போக்கி நிறை செய்திட, அதையும் விரைவாகச் செய்திட வேண்டும் என்று விரும்பிய தமிழ்நாடு அரசு மாவட்டந்தோறும், உழவர் பெருமக்களும், அலுவலர்களும் அடங்கிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, குறைகள் என்னென்னவென்பதனையும் அவைகளை அகற்றிட என்னென்ன செய்யலாம் என்பதனையும் மிகவும் விரிவாகக் கலந்தாலோசித்தது. உழவர்களின் குறைகளை முதலில் கேட்டு, அதன்பின் அக்குறைகளை எப்படிப் போக்கலாம் என்பதை அலுவலர்களுடன் கலந்தாலோசித்துப் பின்பு இருதரப்பினரையும் ஒருங்கே கூட்டிக் குறைகளை அகற்றிட ஆவன செய்த அரசு தமிழ்நாடு அரசுதான் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

அன்று மனுநீதிச் சோழன், நீதி கேட்ட இடத்திலேயே நீதி வழங்கியதாகவும், குறை சொல்லப்பட்ட இடத்திலேயே குறைபோக்கி நிறை செய்ததாகவும் வரலாறு கூறுகிறது. அதே போல் குறைகளை எடுத்துச் சொல்லிய இடத்திலேயே, அவைகளை அகற்றிட ஆணை பிறப்பித்தது இந்த அரசே என்பதை வரலாறு கூறும். வேளாண்மைக் கருத்தரங்குகள் குறைகளை அகற்றிடப் பயன்பட்டதுடன், எதிர்காலத் திட்டத்திற்குத் தேவையான அனுபவங்களை உழவர் பெருமக்களிடமிருந்து பெறுவதற்கும் பயன்பட்டன. இன்று செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அக்கருத்தரங்குகளிலே தான் விதை ஊன்றப்பட்டது என்பதும் நினைவு கொள்ளற்குரியதாகும்.

**2. உலகில் எங்கும், என்றும் இதுவரை நடைபெறாத அமைதி புரட்சியை உருவாக்கியதும் இந்த அரசே!**

காலம் நமக்குக் கற்றுத் தந்த பாடத்தையும், உழவர் பெருமக்களின் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு காலஞ்சென்ற **பேரறிஞர் அண்ணா** அவர்கள், பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களிலே, இருபோக சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டார். அதன் பயனாய் எடுத்த எடுப்பிலேயே, முதல் ஆண்டிலேயே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 2·1 இலட்சம் ஒருபோக சம்பா நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

''இது உலகிலே எங்கும், என்றும், இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி மட்டுல்ல; அமைதியாக நடைபெற்றுள்ள உழவுப் புரட்சியுமாகும்'' (Silent Revolution in Agriculture).

இப்படிப் புகழ்ந்துள்ளது ஒரு பத்திரிகை! நம் நாட்டுப் பத்திரிகை அல்ல அது! அமெரிக்க நாட்டுப் பத்திரிகை! அப்பத்திரிகையின் பெயர் 'லுக்' (''LOOK''). நாளொன்றுக்கு

60 இலட்சம் பிரதிகள் அச்சாகி விற்பனையாகின்ற மாபெரும் பத்திரிகை அது. அப்பத்திரிகையே இவ்வாறு புகழ்ந்துவிட்ட பின்பு மற்றவர்கள் புகழ்ந்து கூறியுள்ளதை ஈண்டு விளக்குதல் வீணே என்று விட்டுவிடுகிறோம்.

இந்தத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது அதிகச் செலவாகியிருக்கும் என்று நினைக்கலாம். அதுதான் இல்லை! ஏற்கெனவே இருந்த அலுவலர்களையும், குறைந்த வசதிகளையும் கொண்டே இந்த அமைதிப் புரட்சி நடைபெற்றுள்ளது என்பதை நினைக்கும்போது, இத்திட்டத்திற்குக் காரணமான இன்றைய அரசினை அண்டை மாநிலத்தவரும், அயல்நாட்டவரும் பாராட்டுவதில் தவறேதும் காணமுடியுமா?

இந்த வெற்றியின் காரணமாக இருபோக சாகுபடித் திட்டத்தை சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி அணை, வீராணம் ஏரிப்பகுதி, வைகை அணைப்பகுதிகளிலும், பரம்பிக்குளம் ஆளியாறு பகுதிகளிலும், தாமிரபரணி பாசனப்பகுதிகளிலும், புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினால் விளைந்த பயன் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைத்தது மட்டுமல்ல; நாட்டில் நிலவி வந்த உணவுப் பற்றுக்குறையும் மறைந்து விட்டது!

**3. ''புஞ்சை விளையின் பஞ்சம் தீரும்!'' என்பதை உணர்ந்து புஞ்சை நில மேம்பாட்டிற்கும், புஞ்சை நில உழவர் பெருமக்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழி செய்த முன்னோடி அரசு இது!**

சென்ற ஆண்டுதான், இந்தியாவின் திட்டக் குழு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலாவது, புஞ்சை நிலமேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கவேண்டும் என்று நினைத்தது. ஆனால், இந்த அரசு, மொத்தம் சாகுபடியாகும் நிலப்பரப்பில் ஏறத்தாழ 60 சத அளவு பங்கு பெறும் புஞ்சை நிலங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே புஞ்சை நில மேம்பாட்டிற்கு வழி செய்யும் நோக்கின் **முதல் முயற்சியாகப் புஞ்சை நிலங்களுக்குரிய வரியை நீக்கியது!** மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்து காட்டியது. புஞ்சை நிலங்களில் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கும் மண்வளப் பாதுகாப்பு முறைகளை பெரும்பரப்பில் மேற்கொண்டு வந்தது. இந்த ஆண்டில் புஞ்சை நில உழவர் பெருமக்களும் பயனடைய வேண்டுமென்பதற்காக புஞ்சை நிலங்களுக்கு ஏற்ற உயர் விளைச்சல் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1·5 இலட்சம் ஏக்கரில் புஞ்சை நிலங்களிலும் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்த எச்.பி. 3 கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது மட்டுந்தானா? கோவில்பட்டிப் பகுதியில் முன்னோடித் திட்டமாக மானாவாரிச் சாகுபடித் திட்டமும் (Dry farming scheme) செயல்படுத்தப்படுகிறது. இன்னும் பல திட்டங்களை விரைவில் செயல்படுத்தவும் திட்டமுள்ளது.

**4. மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்து மாற்றாரும் புகழும் பேறு பெற்ற அரசு இது!**

ஐ.ஆர். 8 நெல் அதிக மகசூல் அளிக்கும் என்பதை அனைத்து மாநிலங்களும் அறிந்திருந்தாலும் ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்ய மற்ற மாநிலங்கள் சுணங்கின. ஆனால் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் ஐ.ஆர். 8 நெல் பயிரிடும் தீவிரத் திட்டத்தைச் (Crash Programme) செயல்படுத்தியது. மேற்படி மூன்று மாவட்டங்களிலும் இத்திட்டத்தில் பங்குபெற்ற உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதை, உரம், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவைகளை உழவர் பெருமக்களின் வீட்டு வாசலிலேயே லாரிகளில் கொண்டு போய்க்கொடுக்கப்பட்டது. லாரிகள் 'நடமாடும் வேளாண்மைக் கிடங்காகப்' பயன்படுத்தப்பட்டு உழவர்களின் வீட்டை நோக்கி வந்து, உழவர்களின் வீட்டுக் கதவைத் தட்டி விதை வேண்டுமா? உரம் வேண்டுமா? பூச்சிப் பூஞ்சாள மருந்து வேண்டுமா? வாங்கிக் கொள் இதோ! கடன் வேண்டுமா? வாங்கிக்கொள் இதோ! என்று கேட்டுக் கொடுத்த இது போன்ற நிகழ்ச்சி உலக வரலாற்றில் நடைபெற்றதாகக் காணோம்! இத்தகைய சலுகைகளைத் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டில் செய்ததன் காரணமாக மேற்படி 3 மாவட்டங்களிலும் ஐ.ஆர்.8 நெல் சாகுபடி செய்யத் திட்டமிட்டிருந்த குறிக்கோள் அளவு 3·5 இலட்சம் ஏக்கராக இருக்கச் சாதனையோ ஏறத்தாழ 8 இலட்சம் ஏக்கராக இருந்தது! இம்முயற்சி வெற்றி பெற்றதனாலேயே $1\frac{1}{2}$ ஆண்டு காலம் வறட்சியால் வாடிய தமிழ்நாடு, உணவுப் பற்றுக்குறை நீங்கி, உணவுக் கட்டுப்பாட்டினை (Food Control) அகற்றும் அளவுக்கு உயர்ந்தது.

இந்தியாவிலேயே முதன் முதலாக இத்தகைய மாபெரும் திட்டம் தீட்டிச் செயல்படுத்திக் காட்டியதால், மாற்றாரும் தமிழ்நாடு அரசைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் புகழ்ச்சி ஒன்றும் நமக்குத் தேவையில்லை. உணவு பற்றுக்குறையைப் போக்கிவிட்டோம் என்ற திருப்தி கிடைத்ததே அதுவே போதும்! அத்திருப்தி மேலும் பல திட்டங்களை நிறைவேற்றிடும் தெம்பினை அளித்துள்ளது!

''தட்டுங்கள் திறக்கப்படும்! கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற நிலையில்லாமல், தமிழ்நாடு அரசே தன் அலுவலர்களை அனுப்பி, உழவர்களின் கதவைத் தட்டி, தேவையென்ன சொல்லுங்கள்! தருகிறோம் வாங்கிக் கொள்ளுங்கள்! என்றது. இதனால் அல்லவோ அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை மாறி எங்கும் அரிசி தேவையான அளவு கிடைக்கும் நிலை மலர்ந்து உள்ளது! உழவர் பெருமக்களின் வருமானமும் உயர்ந்துள்ளது!

**5. உழவர் பெருமக்களுக்காக நட்டத்தை ஏற்றுக்கொள்ளும் அரசல்லவோ இது!**

இந்த அரசு புதிதாக அமைவதற்கு முன்பு தமிழ் நாட்டில் இரசாயன உரங்கள் கிடைக்கவில்லை. இந்த அரசு பொறுப்

பேற்ற உடனேயே இரசாயன உரங்களைத் தேவையான அளவு தேவையானபொழுது கிடைக்கச் செய்தது.

இரசாயன உரங்களின் விலையில் 10 சத அளவை மத்திய அரசு உயர்த்திய பொழுது, தமிழ்நாடு அரசு அந்த விலை உயர்வை ஏற்றுக் கொண்டு பழைய விலையிலேயே 31-3-69 வரை விற்கச் செய்தது. இரசாயன உரங்களின் விலையேற்றத்தினால், உழவர் பெருமக்கள் அல்லலுறக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில், தமிழ்நாடு அரசே அதிக விலையை ஏற்றுக் கொண்ட வகையில் ஏற்பட்ட நட்டத்தைக் கணக்கிட்டால், தமிழ்நாடு அரசு ஏழை உழவர் வாழ்வு வளம்பெற எதையும் தாங்கிக்கொள்ளும் என்பது புரியும். மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்த தமிழ்நாடு அரசு உழவர்களின் அரசு என்று கூறவும் வேண்டுமோ?

இன்னொரு வகையிலும் தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களின் நல்வாழ்விற்காக நட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்றைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்பு பூச்சி பூஞ்சாள மருந்துகள் விற்பனையின்போது உணவுப் பயிர்களுக்கு 25 சதமானியமும், வாணிகப் பயிர்களுக்கு 50 சத மானியமும் கொடுக்கப்பட்டது. கருத்தரங்குகளின் பொழுது உழவர் பெருமக்கள், உணவுப் பயிர்களுக்கு வழங்கப்படும் மானியத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசு எல்லாப் பயிர்களுக்கும் ஒரே அளவில் அதாவது 35 சத மானிய விலையில் பூச்சி பூஞ்சாள மருந்துகளை விற்க ஆவன செய்தது. இதனால் ஏற்பட்ட நட்டத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது.

சமீபத்தில் மத்திய அரசு பூச்சி, பூஞ்சாள மருந்துகளுக்கு அளிக்கப்பட்டு வரும் தள்ளுபடியை ( subsidy ) நிறுத்திவிடுமாறு எல்லா மாநில அரசுகளுக்கும் அறிவித்துள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு உழவர்களின் நலனை முன்னிட்டு இத்தள்ளுபடியை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டு வரை அளிக்க முடிவு செய்துள்ளது. ஆனால் தள்ளுபடியை ஆண்டிற்கு ஆண்டு 5 சதவீதம் குறைக்கவும் முடிவு செய்துள்ளது. மத்திய அரசு இதற்கான மானியம் கொடுப்பதை நிறுத்திவிட்டால், தமிழ்நாடு அரசே, இதனால் ஏற்படும் நட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முன் வந்துள்ளது.

இவ்வாறு பலவகையில் உழவர் பெருமக்களின் நலனைக் கருதி, நட்டத்தை ஏற்றுக்கொள்கிறது தமிழ்நாடு அரசு என்பதைத் தெளிவுபடுத்துகிறோம்.

### 6. நன்மைகளை விரைந்து செய்வதும் தமிழ்நாடு அரசே!

மத்திய அரசு ஒவ்வொரு மாநிலமும் நான்காவதுஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டிற்குள் எவ்வளவு ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்திருக்கிறது. அந்த இலக்கினை இந்த ஆண்டிலேயே எய்திட தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. அதாவது 1973-74-ல் நிறைவேற்ற வேண்டிய இலக்கினை 1970-71-லேயே

## தமிழ்நாடு அரசின் புதிய முயற்சி!

தமிழ்நாட்டின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்குப் பருப்பு வகைப் பயிர்களின் விளைச்சலைப் பெருக்கிடும் முதல் முயற்சியாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 5·35 இலட்சம் ஏக்கர் பரப்பில் பருப்பு வகைகளைப் பயிரிட ரூபாய் 24·98 இலட்சம் செலவிடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தரமான பொறுக்கு விதைகளை உழவர் பெருமக்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்காக, ரூபாய் 24 இலட்சம் செலவில் விதைகளை வாங்கி, அடக்க விலைக்கே விற்பனை செய்யப்படும் என்றும், பூச்சி பூஞ்சாள மருந்துகளை 15 சதத் தள்ளுபடி விலையில் விற்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் துணைகொண்டு, வர இருக்கும கோடைப் பருவத்தில் பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிட்டுப் பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுக்க வேண்டுமென உழவர் பெருமக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

நிறைவேற்றிவிட்டு மற்றெல்லா மாநிலங்களுக்கும் முன்னேடியாக விளங்க முயற்சி செய்து வருகிறது. சென்ற ஆண்டில் சுமார் 22 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆண்டு 40 இலட்சம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில்மட்டும் தான் விரைவா? எல்லாத் திட்டங்களிலுமே விரைவாகத்தான் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது! சென்ற ஆண்டில் சுமார் 1.82 இலட்சம் ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. ஆனல் இந்த ஆண்டில் 14 இலட்சம் ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கும் மாபெரும் முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மத்திய அரசால் அனுப்பப்பட்டு, சென்னை வந்த மத்திய அரசின் அலுவலர்கள் மேற்படி இரு மாபெரும் திட்டங்களையும் வெற்றிகரமாக நடத்தமுடியுமா? என்று ஐயத்துடன் கேட்டனர். அப்பொழுது எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்பதை விளக்கியவுடன், மத்திய அரசின் அலுவலர்களெல்லாம், தமிழ்நாடு அரசின் முயற்சியைப் பாராட்டியதுடன், தமிழ்நாடு அரசு விரைந்து செயல்படுவது கண்டு வியப்புறுவதாகவும் கூறியுள்ளனர். இப்படி விரைந்து செயல்படுவதனலேயே, உணவுப் பற்றுகுறை நீங்கி உபரி நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்குள் எங்கு வேண்டுமானலும் அரிசி எடுத்துச் செல்லும் நிலையும், உணவுக் கட்டுப்பாடு நீக்கமும், பொது ஏலத்தில் அரிசி விற்கும் நிலைமையும் மலர்ந்துள்ளது. இந் நிலைமைகளெல்லாம் தமிழ்நாடு அரசு செய்த நன்மைகளால்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

**7. நீர்த் தீர்வையை நீக்கியதும் தமிழ்நாடு அரசே !**

ஒரு போகம் சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு இரண்டாம் போகச் சாகுபடிக்குரிய நீர்த் தீர்வையைத் தள்ளுபடி செய்து கொடுக்கப்பட்டதும், மற்ற மாநிலங்களில் செய்யப்படாத நன்மையேயாகும்.

**8. ஏழை உழவர்களும் எளிதில் கடன் பெற சட்டத்தைத் திருத்தியதும் தமிழ்நாடு அரசே!**

பெருநிலக் கிழார்களே முன்பெல்லாம் அரசாங்கத்திலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கடன் பெற முடிந்தது. சிறு அளவு நிலம் உள்ள ஏழை உழவர்களுக்கு அக் கடன்களெல்லாம் கிட்டாத நிலையில் எட்டாத தூரத்தில் இருந்தது. அவர்களுக்குப் போதிய சொத்து மதிப்பு இல்லை என்ற காரணத்தினல், அவர்களுக்குக் கடன் கொடுப்பதைச் சட்டம் அனுமதிக்கவில்லை. சிறு அளவு நிலம் வைத்துள்ள உழவர்களும் கடன் பெற்று உணவு உற்பத்தியைப் பெருக்கித் தானும் வாழ்ந்து, மற்றவர்களும் வாழ வழி செய்ய முன்வர வேண்டும் என்பதற்காக இன்றையத் தமிழ்நாடு அரசு சட்டத்தையே திருத்தி உள்ளது. இந் நிகழ்ச்சி இங்கன்றி, வேறெங்கும் உண்டோ !

## தமிழ்நாட்டில் மேலும் இரு புதிய அணைக்கட்டுகள் !

தமிழ் நாட்டில் கருப்பநதி, பிளவுக்கல் ஆகிய இரு அணைக்கட்டுத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டக் குழுவின் அனுமதி கிடைத்துவிட்டது என்ற செய்தியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணநிதி அவர்கள் 5-12-70 அன்று அறிவித்துள்ளார்கள்.

கருப்பநதித் திட்டத்திற்கு ரூபாய் 140 இலட்சமும், பிளவுக்கல் திட்டத்திற்கு ரூபாய் 76 இலட்சமும் செலவு ஆகும்.

கருப்பநதித் திட்டத்தின் பயனகத் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டத்தில் ஏற்கனவே பயிராகும் நிலமான 8,600 ஏக்கர்களுக்கு உறுதியான பாசன வசதியும், புதிதாக 2,900 ஏக்கர்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

பிளவுக்கல் திட்டத்தினல் ராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் பழைய பாசனப் பகுதியில் 7,600 ஏக்கர்களும், புதிதாக மேலும் 1,500 ஏக்கர்களும் பயனடையும்.

**9. பாசன வசதியைப் பெருக்குவதும் தமிழ்நாடு அரசே!**

தமிழ் நாட்டில் பெரிய நீர்ப்பாசன வசதிகளை அமைத்திட மேலும் வாய்ப்பு இல்லையாதலின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ( Minor Irrigation Schemes ) நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. பூமிக்கடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவந்து 'பசுமைப் புரட்சி' நாடு நெடுகிலும் பரவிட தமிழ்நாடு அரசு, சமுதாயக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதிலும், பாசனக் கிணறுகள் தோண்டுவதிலும் தீவிரம் காட்டுகிறது. பழைய அணைகளை விரிவு படுத்தவும், மேலும் புதிய அணைகளைக் கட்டவும் பெருமுயற்சி நடக்கிறது.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைத்து, அது திறம்படச் செயல்படச் சட்டமும் இயற்றியுள்ளது தமிழ்நாடு அரசே! இதனல் சிறு உழவர்களும் உற்பத்தியைப் பெருக்கிட இயலும். இந்தியாவிலேயே முதன்முதலாக இத் திட்டத்தை செயல்படுத்தியதற்காக இந்தியப் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களே தமிழ்நாடு அரசை வாழ்த்தியுள்ளார்.

உலக வங்கி (World Bank) யிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் கிடைத்தபின் காவிரி ஆற்றுப் புனரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். அது நிறைவேறிவிட்டால், என்றும் தமிழ்நாடு மற்றவர்களை உணவுக்காக எதிர்பார்க்காத நிலை உருவாகும். அதுவே, தமிழ்நாடு அரசு இதுவரை செய்துள்ள நன்மைகளுக்கெல்லாம் சிகரமாக விளங்கும்.

உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்காக இப்படி எத்தனையோ நன்மைகளை தமிழ்நாடு அரசு செய்து வருகின்றது. மற்றவர்கள் பாராட்டிற்காக அல்ல! கடமையை உணர்ந்து செய்கிறது!

(தொடரும்)

# வெண்பாப் போட்டி

## 4. எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

● ஆறா யிரத்தைந்நூ றாசிரியர்க் கிவ்வாண்டில்
மாறாமல் வேலைதரல் மாபெரும்-பேறாகும்
தித்திக்குந் திட்டமெனத் தீந்தமிழ் நாட்டரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

— எம். இலக்குமி, சின்னமனூர்

கொத்து மலர்குலுங்கக் கோலப் புகழ்பாடிப்
புத்துணர் வூட்டிப் புதுமைக்கே-வித்திட்ட
முத்துக் கடல்சூழ்ந்த மூவேந்தர் வாழ்நாட்டை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

ம. பாலசுந்தரம், ஆரணி.

அறம்பொரு ளின்பமெனும் அம்மூன் றையுமே
திறம்படச் செப்புகின்ற தெய்வக்-குறளினையே
தித்திக்கும் தீந்தமிழில் செய்ததிரு வள்ளுவனை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

குத்தீட்டி இல்லாத கொள்கைப் பெரும் படையால்
புத்தாட்சி கண்டு, புதுநலன்கள்-அத்தனையும்
மொத்தமாய்ச் செய்யும்நம் முன்னேற்றப் பேர்அரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அ. சி. மணியன், அம்மையப்பன்.

வாளாண்மை காட்டாமல் வாய்வீரம் பேசாமல்
வேளாண்மை நாளெல்லாம் மேலாக்கித்-தாளாலே
முத்தனைய தாய்மொழியின் மொய்ம்பெல்லாம் காட்டியதை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்

தெள்ளிய நற்கருத்து, தேர்ந்த அறவுரைகள்
ஒள்ளிய வாழ்க்கை உபதேசம்-வள்ளல்போல்
அத்தனையும் அள்ளி அளிக்கும் திருக்குறளை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சந்திரா கண்ணன், தஞ்சை.

வாட்டி வதைக்கின்ற வன்பசியை நீக்கியரும்
பாட்டாளி மக்கட்குப் பாடுபட்டு-நாட்டிடையே
முத்தமிழ்க்கு வாழ்வளித்து முன்னேறும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—புலவர் இரா. செயபால் சண்முகம், சென்னை-7

காந்தியக் கொள்கை கடைப்பிடித்தே ஆளுவதில்
தீந்தமிழர் நம்கலைஞர் தீவிரமாய்ப்-போந்ததினால்
சித்திக்கும் நற்செயல்கள் சேர்க்கும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கவிஞர் சிவ. நடராசன், மாமல்லபுரம்.

நல்ல நிலம்தந்து, நாதியற்ற மக்களுக்கு
இல்லம் தனைவழங்கி, என்றென்றும்-தொல்லையிலே
தத்தளிப்போர் வாழ்வுயரத் தானுழைக்கும் ஆட்சியினை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. தங்கவேல், வேடசந்தூர்.

ஆயிரம் ஆயிரம் ஆசிரிய அன்பர்கள்
தாயிழந்த சேய்போல் தவித்திட்டார்-ஆயினும்
தித்திக்கும் நம்அரசின் தீவிரத் திட்டத்தை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அ. சேசுதாசு, அ. வெள்ளோடு.

சிங்கம்போல் பேச்சு சிறுத்தைபோல் நல்லாற்றல்
தங்கத் தமிழேதான் தன்மூச்சு-தங்குபுகழ்
மொத்தஉரு நம்முதல்வர் மேவும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சி. மந்திரி, கரூர்.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்

எம். இலக்குமி,
வடக்குத் தெரு, சின்னமனூர்,
மதுரை மாவட்டம்.

ஏர்நிலையைத் தான்பெருக்கி, ஏழையரின் வாழ்வுயர்த்தி,
நேர்மைத் தமிழின் நிலைஉயர்த்தி-ஊர்புகழ
முத்தாட்சி செய்யும் முதல்வர் கலைஞரையே
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சி. கண்ணன், கரூர்.

மதுவாடை இல்லாமல்; மாறுகின்ற கட்சிச்
சதுராட்டம் இல்லாமல் சாற்றும்-புதுமைகள்
புத்துணர்ச்சி யோடு புரியும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மருதூர் மணிவண்ணன், விழுப்புரம்.

வட்ட முழுமதியில் வாலாட்டும் பாம்பென்றே
இட்ட கதையெல்லாம் இன்றில்லை-தட்டியதும்
பத்திரமாய்த் தானியங்கும் பேருந்தின் சாதனையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எம். சண்முகம், சென்னை-10.

பிச்சை யெடுப்போர், பிணியோர் மறுவாழ்வு
மெச்சப் பெறுவதுடன் மேன்மையுறக்-கச்சிதமாய்
நத்திப் புதுத்திட்டம் நாட்டுந் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கா. ப. கவுண்டப்பா, நரிக்கல்பட்டி.

வேலையில்லாத் திண்டாட்டம் வேலையற்றுப் போகுதுகாண்
ஆலையில்லை என்றகுறை அற்றதுகாண் -பாலையெல்லாம்
வித்திட் டமோக விளைச்சல்காண் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சுப்பிரமணியன், புதுவை.

தஞ்சமென்று வந்தோரைத் தாய்போல் அரவணைத்துப்
பஞ்சமின்றி வாழ்விக்கப் பல்தொழிலால்-வஞ்சமின்றி
எத்திறத்தும் வேலைதர ஏற்ற தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

இல்லை நிலமில்லார், கல்வியிலார் என்னுஞ்சொல்
'இல்லை' எனும்நிலையை எய்திடவே-நல்லமைச்சர்
நித்தம் உழைக்கும் நிலையால் 'தமிழரசை'
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

காட்சிக் கெளியர் கடுஞ்சொல்லும் இல்லாராய்
ஆட்சி முறைசெய்யும் ஆற்றலர்-மாட்சிசேர்
உத்தமராம் நம்கலைஞர் ஓங்குபுகழ் ஆட்சியினை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எ. எம். சிதம்பரநாதன், பூதப்பாண்டி.

சட்ட மொழுங்கு சமதர்மத் தத்துவங்கள்
திட்டமென்னும் தோட்டத்தில் சிங்கார-மொட்டவிழ்ந்து
தித்திக்கும் பூக்காடாய்ச் சீர்பரப்பும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கணபதி, திருச்சி-8.

ஆன்றபுகழ்க் காந்தி அரும்பியநாள்; நேருமகான்
தோன்றியநாள்; இன்பச் சுதந்திரநாள்:—மூன்றுக்கும்
குத்து விளக்கேற்றிக் கோலவிழாக் காண்அரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கருப்பன்செட்டி, திருச்சிராப்பள்ளி-15.

பஞ்சப் பகையைப் பழிவாங்கி நாட்டையே
தஞ்சையென மாற்றும் தமிழரசை-நஞ்சுவிலை
வித்தான வேலையிலா மைதீர்க்கும் வித்தகரை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பா. தங்கம்மாள், நத்தம் கோவில்பட்டி.

நெறிநின்று நேசக் கரங்கொண்டு மக்கள்
குறைவென்று கூர்த்த மதியால்-நிறைகொண்டோர்
அத்திப்பூப் போல அமைத்த தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—த. குப்பால், வேப்பங்குளம்.

ஆட்சி முறையில் அமைதி; அதன் வழியே
காட்சியென நிற்கும் கடமைவெற்றி—மாட்சியால்
தித்திக்கும் வள்ளுவத்தின் தெள்ளுதமிழ் நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—இரா. கேசவன், ஒசூர்.

தாழ்ந்த நிலையகற்றித் தஞ்சைக் களமாக்கி
ஏழ்மைப் பசிபோக்கி, ஏழைக்கும்-வாழ்வுதர
வித்திட்டு மேதினியில் வெற்றிகண்ட நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பேரிறைவன், பழனி.

செந்தமிழைப் போற்றுதலால் சீர்வளத்தைக் கூட்டுதலால்
சிந்தையள்ளக் கோலோச்சும் செம்மையால்-இந்தியத்துள்
தித்திக்கும் திட்டங்கள் தீட்டும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—ம. தென்னவன், துவாக்குடிமலை.

ஆடுதுறை மகளை அன்புஜெயா பத்மாவை
நாடும் 'கருணை'வை நாடுவதால்-பாடுநலம்
பத்தையுங் காக்கப் பாழ்பசியைப் போக்கரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கே. காசியரசன், தேவங்குடி.

முன்னேடி அண்ணனுக்கு முத்தான நூற்றுண்டும்
பின்னுலே நேருவுக்குப் பெற்றதினம்-கொண்டாடி
தித்திக்கும் வெற்றிவிழா செய்துயர்ந்த சாதனையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. ப. தமிழ்வேந்தன், திருச்சிற்றம்பலம்.

நரிக்குறவர் கல்வி நலம்பெற்றுத் துய்க்க
ஓரக்காட்டில் தங்கும் உறையுள்-அரசுகட்டும்
தித்திக்கும் செய்தி செவிக்கின்பம் ஊட்டுவதால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. சிக்கந்தர்பாட்சா, கோரிக்கடவு.

கல்லும் கவிபாடும் வண்ணக் கவின்கோயில்
மல்லேயிலே தோற்றுவித்தான் மாமல்லன் !-சொல்லரிய
கைத்திறனே, நம்முன்னேர் கண்ட கலேவாழ்வை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அமராவதியான், அரக்கோணம்.

எவர்மனமும் நோகாமல் யார்பகையு மின்றித்
தவறெதுவும் நேராமல் தாய்போல்-கவனமுடன்
அத்தனே மக்களேயும் ஆதரிக்கும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—வீ. இரத்தினம் பி.ஏ., பி.எல். பெங்களூர்-21.

எங்கும் குழப்ப மெதிர்நோக்கி நின்ருலும்
இங்கே யமைதியென்று மோங்கிவரும்-மங்காத
முத்தமிழ் நாட்டின் முதல்வரின் ஆட்சியை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

— வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

பிச்சை எடுப்பார்க்கும், பின்தங்கி வாழ்வார்க்கும்,
குச்சில் உழல்வார்க்கும், கூர்மதியால்-மெச்சுபுகழ்
தித்திக்கும் நல்வாழ்வு சேர்க்கும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

கன்னிக் கடலழகைக், கற்ருர் திருக்குறளே
மின்னும் எழிற்காஞ்சி மென்பட்டை-கன்னலெனத்
தித்திக்கப் பாட்டியற்றும் தீங்கலேஞர் ஆட்சியினே
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—செல்வி லட்சுமி மீனுட்சி, எம்.ஏ., நாகர்கோவில்.

நாவாற் பழியுரைத்தார் நாணத், தலேவைத்த
பூவால் இடைதுவளும் பூங்கொடியே—மூவாண்டில்
வெற்றி பல குவித்த வீரத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—குழ. அண்ணுமலே, கோவை.

பிச்சை புகுவார் பெருநோய் பிடித்திட்டார்
இச்சகத்தில் நாதியிலே என்றிருந்தார்-அச்சமற
இத்தரையில் பூத்த இனிமைத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அர. கலேச்செல்வி, கருவம்பாளேயம்.

வலிவாய்நல் லாட்சி மலர்ந்ததனுல், நாட்டைப்
பொலிவாக்கும் பல்திட்டம் போட்டு-நலிவகற்றிச்
சத்தான முத்துத் தமிழை வளர்ப்பதனுல்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

சொல்லும் செயலும் சுயஆட்சி செய்திறனும்
நல்லபல திட்டங்கள் நாடுதலும் -எல்லாமும்
தித்திக்கும் எங்கள் திருத்தமிழர் ஆட்சியினே
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—சி. இராமகிருட்டினன், மேல்பட்டாம்பாக்கம்.

ஊர்தோறும் மின்விளக்கால் ஒண்ணெளி பாய்ச்சுவதால் ;
தேர்வீடாய் மென்குடிலேச் சீர்செயலால் ;-பார்புகழும்
முத்தமிழைப் போற்றுவதால் ; முற்போக்காம் நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—இரா. முருகு கணேசன், மேட்டுப்பட்டி.

மூத்த தலேமகனே, முன்னவனே, அண்ணுவை
வாய்த்த கடற்கரையில் வைத்திறைஞ்சிப்-பூத்தூவி ;
அத்திக்கை வாழ்த்தி ; அரசோச்சும் பெற்றிதனே
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—தாமரைக்கண்ணன், சென்னே-7.

எத்தனேயோ திட்டங்கள் ஈடில்லா நற்பணிகள்
இத்தரையோர் காணு இறைமாட்சி—அத்தனேயும்
ஒத்த தமிழரசை ஓயாப் பணியமைச்சை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. குழந்தைவேல், கரூர்.

சேலத்தாள் சீர்த்தியுற செய்யா எகமகிழக்
காலத்தா ளீங்குக் களிப்பெய்த—சீலத்தால்
தித்திக்க ஆளும் தமிழரசைக் கண்டுதான்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—புலவர் பரமசிவம், முத்துநாயக்கன்பட்டி.

'ஏடா, என் தம்பி எடடாபே ணுவை' யென
வாடா திருக்க வழிசொன்னுர்—நாடெல்லாம்
தித்திக்கும் அவ்வண்ணு சிந்தைவழிச் செல்வதனுல்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—உலகன், ஈரோடு.

செந்நெல் செழிக்குதுகாண் சீர்சிறப்பால் வாழ்வெல்லாம்
கன்னல் சுவையில் களிக்குதுகாண்—மின்வளத்தால்
முத்தமிழர் நாட்டரசு முப்பாலும் இன்பமென
எத்திக்கும் போற்றுதுண்கா இன்று.

—மு. புகழேந்தி, திருமயம்.

பூந்தமிழிற் கல்வி, புதுமுறையில் நெல்விளைவு,
ஏந்தும் ஒழுங்கமைதி, ஏற்றவளம்—வேந்தமைய
ஒத்துழைக்கும் நாட்டாரின் ஓங்குபுகழ், ஆள்வினையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு

ஆங்கிலேயர் காலந்தொட் டாகாமற் போனசில
பாங்கான திட்டங்கள் பார்மகிழத்—தாங்கியே
சித்திக்க வைக்கவந்த சீர்மிகு நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பாக்கியலக்குமி, மானூர்.

முத்தமிழில் வல்ல முதல்வர் கலைத்திறனும்,
பத்திரிகைச் சாதனத்தைப் பண்செய்த—வித்தையன்றே !
புத்துணர்ச்சி ஊட்டும் புதுமைத் ''தமிழரசை''
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—நாவுக்கரசன், தேவகோட்டை.

செந்தமிழில் ஆட்சிகண்டோம்; செந்நெல் மிகுதிகண்டோம்,
வந்ததிரும் பாலே; வறட்சி மழைத்—தொந்தரவும்
சித்திக்க வில்லை; செயல்திறத்து நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

பூ. அண்ணுமலை, மேலச்சேரி.

பட்டா வழங்கியே பாமரரை ஆதரித்தும்
கட்டாயக் கல்விக் கரைகண்டும்—முட்டாமே
இத்திக்கும் செய்தொழில்கள் செய்யும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

மிஞ்சும் நல் விஞ்ஞானம் மெச்சும்நல் வானியல்
அஞ்சும் பொறியாலே ஆயமதி—விஞ்சையை
அத்திக்கும் இத்திக்கும் உத்திக்கும் பாரின்கண்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—ஆ. பீ. யூ. அப்துல்காதர், மேலப்பாளையம்.

முன்னைப் பழமொழியை, மூவா மொழிக்குயிலை,
தன்னே ரில்லாத் தமிழ்மயிலை,—இன்னுயிரைப்
புத்தரசாம் எங்கள் புலமைத் தமிழரசால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—கழுக்குன்றவாணன், ஆயர்பாடி.

கத்துங் கடல்வளமும் காவிரிநன் நீர்வளமும்,
முத்துக் கனிவளமும் மூத்துவர—இத்தரையோர்
தித்திக்குஞ் செந்தமிழில் தீங்கவிதை பாடிவர
எத்திக்கும் போற்றதுகாண் இன்று.

—தி. சு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

உறுபசிக்கு நெல்லீந்தும் உற்றநோய் தீர்த்தும்
செறுபகைகுத் தேர்ந்தவினை செய்தும்—மறுவிலாப்
புத்துலகு காட்டும் புதுமைப் புகழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எ. பார்த்தசாதி, கரூர்.

தண்டமிழைப் போற்றித் தளராது முன்னேற
வண்டமிழர் வாழ்வு வளமாக—மண்மீது
தித்திக்கும் திட்டங்கள் தீட்டித் தருவதனுல்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அழகனுர், கள்ளிக்கோட்டை-2.

முத்தமிழ் வித்தகரை மூதாட்டி அவ்வையைப்
பத்தினிக் கண்ணகியைப் பாரறிய—இத்தரையிற்
பத்துச் சிலையமைத்த பல்லவர்கோன் அண்ணுவை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—ச. நாராயணன், கோவை.

வாழைக் குணத்தவனை வல்லா ரினத்தவனைத்
தாழை மணத்தவனைத் தண்ணிலவை—ஏழையுளம்
தித்திக்குந் தேனைத் திரைகாணுத் தெள்ளமுதை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—செல்வி ம. மாயா, ஆர்க்காடு.

சாலைநிலை வாழ்ந்தவர்க்குச் சாதகமாய் வீடுகட்டி
வேலைநிலை இல்லார்க்கு வேலைதந்தும்—பாலைநிலை
இத்தரையில் நீக்கிட்ட இன்பத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.


நாகலிங்கம் பி.ஏ., மதுரை-13.

அரிசி விலையை அளவாய்த் தடுத்து
வறியோரும் வாங்கியுண்ணும் வண்ணம்—அருஞ்செயலைத்
தித்திக்கும் பாங்கில் செயல்படுத்தும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—பெ. பழனிச்சாமி, இராசக்காபட்டி

சீர்திருத்த நன்மணங்கள் சேர்த்திட்டார் சட்டத்தில்
ஊர்திருத்தச் சீரணியும் உண்டாக்கிப்—பார்திகைக்கத்
தித்திக்கும் சீர்தமிழ்க்குச் சேர்ந்த தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—மு. க. தாசன், பூண்டி.



# குடிசையும் கோபுரமாகும்!

நொச்சிக்குப்பம்—

உலகிலேயே இரண்டாவது அழகிய கடற்கரை என்று சொல்லப்படும் சென்னை மெரீனு கடற்கரையின் தென் கோடியில் அகில இந்திய வானொலி நிலையத்திற்கு எதிரில் தொடங்கி—

பழம்பெரும் மாத கோவிலான சாந்தோம் சர்ச்சின் பின்புறத்தின் வடக்குப் பகுதி வரை நீண்டு கிடக்கும் குடிசைப் பகுதியின் பெயர்தான் நொச்சிக்குப்பம்; இப் பகுதியில் மீனவர்களும் ஆதி திராவிட மக்களும் வாழ்கின்றனர்.

நண்பகல் பன்னிரண்டு மணி;

வெய்யிலின் கொடுமை அதிகமாகத்தான் இருக்கிறது.

மேல் துண்டை தலைப் பாகையாகச் சுற்றிக் கொண்டு அந்தக் குடிசைப் பகுதிகளின் சின்னஞ்சிறு பாதையில் நுழைந்து வருகிருர், அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவருமான திரு இராம. அரங்கண்ணல் அவர்கள். கையிலே குழந்தையுடன் இருக்கும் தாய்மார்கள், வேலையில் ஈடுபட்டிருக்கும் முதியவர்கள், இளைஞர்கள் எல்லாருமே கையெடுத்துக் கும்பிட்டு அவரை வரவேற்கின்றனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. எனினும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் அலுவலர்கள் அங்கே பணியில் ஈடுபட்டிருந்தனர். நொச்சிக்குப்பத்தில் புதிய குடியிருப்புகள் கட்டப்பட விருப்பதால் குடிசைகள் காலி செய்யப்பட்டன. அந்தக் குடிசைவாழ் மக்கள் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துக்கொள்ளக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் பணம் வழங்கியுள்ளது.

புதிய குடியிருப்புகள் கட்டித் தர வழிவகுத்த வாரியத் தலைவரை அப்பகுதி மக்கள் நன்றியுடன் வரவேற்றதில் வியப்பேது?



குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

## சிறப்புப் பேட்டி

விரைவில் நொச்சிக்குப்பம், அயோத்தியா குப்பம், டொம்மிக் குப்பம் பகுதியிலுள்ள குடிசைப் பகுதிகள் வீடுகளாக மாற்றியமைக்கப்படும் என்றும் அதற்கான திட்டங்கள் செயலாக்கப்படுவதையும் குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் விவரித்தார்.

காலை 7 மணியிலிருந்து வரும் பார்வையாளர்கள் 50 பேரைச் சந்தித்து முடிப்பதற்குள் மணி பத்தாகி விடுகிறது. வீட்டிலிருந்து அவருடைய சொந்தத் திரைப்படத் தயாரிப்பு அலுவலகத்திற்குச் சென்று விட்டு, அங்கிருந்து அரை மணி நேரத்திற்கெல்லாம் ஒரு நண்பரின் திருமணத்தில் கலந்து கொள்ளச் செல்கிருர். அதன் பிறகு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் பணிதான். வேலை நடக்கும் இடங்களுக்கு எல்லாம் சென்று விட்டு, நாள் தோறும் அலுவலக வேலைகளையும் கவனிக்கச் செல்கிருர்.

''குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவருக்கு ஊதியம் உண்டா? வேறு வசதிகள் உண்டா?'' என்று கேட்கிறேம்.


'' வெளி மாநிலங்களில்

அதிகாரச் சார்பற்ற வாரியத் தலைவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம், கார் வசதி, வீட்டு வசதி முதலியன அளிக்கப்படுகின்றன என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட நான் **எனக்கு ஊதியமும் வேண்டாம்; வேறு வசதிகளும் வேண்டாம்** என்று சொல்லி விட்டேன். நான் என்தொழில் மூலம் ஓரளவு வசதி பெற்றிருப்பதால் தேவையில்லை என்று சொல்லி விட்டேன். எனக்குப் பின்னல் இப்பதவிக்கு வருபவர்களுக்கு இவை அளிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டேன்.

**வேறு மாநிலங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டுள்ளனதா ?**

இல்லை, தமிழ்நாட்டில்தான் முதன் முதலாகக் குடிசைப்பகுதி







மாற்று வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. Metropolitan Developing Authority என்ற அமைப்பு கல்கத்தாவில் அமைக்கப்பட்டுள்ளது. பம்பாயிலும் ஓர் அமைப்பு உள்ளது. ஆனல், அவை வாரியம் போன்று செயல்படவில்லை.

கீழ்த்திசை நாடுகளுக்கு முதன் முதலாகத் திரு அரங்கண்ணல் அவர்கள் சென்றபொழுது பேரறிஞர் அண்ணு அவர்கள் அந்த நாடுகளின் வீட்டு வசதி அமைப்புத் திட்டங்களைக் கவனித்து வரும்படிச் சொன்ஞர்கள்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் திரு அரங்கண்ணல் அவர்கள் சிங்கப்பூர் தலைமையமைச்சருக்கு அந்த நாட்டு வீட்டு வசதி அமைப்புகளைப் பற்றித் தகவல் எழுதச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தார்.

சிங்கப்பூர் தலைமையமைச்சர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் வெற்றியுடன் நடைபெற வாழ்த்துக்களைத் தெரிவித்து அந்நாட்டு வீட்டு வசதிகளைப் பற்றிய புத்தகங்களை அனுப்பியுள்ளார்.

குடிசைப் பிரச்சினை அகில உலகப் பிரச்சினை என்பதையும் ஐசுவரிய நாடான அமெரிக்காவிலும் இப்பிரச்சினை இருக்கிறது என்பதையும் எடுத்துரைத்த திரு அரங்கண்ணல் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இப்பிரச்சினை இருப்பதை விவரிக்கிருர். அந்த நாடுகளில் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்று வரும் முறைகளையும் நன்கு அறிந்திருக்கிருர்.

ஏழு ஆண்டுகளில் சென்னை நகரிலுள்ள குடிசைகளை மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலுள்ள குடிசைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டவுடன் அடுத்து ஒவ்வொரு பெரு நகரமாக எடுத்துக் கொண்டு குடிசைப் பகுதி வாரியம் செயல்படும்.

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளைப் பற்றி முழு விவரங்களை அறிய மாநகராட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியே வாரியத் தலைவர் கடிதம் எழுதியுள்ளார்.

குடிசைப் பகுதி உள்ள இடம் தனியார் இடமா ? அரசு இடமா ? கோவில் நிலமா? மாநகராட்சி இடமா ? என்பதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, நேரடியாக ஒவ்வொரு வட்டத்திற்கும் சென்று தாமே நிலைகளை அறிந்து வருகிருர் வாரியத் தலைவர்.

இப்பொழுது உள்ள கணக்குகள் எல்லாம் 1964-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. ஆகவே, உடனடியாகப் புதிய தகவல்கள் திரட்டப்படுகின்றன.

குடிசைப்பகுதி மாற்றுவாரியத் தலைவர், ஒவ்வொரு பணிக்கும் காலம் வரையறுத்து உடனே செய்யவேண்டும் என்று சொல்லுகிருர்.

**'' இப்படிக் காலத்தை வரையறுத்துப் பணிகளை முடிக்க முடியுமா ? '' என்று வினவுகிறேம்.**

''எங்களைப் பொறுத்தவரையில் இரண்டு சொற்கள்—எங்கள் வேலையின் வேதாந்தமாக அமைந்துள்ளன. அவை சிக்கனம்—சீக்கிரம் என்பவை! எங்கள், அலுவலகத்தில் இந்தச் சொற்களை எங்கும் காணலாம்'' என்கிருர்.

புதிய வீடுகளைக் கட்டுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, ஒரே பகுதியிலும் வீடுகள் கட்டப் பல ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

வீடுகள் கட்டப் போதிய செங்கற்கள், கம்பிகள் உடனடியாகக் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. திருமழிசையிலுள்ள அரசு செங்கற் சூளை உற்பத்தித் திறனை மேலும் பெருக்கினுலும் பற்றுக்குறை ஏற்படும் போலுள்ளது. எனவே, நகருக்கு வெளிப்பகுதிகளில் ஒப்பந்தக்காரர்களே சூளை அமைத்துச் செங்கற்களை உற்பத்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர், இடம் ஒதுக்கித் தரவும் வாரியத் தலைவர் முயற்சி செய்து வருகிருர்.

சிலருக்கு இப்பொழுது வியாசர்பாடிப் பகுதியில் தற்காலிகக் குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது. வேறு குடியிருப்புகள் கட்டப்பட்டவுடன் அப்பகுதிகளுக்கு அனுப்பப்படுவர்.

குடிசைப் பகுதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழிற்சாலை அதிபர்களும் ஒத்துழைக்க வேண்டும். தமது தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருப்புகள் கட்டித் தருவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இராம. அரங்கண்ணல் குறிப்பிட்டார்.

கூவம் நதியின் கரையோரமிருந்த குடிசைகளைத் தவிர பக்கிங்ஹாம் கால்வாய்க் கரையில் 6,000 குடிசைகளுக்கு மேல் உள்ளன என்பதைத் தெரிவிக்கும் வாரியத் தலைவர், இப்பிரச்சினையில் வெற்றி காணப் பல்வேறு வகையில் அயராது பாடுபட வேண்டும் என்கிறார்.

அவர் சொல்லாமலேயே நாம் புரிந்து கொள்கிறோம்.

குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கத் தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட நிறுவனங்களும் உதவி அளிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார் இவர்.

பி.எல். 480 போன்றவற்றிலிருந்து அளிக்கப்படும் உதவியைக் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அளிக்க முயற்சி





செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்துவரும் திரு அரங்கண்ணல் அவர்கள், மைய அரசும் குடிசைகளை மாற்றியமைக்கப் பெருமளவில் உதவ வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

பத்து ஆண்டுகளுக்கு மேல் குடிசை வாழ்வோர் சங்கத் தலைவராக இருந்து பணியாற்றிய அரங்கண்ணல் அவர்கள் குடிசைவாழ் மக்களின் பிரச்சினைகளைப் பெரிதும் உணர்ந்திருக்கிறார். அதனால் எதையும் சிந்தித்துக் காலதாமதமின்றிச் செயல்படுத்த விரும்புகிறார்

இன்னும் எட்டு மாத கால அளவில் பல புதிய புதிய குடியிருப்புகள் உருவாகவிருக்கின்றன. குடிசைப் பகுதிகள் மறைய இருக்கின்றன.

இவ்வாண்டு, அரசு ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயுடன் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து 50 லட்சமும் சேர்த்து ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய பல குடியிருப்புகளை உருவாக்க்க் குடிசைப் பகுதி மாற்றுவாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

வீடுகள் கட்டத் தேவையான மரங்கள் பெற நம் காட்டிலாகாவிடம் கேட்கப்பட்டுள்ளது. போதாமைக்கு மத்தியப் பிரதேசக்

காட்டிலாகாவிடமும் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிசை என்ருல் இகழ்ச்சி ஒருகாலத்தில்! ஆனுல், இக் குடிசை கோபுரமாகிறது.



முதலமைச்சர் சொன்னதுபோல் ''இது ஏழு ஆண்டுத் திட்டம் மட்டுமல்ல ஏழை ஆண்ட திட்டம்.''

ஏழு ஆண்டுகளில் நகரில் வாழும் ஏழை எளிய மக்களின் குடியிருப்புப் பிரச்சினை முழுமையாகத் தீரும் என்பது உறுதி! உறுதி! உறுதி!

குடிசை மாற்று வாரியத் தலைவரின் சலியாத ஆர்வமும், அயராத உழைப்பும், அவர் பிரச்சினைகளை அணுகும் முறையும் நமக்கு இதைத்தான் சொல்கின்றன.



## குடிசைப் பகுதி மாற்று வாரியம் - யார்? எவர்?

### தலைவர்

குடிசைகளை மாற்றியமைக்கும் பணிகளுக்காகக் ''குடிசைப்பகுதி மாற்று வாரிய''த்தைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இதன் தலைவராகத் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர் திரு இராம. அரங்கண்ணல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மற்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

### அலுவல் தொடர்பற்ற உறுப்பினர்கள்.

திரு கி. மனோகரன், எம்.பி., திரு முரசொலி மாறன், எம்.பி., திரு வி. முனுசாமி, எம்.சி., திரு சைதை சம்பந்தம், திரு நடராஜன், எம். சி.

### அலுவல் தொடர்புள்ள உறுப்பினர்கள்.

தமிழ் நாடு அரசின் தொழிலாளர் நலத் துறைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர், பொது நல-குடும்ப நலத் துறைச் செயலாளர், ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைச் செயலாளர், சமூக நலத் துறைச் செயலாளர், நிதித் துறையின் பிரதிநிதி, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையாளர், நகரமைப்பு இயக்குநர் ஆகியோர்.



திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் 11—12—1882 அன்று பிறந்தவர் சி. சுப்பிரமணிய பாரதியார்.

1904-ஆம் ஆண்டில் மூன்று மாதங்கள் பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியுள்ளார். தமிழாசிரியரான அவருக்கு மாதம் பதினேழரை ரூபாய் சம்பளம்.

''விவேக பாநு', என்ற திங்களிதழில் பாரதியார் எழுதியுள்ள 'தனிமை இரக்கம்' என்ற கவிதை 1904-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியாகியுள்ளது. முதன் முதலில் அச்சில் வந்த கவிதை இதுதான் என்று சொல்லப்படுகிறது.

பாரதியாருக்கு திருமணமான பொழுது அவருக்கு வயது பதினைன்கு என்று அவர் மனைவியார் குறிப்பிட்டுள்ளார்.

சக்திதாஸன், காளிதாஸன் என்ற புனைபெயர்களில் பாரதியார் கட்டுரை எழுதியுள்ளார்.

1912-ஆம் ஆண்டில்தான் பாரதியார் பாஞ்சாலி சபதம். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலியவைகளை எழுதியுள்ளார்.

பாரதியார் தமது 'இந்தியா' பத்திரிகை சந்தா விவரத்தை இப்படி அறிவித்திருந்தார் —

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| *எல்லா கவர்ன்மெண்டாருக்கும் .. .. ..* | *50* | *0* | *0* |
| *ஜமீன்தார்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு .. ..* | *30* | *0* | *0* |
| *மாதம் ரூ. 200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு* | *15* | *0* | *0* |
| *மற்றவர்களுக்கு .. . .. .. ..* | *3* | *0* | *0* |



ஏம்பா! ஒரு டாக்சி வாங்கிடறதுதானே! ஏன் இதில் இவ்வளவு துன்பப்படணும்?
பணத்துக்கு எங்கேம்மா போவேன்?
1
இரண்டாயிரம் ரூபாய் இருந்தா தமிழ்நாடு டாக்சி டிரைவர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து புது டாக்சி வாங்கிடலாமே!
இரண்டாயிரமா? அடேயப்பா!
2
என்னப்பா இந்த வயசிலே வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவன் போல பேசறியே! நீ இப்போ எவ்வளவு சம்பாதிப்பே...!
தினம் நாலு, ஐந்து ரூபாய் கிடைக்கும்.
3


4
கொஞ்சம் சிரமப்பட்டுப் பணம் சேர்த்து முதலில் இரண்டாயிரம் கட்டினா டாக்ஸி தருவாங்க. அப்புறம் மீதிக் கடனை அடைக்கலாம்.
அப்படியாம்மா? அந்தக் கூட்டுறவு ஆபீசு எங்கே இருக்கு
5
சேப்பாக்கத்திலே இருக்கு! முதலில் இரண்டாயிரத்தைச் சேரு!
அம்மா சொன்னமாதிரி எப்படியாவது வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிப் பணம் சம்பாதிச்சு டாக்சி வாங்கிட றேன் இது உறுதி! வர்ரேம்மா!
சில ஆண்டுகளுக்குப் பின்.
6
யாரு?
நான்தாம்மா! வடிவேலு! அம்மா யோசனைப்படி டாக்சி வாங்கிட்டேன், நீங்கதான் முதல் சவாரி! வாங்க ஆபீசிலே விட்டுடறேன்!
FOR HIRE
கோ...



### பண்டைக் காலச் சிற்பக் கலைகளை வெளியிடுங்கள்

டிசம்பர் முதல் இதழ் முகப்பில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் கரகக்காவடி ஆட்டக்காரர்களைப் போட்டு அந்த ஆட்டங்களுக்கான விளக்கத்தைக் ''கிராமியக் கலைகள்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்ததைப் படிக்கப் படிக்கத்தேனமுதுபோல் இருந்தது. இதுபோன்ற தமிழகத்தின் பண்டைக்காலச் சிறப்புக் கலைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிட வேண்டுமென வாசகர்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

எம். டோம்ராஸ், ஊத்துக்குளி.

### அரசு இதழின் மேன்மை.

இரண்டு நாட்களுக்கு முன்பு திண்டுக்கல் சென்றிருந்தபோது 'தமிழரசு' வாங்கிப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. கவர்ச்சியான முகப்புடன் கருத்தைக் கவரும் கட்டுரை—கவிதைகளோடு சிறப்பாக இருக்கிறது. வெண்பாப் போட்டி இளம் கவிஞர்களுக்குத் துணை புரியும் மிக நல்ல ஏற்பாடு. அரசு வெளியிடக்கூடிய இதழ் இவ்வளவு அழகாக இருக்கிறதே என்று வியக்கும் வண்ணம் இருக்கிறது. ஏனெனில் வியாபார நோக்கத்துடன் வெளியிடப்படுகின்ற இதழ்களுக்கு எவ்விதத்திலும் குறை காண இயலாத விதத்தில் அவ்வளவு சிறப்பாக இருக்கிறது.

அழகனார், கோழிக்கோடு-2

### வார இதழாக வெளியிடுங்கள்:

டிசம்பர் 1-ஆம் நாள் இதழில் தமிழக முதல்வரின் 'இனியவை இருபது' பயணக் கட்டுரையின் வேகம், இனிமை என் நெஞ்சினை விட்டகல மறுக்கிறது. நன்மைகள் ஆயிரம் ஆயிரம் கட்டுரைத் துவக்கமே விறுவிறுப்பாக உள்ளது. தமிழரசை வார இதழாக வெளியிடுவீர்களா?

—இரா. செகனாதன், மதுரை-13.

### வாழ்விழந்தவர்கள் வாழ வழி செய்யும் தொழில்.

''வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத் தொழில்'' என்ற கட்டுரை, அபலைப் பெண்களுக்கும், அனாதையாகிவிட்டோம் என்று ஏங்கும் மகளிர்களுக்கும் தரமான வாழ்வை உண்டு பண்ண வழிசெய்கிறது. பெண்களைக் கொண்டே செயலாற்றி வரும் இச்சிறு தொழிலகத்தினுள் பணிபுரியும் மங்கையரின் பேட்டி மூலம் அவர்களது ஏழ்மை நிலை இத்தொழிலின் மூலம் ஓரளவு சீர்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. இதுபோன்ற சிறு தொழில்கள் பலவற்றைத் தமிழக அரசு ஆரம்பித்து வாழ்விழந்த பல பெண்களுக்கு வாழ வழி செய்து கொடுக்க முயற்சி செய்ய வேண்டுமெனத் தமிழரசு மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆ. மணிமேகலா, மதுரை-16

### உழவர் பெருமக்களுக்கு ஊக்கம் தரும் தமிழரசு

தமிழரசு 1-12-70 இதழில் வெளிவந்த 'நல்லெண்ணெய் விலை குறைய' என்ற கட்டுரை உழவர் பெருமக்களுக்குப் பயன் தருவதுடன், ''எள்'', பயிரிடும் காலம், அதற்குத் தேவையான மண், உரம் முதலியவைகளைப் பற்றியும், அதனைப் பாதுகாக்கும் வகையினையும் சீரிய முறையில் விளக்குகிறது. இதுபோன்ற கட்டுரைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிட்டு உழவர் பெருமக்களுக்கு ஊக்கம் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

புரு. சுந்தரம், நந்திவரம்.

### அயல் நாட்டவரின் தமிழ் ஆர்வம்.

'திரைகடலோடியும் தீந்தமிழ் தேடு' என்னும் கட்டுரையைப் படித்தேன். ஓர் அமெரிக்க மங்கை பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்து தமிழ் நாட்டின் தலைநகரில் தங்கி தமிழ் கற்பதை நோக்குங்கால் பிற நாட்டினருக்குத் தமிழ்மொழி மீதுள்ள ஆர்வமும், தமிழின் மேன்மையும் புலப்படுகிறது. அம்மையார் அளித்த பேட்டியின் மூலம் அவரின் உற்சாகமும், அவருக்குத் தமிழின் மேல் உள்ள ஆர்வமும் படிப்பவரை வியக்கச் செய்கின்றது. தமிழ் நாட்டில் தமிழை எதிர்ப்பவர்கள் இக்கட்டுரையினைப் படித்துத் தங்களின் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு வழிவகுத்த 'தமிழரசு'-க்கு மிக்க நன்றி.

கு. லீலா, மணியக்காரன்பட்டி.

### கவிஞர்களின் வேண்டுகோள்.


டிசம்பர் முதல் இதழில் இடம்பெற்ற ''காணக் குளிர்ந்ததே கண்'' ஈற்றடி வெண்பாக்கள் யாவும் பழந் தமிழ்ப் பாங்கும் புதுமை நோக்கும் உடையதாக அமைந்திருந்தன.

இவ்வெண்பாப் போட்டியில் வெளியிடத் தகுதி பெற்ற எல்லா வெண்பாக்களையும், பின்பு நிரல்படத் தொகுத்து வெளியிட்டால் மிகச் சிறப்புடையதாக இருக்கும். அவ்வாறு நூல் வடிவில் வெளியிட ஆவன செய்யுமாறு கவிஞர்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

அண்ணாதாசன், மானாமதுரை.




இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும் வீட்டுக்கும் நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9.


எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!
வெற்றிகள் குவிந்தால் போதுமா?
பசுமைப் புரட்சி பரவுகிறது!
புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!
தொழில்துறையில் புதிய, புதிய முயற்சிகள்!
சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!
வீட்டுமனைப் பட்டா!
தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!
எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!
அரசு ஆடவர் ஆரணங்கு
பொறுப்பை உணர்த்தும் சிவப்பு முக்கோணம்.
சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகரமுடிகிறதா?
நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது, மக்கள்தொகைப் பெருக்கம்தானே!
இதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?
அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்
இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.
வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.